இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 79 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 01, திங்கட்கிழமை 13.02.2017

முச்சந்தி முரளி



குளு குளு அறைக்குள்ளிருந்து சலுகைகளைக் கேட்பதுதான் உவையளுக்கு வேலையாப் போச்சு...

# ஐ.நாவின் கலப்பு நீதிமன்றப் பரிந்துரையை நீக்கும் அரசின் திட்டத்துக்கு கூட்டமைப்புப் போர்க்கொடி

## ஒருபோதும் இணங்கப் போவதில்லை என்கிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், பெப். 13

ஐ.நா. தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ள கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை மாற்றுவதற்குக் கொழும்பு அரசு முயற்சிகள் மேற்கொள்வதாக எமக்கு அறியக் கிடைத்துள்ளது. ஐ.நா. தீர்மானத்தில் எந்தவொரு மாற்றத்தையும் மேற்கொள்வதற்கு நாம் அனுமதிக்க மாட்டோம். அதற்கு ஒருபோதும் இணங்க மாட்டோம். அதனை முற்று முழுதாக எதிர்ப்போம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா.வில் புதிதாக இந்த ஆண்டு தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும் என்று சில தரப்பினர் கூறிவருகின்றனர். புதிய தீர்மானம் தேவையில்லை. 2015ஆம் >> 24

## கிழக்கு ஊர்வலம் அரசுக்கு மகிழ்ச்சி

*இப்படிக் கூறுகிறார் அமைச்சர் கிரியெல்ல*

யாழ்ப்பாணம், பெப். 13

எழுக தமிழ் ஊர்வலத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்துக்குச் சென்று ஊர்வலம் நடத்த முடியும். இது நாட்டின் சுதந்திரம். எழுக தமிழ் ஊர்வலம் குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். இன்று எமது நாட்டில் எவ்வளவு சுதந்திரம் உள்ளது? >> 24

## கோண்டாவில் விபத்தில் வயோதிபப் பெண் சாவு

யாழ்ப்பாணம், பெப். 13

மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கோண்டாவில், பலாலி வீதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் விபத்து இடம்பெற்றது. விபத்தில் படுகாயமடைந்த வயோதிபப் பெண் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் >> 04

# பொது வாக்கெடுப்புக்கு போகத் தேவையற்ற மறுசீரமைப்புக்கே சு.க. இணங்கும்



## புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றிய விடயத்தில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த திட்டவட்டம்

கொழும்பு, பெப்ரவரி 13

பொதுவாக்கெடுப்பைக் கோரும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் இடமளிக்கமாட்டாது. இந்த நிலைப்பாட்டிலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் தொடர்ந்தும் இருக்கின்றனர்.

இவ்வாறு அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். >> 24

## அதிகாரத்தை கொழும்பு அரசு மீளப்பெறுவதற்கு ஒட்டுமொத்த மாகாண சபைகளும் எதிர்ப்பு

கொழும்பு, பெப். 13

மாகாண சபைகளிடம் உள்ள சில அதிகாரங்களைப் பறித்து, நகர அபிவிருத்தி அதிகார சபையைப் பலப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைக்கு வடக்கு மாகாண சபையைத் தொடர்ந்து ஏனைய மாகாண சபைகளும் போர்க்கொடி உயர்த்தியுள் >> 22

## 13ஆவது நாள்

### தளராத துணிவோடு தொடர்கிறது பிலக்குடியிருப்பு அறவழிப்போர்



யாழ்ப்பாணம், பெப். 13

முடிவு காணாது போராட்டக் களத்திலிருந்து அரங்குவதில்லை என்ற திடமான நிலைப்பாட்டுடன் கேப்பாபிலவு மக்கள் முன்னெடுத்துள்ள போராட்டம் நேற்று 13 ஆவது நாளை எட்டியது. மண்மீட்புப் போராட்டத்தை வலுப்படுத்தும் நோக்குடன் நாளை செவ்வாய்க் கிழமை 10 மணிக்கு பிலக்குடியிருப்பில் சிறப்புக் கலந்துரையாடலுக்கு >> 24

## மக்களின் போராட்டக் களத்தில் 22 என்.பி.சிக்களைக் காணவில்லை

யாழ்ப்பாணம், பெப். 13

வடக்கு மாகாண முதலமைச்சர் உள்ளிட்ட 26 உறுப்பினர்கள் பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டக் களத்துக்கு நேற்றுச் செல்லவில்லை. 12 உறுப்பினர்கள் மாத்திரமே நேரில் சென்று ஆதரவு வழங்கினர்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களும், பிலக்குடி >> 24

## காணிகள் விடுவிக்கப்படும் வரை போராட்டத்தை முன்னெடுங்கள்

### புதுக்குடியிருப்பு மக்களிடம் வடமாகாண சபையினர் வலியுறுத்தல்

முல்லைத்தீவு, பெப். 13

'உங்களுடைய காணிகள் உங்கள் கைகளில் கிடைக்கும் வரைக்கும் இதே போல் அமைதியான முறையில் உங்கள் போராட்டத்தை முன்னெடுங் >> 24



## தகவல் அறியும் சட்டத்தில் காணாமற்போனோர் குறித்து அறிய 400 விண்ணப்பங்கள்

கொழும்பு, பெப். 13

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக காணாமற்போனோர் தொடர்பில் அறிவதற்கு இதுவரை 400 க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் ரங்க கலன் >> 04

## புதிய அரசமைப்பில் நிறைவேற்று அதிகாரத்தை மட்டுப்படுத்துவதற்கு வாய்ப்பு

*வழிகாட்டல் குழு உறுப்பினர் ஜயம்பதி எம்.பி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 13

புதிய அரசமைப்பு மக்கள் தீர்ப்புக்காக முன்வைக்கப்பட வேண்டும். அது தோற்கடிக்கப்பட்டால் அரசு தோல்வியுற்றதாகவே அமையும். >> 24




## தாயக மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாக லண்டனில் கவனவீர்ப்பு

லண்டன், பெப். 13

கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பில் காய்ந்து கருகி 13 நாள்களாக இடையறாது போராடி வருகின்ற மக்களுக்கு ஆதரவாக, லண்டனில் நேற்று மாலை மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் 3 மணி நேரம் >> 24

சுமந்திரன் கொலை முயற்சி விவகாரம்

# விக்கி சொன்னது பச்சைப் பொய்



யாழ்ப்பாணம், பெப். 13

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொலை முயற்சி விவகாரத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உண்மைக்குப் புறம்பான தகவலை வெளியிட்டு வருகின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மீதான கொலை முயற்சிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் 3 பேருக்கும் எதிராக கிளிநொச்சி நீதிவான் மன்றில் 85/17 என்ற வழக்கு இலக்கத்தில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் முதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

அந்த அறிக்கையின் ஒளிப்படப் பிரதி இந்தச் செய்தியில் இணைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக எதுவுமே நீதிமன்றுக்கு பொலிஸார் கூறவில்லை. போதைப் பொருள் வைத்திருந்ததாகத்தான் நீதிமன்றுக்குக் குறிப்பிட்டுள்ளார்கள். இதில் ஏதாவது உண்மை இருந்தால் அதை அவர்கள் நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தி இருக்க வேண்டும். ஆனால் தெரியப்படுத்தவில்லை என்று வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

அத்துடன், வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வின் போதும் இதே விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:

என்னைக் கொலை செய்யச் சிலர் முயன்றதாகப் பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இந்த நிலையில், நீதிமன்றில் அவ்வாறான தகவல் கூறப்படவில்லை என்று உண்மைக்கு புறம்பான தகவலை வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஏன் கூறுகிறார் என்பதை அவரிடம்தான் கேட்டு அறிந்துகொள்ள வேண்டும். இந்தக் குற்றச்சாட்டில் முன்னாள் போராளிகள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 3 தடவைகள் என்னைக் கொலை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்று கிளிநொச்சி நீதிவான் மன்றுக்கு பொலிஸார் எழுத்து மூலம் தகவல் கொடுத்துள்ளனர்.

என்னைக் கொல்வதற்கு வெளிநாட்டில் இருந்து பணம் மற்றும் அறிவித்தல் வந்திருந்ததாகப் பொலிஸார் கூறியுள்ளனர். அதற்கான சான்றாக சந்தேகநபர்களின் கணக்கிலக்கங்கள், அவர்கள் பயன்படுத்திய அலைபேசிகள் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டன. மன்றினால் அவை ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன. அவை நிரூபிக்கப்படும்வரை மேலதிகமாக என்னால் எவையும் கூறமுடியாது. இருப்பினும் சட்டத்தின் பார்வையில் தற்போது அவர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள்தான். ஆனால் குற்றவாளிகள் அல்ல. கைது செய்யப்பட்டுள்ள 5 பேரும் முன்னாள் போராளிகள் என்பதற்காக 12 ஆயிரம் முன்னாள் போராளிகளையும் குற்றம் சொல்ல வேண்டிய தேவையில்லை.

குற்றச்செயலில் ஈடுபட்டால் யாராக இருப்பினும் சட்டத்தின் நடவடிக்கை தொடரும். கவனமாக இருக்க வேண்டும்.

என்னைக் கொலை செய்ய முயற்சி செய்யப்பட்டது பொய்யானது என்று சந்தேகிக்க இடமில்லை. பொலிஸாரால் குறிப்பிட்டுள்ள தகவலும் அன்றைய காலத்தில் என்னுடைய செயற்பாடுகளும் ஒத்துவருவதால் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் எனக்கு அசௌகரியமான சூழல் உருவாகியுள்ளது. மக்களுடன் சுதந்திரமாகப் பேச முடியவில்லை. இந்தப் பாதுகாப்பை நானே விரும்பவில்லை. ஆனால் தற்போது பாதுகாப்பு அத்தியாவசியமானது - என்றார். (வ-4,10)

# 80களிலேயே இந்தியாவை மட்டுமே நம்பி செயற்பட்ட கொழும்பு

## அமெரிக்கப் புலனாய்வின் இரகசிய ஆவணத்தில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 13

இலங்கைப் படைகள் மீது தமக்குப் பெரியளவில் நம்பிக்கை இல்லை என்று இலங்கையின் முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல், அமெரிக்க அதிகாரிகளிடம் தெரிவித்ததாக, அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பிரிவின் (சிஐஏ) இரகசிய ஆவணம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் அரசு வீழ்ச்சியடைந்தாலோ, அல்லது கிளர்ச்சியாளர்கள் சுதந்திர தமிழ் தேசம் ஒன்றை உருவாக்கினாலோ, இந்தியா தனது படைகளை இலங்கைக்கு அனுப்பும் என்று தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

1980களில், சிஐஏயினால் தயாரிக்கப்பட்ட பல இரகசிய ஆவணங்கள் வெளியிட அனுமதிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து. இலங்கை தொடர்பாக சிஐஏ தயாரித்த பல இரகசிய ஆவணங்கள் தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

1986 செப்ரெம்பரில் இலங்கை தொடர்பாக சிஐஏ தயாரித்த இரகசிய அறிக்கையில், அப்போது ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசில் நிதியமைச்சராக இருந்த ரொனி டி மெல் அமெரிக்க அதிகாரிகளிடம் தனிப்பட்ட முறையில் வெளியிட்ட கருத்து இடம்பெற்றிருக்கிறது.

'அமைச்சரவையில் மிகவும் காத்திரமான உறுப்பினர்களில் ஒருவரும், நிதிசார் முடிவுகளை எடுக்கும் முக்கியமான பங்கை வகிப்பவரும், ஆனால் அரசியல் மற்றும் இராணுவ முடிவுகளில் கனதியாகத் தொடர்புபடாதவருமான 61 வயதான ரொனி டி மெல், அமெரிக்க அதிகாரிகளிடம் தனிப்பட்ட முறையில் பேசும் போது, தாம் இலங்கை ஆயுதப் படைகளிடம் சிறியளவு நம்பிக்கை மாத்திரமே கொண்டிருப்பதாகத் தெரிவித்தார் என்று அமெரிக்க தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொதுவாகவே, அமெரிக்காவை விமர்சிக்காமல் இருப்பதில் கவனமாக இருக்கும் ரொனி டிமெல் கடந்த ஏப்ரல் மாதம், தனது நாட்டுக்கு அருகில் இருக்கும் இந்தியா, ஏனைய சக்திகள் இலங்கைக்கு உதவுவதை விரும்பவில்லை என்று கூறியிருந்தார்' என்றும் சிஐஏ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, 'இந்தியா தனது படைகளை துரிதமாக விரிவாக்கிக் கொண்டிருப்பதாகவும், இலங்கையில் தலையீடு செய்வதற்கு அவற்றைப் பயன்படுத்தக் கூடும். தனது கடல் எல்லைகளை பாதுகாப்பதற்கே படைகளைப் பலப்படுத்துவதாக புதுடில்லி கூறியிருந்தாலும், இலங்கையில் அரசு வீழ்ச்சியடைந்தாலோ, அல்லது கிளர்ச்சியாளர்கள் சுதந்திர தமிழ் தேசம் ஒன்றை உருவாக்கினாலோ, இந்தியா தனது படைகளை இலங்கைக்கு அனுப்பும் என்று நாம் நம்புகிறோம்' என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (வ-4)

## 563 படைவிட்டோடிகள் ஒரே நாளில் சிக்கினர்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 13

இராணுவத்தை விட்டுத் தப்பியோடிய 563 படையினர் ஒரே நாளில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனிவிரத்ன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

படைவிட்டோடிகள் மீள இணைவதற்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்புக் காலம் கடந்த டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தது. இதன் பின்னர் 563 தப்பியோடிய படையினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இராணுவ வரலாற்றில் தப்பியோடிய பெரும் எண்ணிக்கையான படையினர் ஒரேநாளில் கைதுசெய்யப்பட்டமை இதுவே முதல்முறையாகும்.

அதேவேளை, பொதுமன்னிப்புக் காலம் முடிவடைந்த பின்னர், இதுவரையில் 1 அதிகாரி மற்றும் 960 தப்பியோடிய படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர் - என்றார். (வ-4)

## தவறான முடிவெடுத்த பல்கலை. மாணவி சாவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதலாம்வருடத்தில் பயிலும் மாணவி தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சிறுவிடயத்துக்கு மனஉளைச்சலுக்கு உள்ளாகி இவ்வாறு தவறான முடிவை அவர் எடுத்ததாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை சாவல்கட்டு பகுதியைச் சேர்ந்த மாணவியே உயிரிழந்தார்.

'குறித்த மாணவியின் சித்தியின் பிள்ளையைச் சுகவீனம் காரணமாகக் கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடாகியிருந்த நிலையில், சுடுதண்ணீர்ப் போத்தல் தவறுதலாக மாணவியால் தட்டப்பட்டு உடைந்துவிட்டது. அதற்கு மாணவியின் தாயார் ஏசினார். அதன் காரணத்தால் தான் மாணவி தவறான முடிவு எடுத்துள்ளார்.' என்று மாணவியின் உறவினர்கள் விசாரணையில் தெரிவித்தனர்.

மாணவி அவரது வீட்டில் அறை ஒன்றிலிருந்து தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்று மீட்கப்பட்டார். அவரது சடலம் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. விசாரணைகள் தொடர்கின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,றி)

# காணி விடுவிப்புக் குறித்து வடக்கு அரசு நடவடிக்கை

## பிலக்குடியிருப்பு மக்களிடம் தெரிவித்தார் அவைத்தலைவர்

முல்லைத்தீவு, பெப். 13

பிலக்குடியிருப்பு பொது மக்களின் காணிகள் விடுவிப்புத் தொடர்பாக இன்று காலை 10 மணியளவில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

பிலக்குடியிருப்பில் இராணு வத்தினர் கையகப்படுத்தி வைத்துள்ள தமது காணிகளை விடுவிக்கும் வரை தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொது மக்களை நேற்று நேரில் சென்று சந்தித்த போதே அவைத்தலைவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் பிரேரணைகள் தீர்வல்ல. அவை தீர்வுகளின் முன்னோடி. தீர்வுக்கான முன்னோடிகளை மாகாண சபை செய்திருக்கின்றது. தீர்வை வழங்குவது மாகாண சபை அல்ல. தீர்வை வழங்கச் சொல்லி வலுயுறுத்தலைத் தெளிவாகச் செய்திருக்கின்றோம். எடுக்கப்பட்ட தீர்மானங்களை உரிய தரப் பினருக்கு வலியுறுத்தும் கடப்பாட்டை நான் செய்திருக்கின்றேன். வடக்கு மாகாண சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் அறுபதுக்கு மேற்பட்டவை காணி விடுவிப்பை வலியுறுத்துவதாகவே இருக்கின்றன. நாளை (இன்று) காலை கலந்துரையாடுவதற்கு வரும்படி வடக்கு மாகாண சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளேன். மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதை அவர்களுடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் என்று அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார். (வ-7)

# பண்டாரவன்னியனின் சிலை மல்லாவியில் நேற்று உடைப்பு

முல்லைத்தீவு, பெப். 13

முல்லைத்தீவு - மல்லாவி நகரின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த மாவீரன் பண்டாரவன்னியனின் உருவச் சிலை நேற்றையதினம் சில விசமிகளினால் திட்டமிட்ட வகையில் அடித்துடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள மல்லாவி நகரின் மத்தியில் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனால் அமைக்கப்பட்டிருந்த மாவீரன் பண்டாரவன்னியனின் உருவச் சிலை நேற்றைய தினம் சில விசமிகளினால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்தச்சிலை அமைப்புத் தொடர்பில்மேற்படிசிலையை அமைக்க முயன்றபோதும் சிலர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். அதன் பின்னர் சிலை திறப்பு விழா தினத்தன்றும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

அத்துடன், மாவீரன் பண்டாரவன்னியனின் உருவச்சிலை போலியோ வந்தவர்களின் சிலைபோன்று உள்ளதே அன்றி கம்பீரம் கிடையாது என்ற சர்ச்சையும் வடக்கு மாகாண சபையில் எழுப்பப்பட்டிருந்தது. குறித்த சிலை திறப்பு வைபத்தைத் தடுக்குமாறும் ஒருவரால் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டது.

இந்த நிலையிலேயே நேற்றைய தினம் மாவீரன் பண்டாரவன்னியனின் உருவச் சிலையின் கையில் இருந்த வாள் அடித்து உடைக்கப்பட்டுள்ளதோடு ஒரு கை முழுமையாக உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-101)

# தமிழ் நா. உ. ஒன்றியம் நிறுவ ஈபிஆர்எல்எவ், ரெலோ ஆதரவு

## அமைச்சர் மனோ தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 13



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியம் அமைப்பதற்கான யோசனைக்கு, ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ரெலோ அமைப்புக்கள் ஆதரவுவழங்கியுள்ளதாக அமைச்சர் மனோகணேசன் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியம் உருவாக்குவதற்கான யோசனையை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் முன்வைத்து ஒரு மாதமாகியும் அது தொடர்பில் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று அமைச்சர் மனோ கணேசன் கடந்த 4ஆம் திகதி தனது முகநூலில் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ரெலோ ஆகியன, அமைச்சர் மனோகணேசனின் யோசனைக்கு இணக்கம் வெளியிட்டுள்ளன.

அனைத்துதமிழ்க்கட்சிகளும் கூட்டமைப்பும், கூட்டணியும் நாடாளுமன்றத்தில் கூடிப் பேசி, 'தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியம்' அமைக்க வேண்டும். இதன்மூலம் தமிழ் மக்களின் பொதுப்பிரச்சினைகள் தொடர்பில் அரச, எதிரணி சிங்களக் கட்சிகளுடன் பேசலாம் என்பதற்காகவே இந்த யோசனையை முன்வைத்திருந்தாக அமைச்சர் மனோ கணேசன் முன்னர் குறிப்பிட்டிருந்தார். (வ-5)

# பால்வினை நோய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, பெப்.13

வெளிநாட்டுத்தொழிலுக்காக பயிற்சிபெறுவோருக்கு எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்களைக்கட்டுப்படுத்தும் திட்டமொன்று நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்களைக்கட்டுப்படுத்தும் தேசிய திட்டத்துடன் இணைந்து, வெளிநாட்டுத் தொழில்களுக்காக பயிற்சி பெறுவோரை இலக்காகக் கொண்டு விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகமும், சுகாதார அமைச்சும் இணைந்து இதனை நடைமுறைப்படுத்துகின்றன. புலம்பெயர் தொழிலாளர்களின் தரத்தையும், சுகாதார ஆரோக்கியத்தையும் மேம்படுத்துவது திட்டத்தின் நோக்கமாகும்.

அதற்கான முதலாவது நடவடிக்கை பணியகத்தின் அலுவலகத்தில் இடம்பெற்றது. (ற)



# ரயிலில் சித்திரம் தீட்டிய வெளிநாட்டவர்கள் கைது

கொழும்பு, பெப்.13

ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த ரயில் ஒன்றின் பெட்டியில் சித்திரம் வரைந்த வெளிநாட்டவர்கள் இருவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அனுமதியின்றி காலி ரயில் நிலையத்துக்குள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நுழைந்த இரு பிரான்ஸ் பிரஜைகள், ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த பயணிகள் ரயில் ஒன்றின் பெட்டியில் சித்திரம் வரைந்துள்ளனர். அவர்கள் ரயில்வே பாதுகாப்பு சேவை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் காலி பிரதான மஜிஸ்திரேட் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அழிக்க முடியாத பெயின்ட் மூலம் சித்திரம் வரையப்பட்டுள்ளது என்றும், இதனால் ரயில் பெட்டிக்கு முழுவதும் பெயின்ட் பூசும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கும் ரயில்வே அதிகாரிகள், ரயில்வே திணைக்களத்துக்கு 64 ஆயிரத்து 440 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டனர். (ற)

# போலி நாணயத்தாள் அச்சகம் சுற்றிவளைப்பு

கொழும்பு, பெப்.13

ஹோரணை - கொடிகம் கொட பிரதேசத்தில் போலி நாணயத்தாள் அச்சகம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டது. சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய் யப்பட்டார்.

28 லட்சத்து 99 ஆயிரத்து 500 ரூபா பெறு மதியான போலி நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டன.

நேற்று முற்பகல் பொலிஸார் இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

106 ஐந்தாயிரம் நாணயத் தாள்களும், ஆயிரத்து 830 ஆயிரம் ரூபா நாணயத் தாள்களும், ஆயிரத்து 79 ஐந்நூறு ரூபாத் தாள்களும் கைப்பற்றப்பட்டன. (ற)

# அரசுக்குள் எதிர்ப்பு அதிகரிக்கின்றது

## ரஞ்சித் சொய்சா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப்.13

அரசுக்குள் நாளுக்கு நாள் எதிர்ப்புகள் அதிகரிக்கின்றன என்று கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார்.

இரத்தினபுரி - கொலோன்ன பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர விவகாரத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனம் அரச நிறுவனத்தை கொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

இதுதொடர்பாகஅரசுஅமைதியானகொள்கையைக்கடைப்பிடிக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)

# ஊடகவியலாளர் சத்தியமூர்த்திக்கு யாழ்ப்பாணத்தில் நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 13



வன்னி இறுதிச்சமர்க்காலத்தில் களப்பலியான ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் 8ஆவது ஆண்டு நினைவு நேற்றைய தினம் எழு கலை இலக்கியப் பேரவையின் போசகர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் இடம்பெற்றது.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வின் ஆரம்பத்தில் உருவப்படத்துக்கு ஈகச் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து அக வணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் சிறப்புரையாற்றினார். அத்தோடு எழு கலை இலக்கியப் பேரவையின் தலைவர் கை .சரவணன் நினைவுரையாற்றினார்.

இந்தநிகழ்வில் சத்தியமூர்த்தியுடன் பணியாற்றியவர்கள், ஊடகவியலாளர்கள் , உறவினர்கள் , நண்பர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (வ-101)

# இன மற்றும் மதவாத பேதம் இருக்கக்கூடாது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.13



பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளை அரசு தீர்க்கின்றதா, இல்லையா என்பது தொடர்பிலேயே அரசியலில் பேதம் இருக்க வேண்டும். இன மற்றும் மதவாத அடிப்படையில் பேதம் இருக்கக் கூடாது .

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் சாரணர் இயக்கத்தின் நூற்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நிகழ்வுகள் நடைபெற்றன. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இனவாதம் மற்றும் மதவாதம் இன்றி, இலங்கையர் என்ற அடையாளத்துடன் முன்னோக்கிச் செல்லும் நாடொன்றைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அனைத்து மகளிர் பாடசாலைகளிலும், சாரணர் இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும்.

எதிர்வரும் 5 ஆண்டுகளுக்குள் சாரணர் இயக்கத்தை நாடு முழுவதும் கொண்டு செல்வதுதொடர்பாகஅறிக்கை ஒன்றை சாரணர் இயக்கப் பணிப்பாளர்சமர்ப்பிக்கவேண்டும் - என்றார். (ற)

# வறண்ட காலநிலையில் மாற்றம்!

கொழும்பு, பெப்.13

தற்போது நாட்டில் நிலவும் வறண்ட காலநிலையில் நாளை முதல் சிறிய மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

வடக்கு, கிழக்கு, ஊவா மாணாங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் சிறிதளவு மழை பொழியக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சுற்றியுள்ள கடற்பிரதேசங்களில் கடும் காற்று வீசக் கூடும் என்று வானிலை அவதான நிலையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# மக்கள் பேரவை குறித்து அனந்தி சசிதரன் விசனம்

## சிலரின் சுயநல அரசியலுக்கு முதல்வர் விக்கி பயன்படுத்தப்படுகிறார் என்று அவர் சாடல்

யாழ்ப்பாணம், பெப். 13

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றோர் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனைப் பயன்படுத்தி தமது சுயநல அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளனரே தவிர, தமிழினத்தின் விடிவுக்கான எந்த அத்திவாரமும் இடப்படவில்லை என்பதே எனது கருத்து

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தனது உள்ளக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

எழுக தமிழ் நிகழ்வுக்காக மட்டக்களப்புக்குச் சென்றிருந்த அனந்தி, அங்கு தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். இந்த நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

இந்த எழுகதமிழ் நிகழ்வில் என்னை மேடையில் ஏற்றவில்லை. பேசுவதற்கு இடம்தரவில்லை. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றோர் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைப் பயன்படுத்தி தமது சுயநலப் பயணத்தை ஆரம்பித்துள்ளனரே தவிர தமிழினத்தின் விடிவுக்கான எந்த அத்திவாரமும் தமிழ் மக்கள் பேரவையிடம் இல்லை.

தமிழ் மக்கள் பேரவை சுயநலவாதிகளின் கூடாரமாக மாறிவிட்டது. இந்த எழுகதமிழ் நிகழ்வில் பெண்களுக்கு கதவடைப்பு நிகழ்ந்துள்ளது. காணாமற்போனோர் தொடர்பிலோ அல்லது மகளிர் தொடர்பிலோ ஒரு பெண்ணையாவது பேச அனுமதிக்கவில்லை. 60 வீதம் பெண்களுள்ள நாட்டில் ஒரு பெண்ணுக்கு பேசவோ மேடையில் சரிசமமாக அமரவோ வாய்ப்பில்லையென்றால் எதிர்காலம் எப்படியிருக்கும்?

எழுக தமிழ் நிகழ்வின் அறிக்கையில் காணாமற்போனோர் மற்றும் அரசியல் கைதிகள் மற்றும் தமிழ் மக்களுடைய தற்காலப் பிரச்சினைகள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருந்த காரணத்தால் கலந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலில் நானும் சக மாகாண சபை உறுப்பினர்களும் மற்றும் 35 பெண்களோடு யாழ்ப்பாணத்திலிருந்து எனது சொந்தச் செலவில் மட்டக்களப்புக்குப் பயணித்திருந்தேன். வடக்கு மாகாண முதலமைச்சர் முதன்மைப் பாத்திரமேற்ற இந்த நிகழ்வில் எங்களை வேண்டுமென்றெ திட்டமிட்டுப் புறக்கணித்தனர் என்ற ஓர் உணர்வு எனக்கு ஏற்பட்டது.

மேடையில் சகலரும் ஆண்களாகவே காணப்பட்டனர். பேசியவர்கள் அனைவரும் ஆண்கள். அங்கொரு ஆண்மேலாதிக்க மேல்வர்க்க சிந்தனையே தென்பட்டது. முதலமைச்சரும் இரு வாகனங்களில் வந்திருந்தார். நாம் வருவது தெரிந்தும் யாரும் கேட்டதுமில்லை. ஏறெடுத்தும் பார்க்கவுமில்லை.

இருந்தும் எமது தமிழினத்துக்காக காணாமற்போனோரின் சார்பாக கலந்துகொள்ள வேண்மென்பதற்காக பெண்களின் குரலும் அங்கு ஒலிக்க வேண்டுமென்பதற்காக ஏற்பாட்டாளர்களிடம் உதவிகேட்டும் அவர்கள் இணங்காத காரணத்தினால் எனது சொந்தச் செலவில் 35 பெண்களை யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்து வந்தேன்.

கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரேயொரு பெண் மாகாண சபை உறுப்பினர் நான் மட்டும்தான். அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து உணர்வோடு கலந்துகொண்டேன். எனக்கு மேடையில் அமரவோ பேசவோ சந்தர்ப்பம் தரவில்லை. பெண் என்ற ரீதியில் நான் பட்ட வலிகள் இவர்களுக்குத் தெரியுமா? மேட்டுக்குடி வர்க்க அரசியல் நடத்த தலைப்பட்டுள்ளனர். இந்த நிலையில் பேரவையில் பெண்ணுரிமை, பெண்களுக்கான சமவாய்ப்பு பற்றி எப்படி கதைப்பது? பெண்களுக்கு இடமில்லாத அந்தப்பேரவையில்எதிர்காலம் எவ்வாறிருக்கும்?- என்றார்.

இந்தச் செய்தி தொடர்பில் திருமதி அனந்தி சசிதரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, 'இவை யதார்த்தமாகப் பேசிய கருத்துக்கள் தான். இருப்பினும் இது தொடர்பில் உதயன் பத்திரிகைக்குத் தகவல் வழங்க விரும்பவில்லை என்று அவர் தெரிவித்தார். (வ-101)

---

விடுதலைப் புலிகள் மீளெழுச்சி

# ரி.ஐ.டியின் அறிக்கையால் வடக்கில் பொலிஸ் கண்காணிப்பு அதிகரிப்பு

## ஆங்கில ஊடகம் பத்தி

கொழும்பு, பெப். 13

உள்நாட்டுப் போர் முடிவடைந்து ஏழு வருடங்கள் கடந்து விட்ட நிலையில் விடுதலைப் புலிகள் மீண்டும் தலை தூக்குகின்றனர் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் பொலிஸ்மா அதிபருக்கு அறிக்கையிட்டுள்ளனர். இதனையடுத்து வடக்கில் குறிப்பாக கிளிநொச்சியில் கண்காணிப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வாறு கொழும்பின் ஆங்கில வார இதழின் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைப் பொலிஸின் பயங்கரவாத தடுப்புப் பிரிவான பயங்கரவாத விசாரணைப் பிரிவு(ரி.ஐ.டி) உள்நாட்டுப் போர் முடிவடைந்து ஏழு ஆண்டுகளுக்கு மேலாகின்ற நிலையில் விடுதலைப் புலிகள் மீளெழுச்சி பெறுவதாக கருதுகின்றது. பயங்கரவாத விசாரணை பிரிவின் தலைவராக பணியாற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக்க டி சில்வாவினால் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும் பயங்கரவாதத்தைக் கையாள்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஏனைய அமைப்புகள் இதனை நிராகரித்துள்ளன.

ஜனவரி 13ஆம் திகதி கிளிநொச்சியில் மூவர் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகள். கைது செய்யப்பட்டவர்களில் குலேந்திரன் என்பவரின் கிளிநொச்சி இல்லத்திலிருந்து விடுதலைப்புலிகளின் மீள்எழுச்சிக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

அவரின் வீட்டிலிருந்து கிளைமோரும் பின்னர் சி 4 வெடிபொருள்களும் மீட்கப்பட்டன . இவர்கள் மருதங்கேணி என்ற பகுதியில் முக்கிய பிரமுகர் ஒருவரை இலக்குவைக்க திட்டமிட்டிருந்தனர்என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனினும் குறிப்பிட்ட முக்கிய பிரமுகர் யார் என்பது குறித்து எந்த விவரமும் அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரும் கடந்த மூன்று மாதங்களாக விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வந்துள்ளனர். மாவீரர் தினத்தன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் கொடியை ஏற்றியுள்ளனர். கடந்த ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இவர்கள் கிளிநொச்சியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரைத் தாக்கி அவர்களின் ஆயுதங்களைக் கைப்பற்ற முயன்றுள்ளனர்.

மூன்று சந்தேகநபர்களும் விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மறைத்துவைக்கப்பட்டிருந்த பகுதிக்கு சென்று அவற்றை வெளியே எடுக்க முயன்றுள்ளனர். இவர்களைக் கைதுசெய்திருக்காவிட்டால் தாக்குதலொன்று இடம்பெற்றிருக்கலாம் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை கிடைத்த சில நாட்களுக்குள் இது குறித்து மேலதிக தகவல்களை வழங்குமாறு வடக்கு மாகாணத்துக்கு பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் சரத் குமாரவுக்குப் பொலிஸ்மா அதிபர் பணித்துள்ளார்.

கிளிநொச்சியில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அதிருப்தியடைந்துள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர விடுதலைப் புலிகள் புத்துயிர் பெறுவதற்காக நடவடிக்கைகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சியின் சிறப்பு விசாரணைப் பிரிவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, விடுதலைப்புலிகள் மீண்டும் தலைதூக்குகின்றனர் என்பதை புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். விடுதலைப்புலிகள் மீண்டும் ஒருங்கிணைகின்றனர் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. எங்கள் கண்களுக்கு அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் தென்படவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எங்களுக்கும் சில கரிசனைகள் உள்ளன. மறுவாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் குறித்து நாங்கள் எச்சரிக்கையுடன் உள்ளோம். மேலும் நாங்கள் விடுதலைப்புலிகளுடன் நெருக்கமான உறவுகளை வைத்திருந்த உள்ளூர் அரசியல்வாதிகள் குறித்தும் கவலை கொண்டுள்ளோம், அவர்கள் புலம்பெயர் அமைப்புகளிடமிருந்து நிதியைத் திரட்டி மாவீரர் குடும்பங்களுக்கு வழங்குவது எங்களுக்குத் தெரியும் என்று புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் - என்று அந்தப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

---

# புதிய அரசமைப்பில் கூட்டாட்சிச் சரத்துக்கள்

## பொது வாக்கெடுப்பு அதற்காகவே என்கிறது தேசிய சுதந்திர முன்னணி

கொழும்பு, பெப். 13

புதிய அரசமைப்புத் தொடர்பில் இந்த அரசு பொது வாக்கெடுப்பை நடத்தப் போகின் றது என்றால், புதிய அரச மைப்பில் கூட்டாட்சிக்கான சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதனை ஒரு போதும் அனுமதிக்க முடி யாது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் அறிக்கைக்கு மாறாகச் செயற்பட முனைகின்றார்.

இவ்வாறு விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்தது.

அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அந்தக் கட்சியின் பேச்சாளர் மொகமட் முசமில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு கூட்டுஅரசு மும்முரமாகச் செயற்பட்டு வரு கின்றது. புதிய அரசமைப்புக்கு பொது வாக்கெடுப்பு அவசியமில்லை. அவ்வாறான சர்ச்சைக்குரிய சரத்துக்கள் உள்ளடக்கப்பட வில்லை என்று ஒரு தரப்பும், பொது வாக்கெடுப்பு அரசுக்கு சவாலானதாக இருப்பி னும் அதனை வெற்றி கொள்வோம் என்று மற்றொரு தரப்பும் கருத்துக்களைக் கூறி வருகின்றன.

கடந்த 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில், விமல் வீரவன்ச எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த சபை முதல்வர் லக்ஸ்மன் கிரி யெல்ல, புதிய அரசமைப்பு பொதுவாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்றப் படும் என்று தெரிவித்திருந்தார். அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, வெளிநாட்டுப் பத்திரிகை யாளர்களுடனான சந்திப்பின்போது இதே கருத்தைத் தெரிவித்திருந்தார்.

பொது வாக்கெடுப்பு நடத்தப்படுவதாயின், புதிய அரசமைப்பில் கூட்டாட்சித் தீர்வு குறித்த சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றுதான் கருத வேண்டியுள்ளது. அப்படியாயின் இந்த அரசு கூட்டாட்சித் தீர்வை வழங்கி நாட்டைப் பிரிக்கப் போகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது உண்மையாயின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் வாக்குறுதியை மீறியுள்ளார் என்றுதான் அர்த்தம்.

அரச தலைவருக்கான தேர்தலின்போது, புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டால் பொது வாக்கெடுப்புக்குச் செல்ல மாட்டோம் என்று கூறியிருந்தார். ஆனால் தற்போது அந்த வாக்குறுதியை மீறியுள்ளார் - என்றார். (வ-5)

---



# கருணாவின் புதிய கட்சி உள்ளூராட்சி தேர்தலில் களமிறங்குமாம்

கொழும்பு, பெப். 13

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தனது கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்த லில் போட்டியிடும் என்று, கருணா அம்மான் என்று அழைக்கப்

>> 24

---

### காணாமற்போனோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூரிய தெரிவித்தார். காணாமற்போனோர் தொடர்பில் இந்தச் சட்டத்தின் ஊடாகக் கண்டறிவது கடினம் என்று சட்டத்தரணி ஜெகத்லியன ஆராச்சி சுட்டிக்காட்டினார்.

'தகவல் அறியும் உரிமைச் சட்டம் கடந்த் 3 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. இதுவரையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் அரச தகவல் திணைக்களத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றில் 400 க்கும் மேற்பட்ட விண்ணப் பங்கள் வவுனியாவில் இருந்து அனுப்பப்பட்டுள்ளன. காணாமற்போன தமது உறவுகள் எங்கே என்று கோரிய விண்ணப்பங்களே அதிகளவில் கிடைக்கப் பெற்றுள்ளன' என்று ரங்க கலன்சூரிய குறிப்பிட்டார்.

காணாமற்போனோர் தமது உறவினர்களைக் கண்டறிய வேண்டும் எனக் கோருவதாகவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் காணாமற்போனவர்களைக் கண்ட றிவது கடினம் என்றும் தகவல் அறியும் உரிமை தொடர்பான கருத்துரைகளை வழங்கும் சட்டத்தரணி ஜெகத் லியன ஆராச்சி சுட் டிக்காட்டினார். (வ-5)

### கோண்டாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்றுப் பிற்பகல் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கோண்டாவிலைச் சேர்ந்த செல்லையா நளாயினி (வயது - 64) என்பவரே உயிரிழந்தார். போக்குவரத்துப் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் பொலிஸாரைக் கண்டுவிட்டு பதற்றமடைந்தனால் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதுண்டார். இந்த விபத்திலேயே வயோதிப் பெண் படுகாயமடைந்தார் என்று விசாரணையில்தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம் பெற்ற உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. (வ-4,8)

# ஒட்டுசுட்டானில் நடமாடும் புலிகள்

## அச்சத்தில் மக்கள்

முல்லைத்தீவு,பெப்.13
முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள அம்பகாமத்தை அண்டிய பகுதிகளில் சிறுத்தைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால், அங்கு இதுவரையில் 14 மாடுகள் மாயமாகியுள்ளன. அந்த மாடுகளை சிறுத்தைப் புலிகளே பிடித்துச் சென்றுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மக்கள் தெரிவித்ததாவது:
'முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் மம்மில் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் சிறுத்தைப்புலிகள் நடமாடித் திரிகின்றன. இந்த சிறுத்தைப் புலிகளால் இதுவரையில் எமது வாழ்வாதார மாடுகளில் 14 மாடுகளை நாம் இழந்து விட்டோம்.

எமது முதன்மைத் தொழிலாளாக இரு தொழில்களே காணப்படுகின்றன. அதில் ஒன்று விவசாயம். மற்றையது கால்நடை வளர்ப்பு. இவ்வாறு மேற்கொள்ளும் இரு தொழில் முயற்சிகளும் இன்று பெரும் கேள்விக்குறியாகவே காணப்படுகின்றன. விவசாயம் மழையின்றி ஒருபகுதி அழிவடைகின்றது. எஞ்சியவற்றை காட்டு யானைகள் அழிக்கின்றன. இது ஒரு புறமிருக்க, தற்போது கால் நடை வளர்ப்பிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக எமது கிராமங்களை அண்டிய காட்டுப் பகுதியில் அண்மைக்காலமாக பெரிய சிறுத்தைப் புலிகள் நடமாடுகின்றன. இவ்வாறு நடமாடும் சிறுத்தைகளால் கடந்த ஒரு மாதத்துக்குள் மட்டும் 14 மாடுகளைப் பிடித்துச் சென்றுள்ளதாக பதியப்பட்டுள்ளது. இவ்வாறு பிடித்துச் செல்லப்பட்ட மாடுகள் கன்றுகள் அல்ல. ஒவ்வொன்றும் வாழ்வாதாரப் பசு மாடுகள். மிகப் பெரிய மாடுகளையும் பிடித்துச் செல்வதால் அவை சிறியரக புலிகளாக இருக்க முடியாது எனக் கருதுகின்றோம். இதன் காரணமாக மேய்ச்சல் நிலங்களில் இன்றி கால் நடைகளை திறந்துவிடவும் அச்சமாக வுள்ளது.

இவ்வாறு சிறுத்தைப் புலிகளால் மாடுகள் பிடித்துச்செல்லப்படுவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டு, எமது வாழ்வாதார கால்நடைகளின் உயிர்களை காக்க உதவுமாறு பிரதேச செயலகத்திலும் முறையிட்டுள்ளோம். இருப் பினும் இதுவரையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை -என்றனர்.

இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்ததாவது:
இந்தப் பகுதிகளில் சிறுத்தைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்து வாழ்வாதார மாடுகள் இதுவரை 15 பிடித்துச் சென்றுள்ளதாக அந்தப் பகுதி மக்களால் எனது கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது. அதனால் இது தொடர்பில் நான் உடனடியாகவே வன விலங்குகள் ஜீவராசிகள் திணைக்களத்துக்கும், வனவளத் திணைக்களத்தினருக்கும் எழுத்தில் முறையிட்டுள்ளேன்.

குறித்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய வன விலங்குகள் ஜீவராசிகள் திணைக்களத்தினர். அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தாமதம் அடைவதே இந்தப் பகுதி மக்களின் அவலம் தொடரக் காரணமாக அமைகின்றது. எனவே மீண்டும் ஒருமுறை குறித்த திணைக்களத்தினரிடம் தொடர்பு கொண்டு சிறுத்தைகளைப் பிடித்து சரணாலயத்துக்கு அனுப்புவது தொடர்பில் ஆலோசிக்கப்படுகின்றது.



இருப்பினும் அங்கு நடமாடுவது ஒரு சிறுத்தையா அல்லது பல சிறுத்தைகளா என்பதும் கண்டறியப்பட்ட பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயமுடியும்.

இருப்பினும் அந்தப் பகுதியில் காணப்படும் கால்தடங்களின் அடிப்படையில் ஒன்றுக்கும் மேற்பட்ட பல சிறுத்தைகள் நடமாடுவதாகவே அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும்.-என்றார். (ஐ-101)

# ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கவும்

## பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.12
கடந்த காலங்களில் வடமாகாணத்தில் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட போது புறக்கணித்து ஒதுக்கப்பட்டு வந்த, போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட வன்னி மாவட்ட ஆசிரிய உதவியாளர்களை 01.07.2013 இல் இருந்து இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கவும்.

இதற்கு வடக்கு மாகாண சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். -இவ்வாறு பாதிக்கப்பட்ட வன்னி ஆசிரிய உதவியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

'கடந்த 2005 ஆம் ஆண்டு வடமாகாணத்தில் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட போது, எமக்கான நியமனம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அந்தக் காலப் பகுதியில் எமக்கான நியமனங்கள் அப்போதைய அரசால் வழங்கப்படவில்லை. அதனைத் தொடர்ந்து, கடந்த 2009 ஆம் ஆண்டு வடமாகாணத்திலுள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனங்களின்போதும், நாம் அனைவரும் முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டிருந்தமையால், எமக்கான ஆசிரியர் நியமனம் மறுக்கப்பட்டு வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டோம்' - என்று பாதிக்கப்பட்ட வன்னி ஆசிரிய உதவியாளர்கள் தெரிவித்தனர்.

போர்க்காலம் உட்பட வன்னிப் பகுதிப் பாடசாலைகளில் 15 வருடங்களுக்கும் மேலாக ஆசிரியர் சேவையாற்றி வரும் தம்மை, இன்னமும் இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்காப்படாத நிலையில் தாம் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாகவும் கூறிக் கவலை தெரிவிக்கும் அவர்கள், தமக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதாகக் கூறி- ஏமாற்றி ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்ட 01.07.2013 ஆம் திகதியிலிருந்து என்றாலும், தம்மை இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்த்து, தமக்கான சேவைக்காலத்தைக் கணிக்க வடக்கு மாகாணசபை நடவடிக்கை எடுத்து உதவவேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக போர்ப் பிரதேசமான வன்னிப்பகுதிகளில் பல்வேறு கஷ்டங்களுக்கும் மத்தியில் ஆசிரியர்களாகச் சேவையாற்றிய தமது நிலை பற்றி, தற்போது வடமாகாணக் கல்வி அமைச்சராகவிருக்கும் அப்போதைய வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த, வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவுக்கு நன்றாகத் தெரியும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

15 வருடங்களுக்கும் மேலாக ஆசிரியர்களாகச் சேவையாற்றிய தமது வயதைக் கருத்திற்கொண்டு தம்மை 01.07.2013 இல் இருந்து இலங்கை ஆசிரியர் சேவை தரம்-3-II இற்குள் உள்ளீர்த்து, 2013 இல் இருந்து தமக்கான சேவைக்காலத்தைக் கணிக்க, வடக்கு மாகாண சபை, கல்வி அமைச்சு மூலம் உரிய நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட வன்னி ஆசிரிய உதவியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-426)

# தூய பசுப்பாலுக்குப் பதிலாக போசாக்கு உணவு விநியோகம்

அச்சுவேலி,பெப்.13
பாலர் முன்பள்ளிகள், ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி நிலையங்களில் உள்ள சிறுவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தூய பசுப்பால் விநியோக நிகழ்ச்சித் திட்டம் இந்த வருடம் நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் தூய பசுப்பாலுக்குப் பதிலாக, தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள பாலர் முன்பள்ளி மற்றும் ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி நிலையச் சிறுவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலக பிரிவுகளில் நெடுந்தீவு, வேலணை, சங்கானை பிரதேச செயலக பிரிவுகள் மூன்றும், சிறுவர்களுக்கான போசாக்கு உணவு விநியோக நிகழ்ச்சித்திட்டத்தில் இணைக்கப்பட்டு, போசாக்கு உணவு வழங்கப்படுகின்றது.

சிறுவர் அபிவிருத்தி அமைச்சின் வழிப்படுத்தலின் கீழ், பாலர் முன்பள்ளி மற்றும் ஆரம்பச் சிறுபராய அபிவிருத்தி நிலையங்களில் பயிலும் சிறுவர்களுக்கு இதுவரை காலமும் தூய பசுப்பால் வழங்கப்பட்டு வந்தது. வருடாந்தம் ஒன்பது மாதங்களுக்கு வாராந்தம் ஐந்து தினங்களுக்கு இந்தப் பசுப்பால் வழங்கப்பட்டு வந்தன.

எனினும் தூய பசுப்பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் இந்த வருடம் நிறுத்தப்பட்டு, போசாக்கு நிலை வீதம் குறைபாடான பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள சிறுவர்களுக்குப் போசாக்கு உணவு வழங்கப்படுகின்றது. (ஐ-11)

# வெவ்வேறு விபத்துக்களில் அறுவர் காயம்

திருமலை,பெப்.13
திருகோணமலை மாவட்டத்தில் மூன்று பொலிஸ் நிலையங்களில் இடம் பெற்ற வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில், இரண்டு சிறுவர்கள் உட்பட ஆறு பேர் படுகாயமடைந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை இலிங்க நகர் பகுதியில் வீட்டின் கதவைத் திறந்து வீதிக்கு ஓடி வந்த சிறுவன், முச்சக்கர வண்டியுடன் மோதி வீசப்பட்ட நிலையில், வடிகானில் விழுந்து படுகாயமடைந்தார். முச்சக்கர வண்டியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீட்டுக்கு முன்னால் நின்று கொண்டிருந்த சிறுவன், மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார்.

திரியாய் கடற்படை முகாமுக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் சென்றவர், மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகியதால் விபத்துக்குள்ளானார்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அத்துடன் மொறவெவ -கோமரங்கடவல மற்றும் நிலாவெளி பொலிஸ் பிரிவுகளில் இடம் பெற்ற விபத்துக்களிலும்; காயமடைந்தவர்களும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்துக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-45)

# மக்களின் முறைப்பாடுகளுக்கு உடனடித்தீர்வு வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜன.13
யாழ்.மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் முறைப்பாட்டுப் பிரிவுக்கு, இதுவரை நூறுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தொடர்ந்தும் மக்கள் தமது முறைப்பாடுகளை எமக்கு வழங்கினால், நாம் விரைவில் அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்போம் என்று யாழ் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் இணைப்பதிகாரி த.வசந்தசேகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் காணப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளால் ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து, பொது மக்கள் பாதுகாப்பைப் பெறுவதற்கும், விரைவில் சிறந்த தீர்வுகளை அவர்கள் பெறுவதற்கும் கடந்த வருடம் ஜூன் மாதம், யாழ் மாவட்டத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் ஊடாக புதிய முறைப்பாட்டுப் பிரிவு உருவாக்கப்பட்டது.


இந்த முறைபாட்டுக்குழு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகனின் நேரடி கண் காணிப்பின் கீழ் இயங்கி வருகின்றது. முறைபாட்டுக்குழு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று, அவற்றுக்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாவனையாளர்கள் வர்த்தக நடவடிக்கைப் பாதிப்புக்களிலிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கு எங்களால் உருவாக்கப்பட்ட முறைப்பாட்டுப் பிரிவைத் தொடர்பு கொள்ள முடியும். 0213219000,0217755455 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

தபால் மூலமாக முறைப்பாடு செய்வதானால் மாவட்ட இணைப்பதிகாரி, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை, யாழ். மாவட்டச்செயலகம் எனும் முகவரியின் ஊடாகப் பதிவு செய்ய முடியும்.

மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்வதாயின் jaffd.caa@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாகவும் தொடர்பு கொள்ள முடியும்.-என்றார். (ஐ-8)

# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கா.சந்திரராசா
(S.L.A.S)
(ஓய்வு நிலை பிரதேச செயலர்
வலி. மேற்கு சங்கானை நிகழ்ச்
சித்திட்ட இணைப்பாளர்
U.N.H.C.R)
திதி:திருதியை (13.02.2017)

தோற்றம்
30.01.1939

மறைவு
19.02.2003

ஈரேழு வருடங்கள் ஏகியே சென்றதப்பா
இன்னமும் உம் பிரிவு எமை விட்டு நீங்காதாம்
ஊரோடு உறவோடு உவப்பாகவே நடந்து
உத்தமராய் நற்பெயரை உயர்வாகவே பெற்று
சீரோடும் சிறப்போடும் நாம் வாழ வழிகாட்டி பொன்னாலை சிறி
வரதன் பாதத்தில் சேர்ந்திரே ஐக்கியமாய்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பறாளாய் வீதி, சுழிபுரம். குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



பிறப்பு
1965.06.28

இறப்பு
2017.01.14

## அமரர் சிவராசா ரோகினி


குடியிருந்த கோயிலின் கோபுரமே நீ சாந்ததேனம்மா ?
நீயில்லா வாழ்வதனில் நித்தமும் தடுமாறுகின்றோம்
சித்தம் கலங்கி நாம் பித்தாகிப் போகின்றோம்
அழகான வாழ்வதனை அரங்கேற்றம் செய்துவிட்டு
அற்பனமாய் வாழ்ந்த நீ சொற்பனமாய் போனதேனோ ?
காற்றடைத்த வாழ்விதென்று காற்றினிலே கலந்தாயோ
வழியின்றி தவிக்கின்றோம் வழி சொல்வாய் எம் தாயே.

எமது குலவிளக்கின் திடீர் மறைவுச்செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவி செய்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியைகளைத் தெரிவிப்பதுடன் இன்று (13.02.2017) திங்கட் கிழமை நடைபெறும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியில் கலந்து கொள்வதுடன் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.
(J 8088) (14,17,18)
குடும்பத்தினர்.
077 711 2098

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
27.09.1946

மறைவு
10.02.2012

## அமரர் குப்புசாமி ஞானசேகரம்

(ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர் (LO)

திதி:- அபரபக்க திருதியை

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாச நிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தோம்
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஐந்து ஆண்டுகள் பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் அவர் பாசம் போற்றியே பணிந்திடுவோம்.

"சந்திரவாசா"
துன்னாலை தெற்கு, கரவெட்டி
குடும்பத்தினர்.

# 2015ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற அரச ஊழியர் ஒன்றியக் கூட்டம்

2015ஆம் ஆண்டில் ஓய்வூதியம் பெற்ற அரச ஊழியர்களின் ஒன்றியத் தின் அறிவுறுத்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் ஓய்வு பெற்ற சகலரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக் கான 3/2016 சுற்றறிக்கை ஊடாக பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இந்த அநீதி சம்பந்தமாக, 2015 ஓய் வூதியம் பெற்ற அரச ஊழியர்களின் ஒன்றியம் என்ற அமைப்பு கண்டியில் உருவாக்கப்பட்டுள்ளது. (வ-5)

## மரண அறிவித்தல்

### ச. கைலாயபிள்ளை

(ஓய்வு பெற்ற அதிபர்- வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்)



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குழி கச்சேரி கிழக்கு ஒழுங்கையினை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட ச. கைலாயபிள்ளை 11.02.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசலட்சுமியின்(ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் மாணிக்கவாசகர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மூத்ததம்பி (கனடா), கமலாதேவி ஆகியோரின் சகோதரரும் ஜெயதேவி (ஓய்வுபெற்ற பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்), சத்தியதேவி, காலஞ்சென்ற சிறிதேவி மற்றும் நிர்மலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகநாதன் (ஓய்வுபெற்ற பிரதி விவசாயப் பணிப்பாளர்), குமாரதாஸ் (பிரான்ஸ்).ஆகியோரின் மாமனாரும் பிருந்தாபன் (பரி.யோவான் கல்லூரி) கோகுல், நிவேத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2017) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12 மணியளவில் வேலணைசாட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.திருமதி ஜெயதேவி ஜெகநாதன்
(ஓய்வு பெற்ற பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்)
திரு.ச. மாணிக்கவாசகர்
(ஓய்வு பெற்ற ஆசிரியர் வேலணை)
கச்சேரி கிழக்கு ஒழுங்கை
(சந்தன மாதா கோயில் ஒழுங்கை)
077 037 7390

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் வஸ்தியாம்பிள்ளை
சூசைப்பிள்ளை செபஸ்ரியன்

பிறப்பு
04.12.1928

இறப்பு
14.01.2017

பிரிவு என்பதும் மரணம் என்பதும்
வாழ்வின் நியதி என்பதை உணர்ந்தும்
அறிந்திருந்தும் உம்பிரிவு மட்டும்
ஏன் எம்மால் ஏற்றுக்கொள்ளவும்
சகித்துகொள்ளவும் முடியவில்லை
என்று புரியவில்லை - ஒரு திங்கள் கடந்தும்
பல நினைவுகளை பகிர்கின்றோம் - இன்று
நாம் மட்டும் அல்ல எம் சுற்றத்தாரும் கூட - நீர்
சகோதரனாக தோழனாக தந்தையாக தாத்தாவாக
வழிகாட்டியாக துணையாக இருந்த நிமிடங்களை
எம் ஆயுட் காலம் வரை உம் நினைவுகளினதும்
அறிவுரைகளினதும் ஆதரவுடன் வாழ கனத்த
இதயத்துடன் முயற்சிக்கின்றோம்.

(J.8139)(13)

அ.ஒ.விநோதராஜா
இல.27, மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம்.
077 291 9254 / 021 222 8195

என்றென்றும்
உம் நினைவுகளுடன் வாழும்:
மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# வவுனியா அறநெறிப் பாடசாலைகளுக்கு அமைச்சின் உதவிகள் கிடைப்பதில்லை

## சிவதர்சன் குருக்கள் குற்றச்சாட்டு

வவுனியா, பெப்.13

வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கு, இந்து கலாசார அமைச்சு மற்றும் மாவட்ட கலாச்சார, பிரதேச கலாசார உத்தியோகத்தர்களிடமிருந்து எந்தவித உதவிகளும் கிடைப்பதில்லை. இவ்வாறு வவுனியா சாதான சன்மார்க்க பீடாதி சிவதர்சன் குருக்கள் தெரிவித்தார்.

செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சண்முகபுரம் கிராமத்திலுள்ள அறநெறிப் பாடசாலையில் கற்றல் உப கரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சண்முகபுரம் பகுதியிலுள்ள அறநெறிப் பாடசாலையில் 32 வறிய மாணவர்கள் கற்று வருகின்றனர். வறுமையில் கூலிவேலைகளை எதிர்பார்த்துத் தமது வாழ்வாதாரத்தை நகர்த்திச் செல்லும் இந்தப் பகுதி மக்களின் பிள்ளைகள் அறநெறிக் கல்வியைக் கற்று வருகின்றனர். சமயத்தை வளர்ப்பதற்கு அறநெறிக் கல்வியை மாணவர்களுக்குப் புகுத்த வேண்டும். தற்போதுள்ள சிறுவர்களுக்குத் தேவாரம் படிக்கத் தெரியாது. இவற்றைச் சிறுவர்களுக்கு கற்பிப்பதற்கு போதிய வசதிகள் கிடைப்பதில்லை. இந்தப் பகுதியில் அறநெறிப்பாடசாலைக்கான கட்டடம் இல்லை. இந்து கலாசார அமைச்சால் வவுனியா மாவட்டத்துக்கு எவ்வித உதவிகளும் கிடைப்பதில்லை. மாணவர்களுக்கு இந்து சமயத்தைக் கற்பிப்பதற்கு போதியளவு உதவிகள் கிடைக்கவில்லை. அறநெறிப் பாடசாலைக் கல்வியை மண் தரையிலிருந்து கற்று வருகின்றார்கள்.

இந்தப் பகுதியிலுள்ள கிராமங்களுடன் ஒப்பிடுகையில் சண்முகபுரம் பகுதியிலுள்ள அறநெறிப்பாடசாலையிலே அதிகளவான மாணவர்கள் கற்றுவருவது மகிழ்ச்சிக்குரியது-என்றார்.

சண்முகபுரம் அறநெறிப் பாடசாலையின் ஆசிரியர் திருமதி. ஞ. சிவானி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் வசதியற்ற 32 மாணவர்களுக்கு வன்னி மாவட்ட சிறிலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்க இணைப்பாளர், தனது சொந்த நிதியிலிருந்து கற்றல் உபகரணங்கள், விளையாட்டு கழகத்துக்கான உபகரணங்கள், அறநெறிப் பாடசாலையின் ஆரம்பகட்ட நிதிக்கு ஒரு தொகைக் காசோலை என்பவற்றை வழங்கி வைத்தார். (ஐ)

# அங்காரக சங்கடகர சதுர்த்தி

யாழ்ப்பாணம், பெப். 13

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய அங்காரக சங்கடகர சதுர்த்தி உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 6 மணியிலிருந்து இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்தனர். (வ-5)

# விபத்தில் இருவர் காயம்

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள், முன்னால் கடமைக்குச் சென்று கொண்டிருந்த பொலிஸ் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு உத்தியோகத்தரின் மோட்டார் சைக்கிளை மோதியது. இதில் இரு மோட்டார் சைக்கிள்களும் நிலை குலைந்தன. அவற்றில் பயணித்த இருவரும் கீழே விழுந்து காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கொடிகாமம் நாவலடி ஏ-9 வீதியில் இடம்பெற்றது. (ஐ)

# உயிரிழந்தவர்களையும் பேராளர் மாநாட்டுக்கு அழைக்கிறது மு.கா.

மட்டக்களப்பு,பெப்.13

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 27ஆவது பேராளர் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு உயிரிழந்தவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கின்ற அதேவேளை, உயிருடனிருக்கும் ஸ்தாபக உறுப்பினர்களை கட்சி நிர்வாகம் மறந்துள்ளது - இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூத்த போராளிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக 2015ஆம் ஆண்டு வரை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட கொள்கைப் பரப்புச் செயலாளரும், ஸ்தாபக உறுப்பினரும், தற்போதைய கிழக்கு மாகாண முதலமைச்சரின் இணைப்பாளர்களில் ஒருவருமான ஏறாவூரைச் சேர்ந்த யூ.எல். முஹைதீன் பாவா தெரிவித்ததாவது:

கட்சியில் உள்ள நிர்வாக ஒழுங்கீனம் காரணமாக பேராளர் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு உயிரிழந்தவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஏறாவூர்ப் பிரதேசத்தில் இருந்து 35 பேருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களில் பலர் இறந்துள்ளனர். ஆனால், இன்னமும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களாகவும், மூத்த ஸ்தாபக உறுப்பினர்களுமாகவுள்ள பலருக்கு பேராளர் மாநாட்டில் கலந்து கொள்ளும் அழைப்புக் கிடைக்கவில்லை. இதை ஒரு அகௌரவமாகவும் , ஒழுங்கீனமாகவும் பார்க்க வேண்டியுள்ளது.

நான் 1987ஆம் ஆண்டிலிருந்து கட்சியின் ஸ்தாபக உறுப்பினராகவும், மூத்த உறுப்பினராகவும் இருந்து வருவதோடு, இதுவரை மறைந்த தலைவரின் காலம் தொடங்கி தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்டோர் தலைமையில் இடம்பெற்ற அத்தனை பேராளர் மாநாட்டிலும் கௌரவமாக அழைக்கப்பட்டு கலந்து கொண்டு வந்திருக்கின்றேன்.

ஆனால், விசித்திரமாக இந்த முறை எனக்கு பேராளர் மாநாட்டில் கலந்து கொள்ளும் அழைப்புக் கிடைக்கவில்லை. என்னைப் போன்ற பலரும் இவ்வாறு அழைப்புக் கிடைக்காமையால் அதிருப்தியோடு உள்ளனர். பேராளர் மாநாட்டுக்குச் செல்லும் போதெல்லாம் அதிலே கலந்து கொள்பவர்களின் விவரங்கள் விரிவாகப் பெறப்படுகின்றன. அவ்வாறிருக்கும் போது எவ்வாறு அது தவறுதலாக விடப்பட முடியும்.


இது தொடர்பாக மாவட்ட அமைப்பாளர், உயர்பீட உறுப்பினர்கள், கட்சியின் தலைவர் ஆகியோரிடம் விசாரித்த போது தவறுதலாக அழைப்பு விடுபட்டுள்ளதாகக் கூறியதோடு, பெருமனதோடு வந்து பேராளர் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறும் கூறினர். இது பொறுப்பற்ற ஒரு அசிரத்தையான பதிலாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அழைப்பிதழோடு இணைக்கப்பட்டுள்ள அட்டையை எடுத்து வருபவர்களே மாநாட்டு மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படுவர் என்று குறிப்பிட்டிருக்கும் போது எவ்வாறு நாம் அங்கு சென்று மூக்குடைபட்டு நிற்பது-என்றார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 27 ஆவது பேராளர் மாநாடு பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் நாடளாவிய ரீதியிலிருந்து அழைக்கப்பட்ட கட்சி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

முன்னாள் அமைச்சரும் அக்கட்சியின் தவிசாளராகவும் இருந்த பஷீர் சேகுதாவூத் கட்சியை பிளவுபடுத்தும் நோக்கில் செயற்பட்டு வருவதாகக் கூறி, அவர் கடந்த 4 ஆம் திகதி, கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டமைகுறிப்பிடத்தக்கது.(ஐ-46)



# மின்னொழுக்கால் வீட்டுடன் உடமைகளும் எரிந்துநாசம்

## ஏழைக் குடும்பம் நிர்க்கதியில்

மட்டக்களப்பு,பெப்.13

ஏறாவூர், ஆயிஷா பள்ளி குறுக்கு வீதியிலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட மின்னொழுக்கால் வீட்டுடன் வீட்டுடமைகளும், ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணமும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வீட்டிலிருந்த எவருக்கும் காயங்களோ, உயிராபத்தோ ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளர் தெரிவித்ததாவது:

"எனது இரண்டு வயது மகனும் நானும் அயல் வீட்டுக்குச் சென்றிருந்தோம். வீட்டுப்பக்கம் புகை மூளுவதைக் கண்டு ஓடி வந்து பார்த்த போது வீடு எரிந்து கொண்டிருந்தது. எனது தந்தை 1990 ஆம் ஆண்டு கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட பின்னர் மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில், நான் மத்திய கிழக்குக்குச் சென்று வீட்டுப் பணிப்பெண் வேலை செய்து உழைத்த பணத்திலேயே இரண்டு அறைகள் கொண்ட அந்த வீட்டைக் கட்டினேன். தீயினால் வீட்டிலிருந்த சகல உடமைகளும் எரிந்துள்ளதோடு, வேறு ஒருவருக்கு வழங்குவதற்காக வைத்திருந்த சீட்டுப் பணம் 1 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா தாள்களும் எரிந்து அரைகுறையாகக் கிடக்கின்றன" -என்றார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# முச்சக்கரவண்டி விபத்தில் மாணவர்கள் இருவர் சாவு

கொழும்பு,பெப்.13

முச்சக்கரவண்டி விபத்தொன்றில் பாடசாலை மாணவர்கள் இருவர் உயிழந்துள்ளனனர். இந்தச்சம்பவம் வெலிபென்னமீகமவில் நேற்று இடம்பெற்றது.

முச்சக்கரவண்டியொன்றும், பாரவூர்தியொன்றும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த முச்சக்கர வண்டியில் பாடசாலை மாணவர்கள் ஐவர் பயணித்துள்ளனர். விபத்தில் முச்சக்கரவண்டி கவிழ்ந்தது. அதில் பயணித்த இரு மாணவர்கள் உயிரிழந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

Institute Of Junior
Spoken & Written Elocution
Best Wishes
Vallai Road,Chankanai
(எலக்கியூசன்) பரீட்சையில் 100புள்ளிகளைப் பெற்றவர்களைப் பாராட்டுகின்றோம்.


B.கருணிகா

J.அருஸ்ணஜா

சு.தாரணி

த.ரக்ஷிகா

I.அஷ்வின்

S.அக்ஷிகா

A.ஜனனி

P.கஜானன்

றி.ஷேன்

* Elocution Classes எலக்கியூசன் வகுப்புக்கள் (Spoken & Written)
* English Classes 4 வயதிலிருந்து - 10 வயதுவரை

20.02.2017 இற்கு முன் உடன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஜீப்பிற்றர் முன்பள்ளி கட்டடம் வல்லை வீதி,சங்கானை.
077 711 2074
இல.926, பருத்தித்துறை வீதி,நல்லூர். (சட்டநாதர் கோயில் முன்)
077 1999 630

## தரம் 5 பரீட்சைத் தொடர் - 05

### பாராட்டுப் பெறுவோர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பூரண அனுசரணையுடன் கடந்த டிசம்பர் மாதம் ஒளி அரசி மூலம் இடம்பெற்ற தரம் - 5 தபால் மூலமான பரீட்சைத் தொடரில் உயர் புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் புலமைசாலிகளை ஒளிஅரசி, புலமைச்சுடர் குழுமத்தின் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| பெயர் | பாடசாலை | புள்ளிகள் |
|---|---|---|
| சு. அஷ்வதன் | வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | 190 |
| கி. பூவிஷா | வ/விபுலாநந்தாக் கல்லூரி | 189 |
| ந. அக்ஷிகா | | 189 |
| ஜெ. நிதர்ஷன் | வ/ பூந்தோட்டம் மகா வித்தியாலயம் | 188 |
| க. கோகுலன் | வ/விபுலாநந்தாக் கல்லூரி | 188 |
| பி. லக்ஷன் | யாழ். இந்து ஆரம்ப பாடசாலை | 188 |
| ம. கனிஷா | வ/ பூந்தோட்டம் மகா வித்தியாலயம் | 187 |
| த. நிலுக்சன் | வ/ பூந்தோட்டம் மகா வித்தியாலயம் | 187 |
| ஜெ. கலையகன் | | 187 |
| ச. அறிவாளன் | வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | 187 |
| ச. நேருஜன் | வ/ தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 186 |
| கே. டிலக்சிகன் | வ/ சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை | 186 |
| கி. தனுஜா | வ/ அட்வெண்டிஸ் சர்வதேச பாடசாலை | 185 |
| அ. எழிலன் | கிளி/முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம் | 185 |
| க. கோபிகா | வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | 185 |
| அ. வியூட்சன் | வ/பன்றிக்கெய்தகுளம் அ.த.க. பாடசாலை | 178 |
| சி. அபிரேகா | யா/ஏழாலை மேற்குசைவசன்மார்க்க வித்தியாலயம் | 178 |
| டோ. பிரதீப் | வ/பன்றிக்கெய்தகுளம் அ.த.க. பாடசாலை | 178 |
| ஆர். ஜுதுர்ஷன் | கொ/விவேகானந்தாக்கல்லூரி | 178 |
| ம. ரித்திகா | வ/விபுலாநந்தாக் கல்லூரி | 177 |
| வி. ரோகித்பிரசாத் | வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | 177 |
| ச. கலையரசன் | மு / பொன்னகர் தமிழ் வித்தியாலயம் | 177 |
| க. மதுமிலன் | வ/ சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை | 177 |
| ச. பவிஷன் | வ/ இலங்கைத் திருச்சபை த.க.பாடசாலை | 177 |
| ப. கிருஷா | வ/விபுலாநந்தாக் கல்லூரி | 176 |
| யூ. யேரிஸ்கா | வ/ இலங்கைத் திருச்சபை த.க.பாடசாலை | 176 |
| பை.ருக்கையாஹானி நாத்தாண்டியா | | 176 |
| சி. அகார்ஷன் | வ/ தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 176 |
| ச. நிக்ஷயா | கொ/கணபதி இ.ம.ம.வித்தியாலயம் | 176 |
| ஜெ. சங்கவி | வ/ சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை | 175 |
| ச. டிலக்ஸிஜா | வ/ இலங்கைத் திருச்சபை த.க.பாடசாலை | 175 |
| எ. றொஹான் | கொ/ றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம் | 175 |
| ர. பாவனா | வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | 175 |
| எ. இரேனா | கொ/நல்லாயன் பெண்கள் பாடசாலை | 175 |
| சி. ராகவி | கொ/சைவ மங்கையர் வித்தியாலயம் | 174 |
| தி. கானுஜா | யா/யாழ்.இந்துக்கல்லூரி | 174 |
| தயாணி | கொ/ புனித அன்னம்மாள் ம.மகா வித்தியாலயம் | 173 |

உங்கள் பிள்ளைகளும் பரீட்சையில் பங்குபற்ற விரும்பினால் 0718628351 என்ற இலக்கத்திற்கு அழைக்கவும்.

# ஆசிரிய ஆலோசகர் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அங்கீகாரம்

யாழ்ப்பாணம்,பெப்.13
நீண்டகாலமாக அமைச்சரவையால் அங்கீகரிக்கப்படாது இருந்த, புதிய ஆசிரிய ஆலோசகர் சேவைப்பிரமாணக் குறிப்பு, அமைச்சரவை யால் கடந்த 8 ஆம் திகதி நாடா ளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சங்கப் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்த அமைச்சரவை அனுமதியைத் தொடர்ந்து, ஆசிரிய ஆலோசகர் சேவைப் பிரமாணக் குறிப்பு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். அதன் பின்னர் பொதுச் சேவை ஆணைக் குழுவால் சுற்றறிக்கை மாகாணக் கல்வியமைச்சர்களுக்கும், மாகாணக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். ஆசிரிய ஆலோசகர்களைப் புதிய சேவையில் உள்வாங்கும் நடவடிக்கைகள் மாகாணங்கள் தோறும் முன்னெடுக் கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## டெங்குநோய் இறப்புக்களைத் தடுப்போம்

பாவனையில் இல்லாத (Commode)கொமேட்களைத் திறந்த நிலையில் பேணாது மூடிய நிலையில் பேணுவோம். அவற்றுக்கான நீர்வழங்கல் பெட்டிகளின் மூடிகளைச் சரியான முறையில் பொருத்தியிருப்பதனை உறுதிசெய்வோம். சூழலில் நீர் தேங்காது பேணுவோம்.
"நீர் உள்ள இடங்களில் நுளம்பு பெருகாது தடுப்போம்"

**தகவல் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - யாழ் .மாநகரசபை**

# போக்கறுப்பு வயல் நிலங்களில் எதிர்பார்த்த விளைச்சல் இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.13
வடமராட்சி கிழக்கு போக்கறுப்பு வயல் நிலங்களில் இந்த முறை மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை எதிர்பார்த்த விளைச்சலை விவசாயிகளுக்கு ஈட்டிக் கொடுக்கவில்லை.
இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட இந்தப்பகுதி வயல்நிலங்கள், பிரதேச செயலகத்தால் துப்புரவு செய்யப்பட்டு நெற்செய்கைக்காக உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.
விடுவிக்கப்பட்ட இந்த வயல்களில் செய்கையாளர்கள் நெற்செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.
எனினும் போதிய மழை வீழ்ச்சி இன்மை மற்றும் வறட்சி போன்ற காரணங்களால் எதிர்பார்த்த விளைச்சலை விவசாயிகள் பெற்றுக் கொள்ளவில்லை என்று பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-17)

# குடும்பப் பெண் எரிந்த நிலையில் சடலமாக மீட்பு

சாவகச்சேரி,பெப்.13
தனிமையில் வாழ்ந்த குடும்பப் பெண் ஒருவர், எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி கனியார் ஒழுங்கையில் இடம்பெற்றது.
கணவன் மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்த அந்தப் பெண், கணவனும் இரண்டு பிள்ளைகளும் வெளிநாடு (உகண்டா) சென்ற பின்னர், தனியாக வாழ்ந்து வந்துள்ளார். அங்கிருந்து அவரை அழைப்பதற்கான ஏற்பாடுகளை அவரது கணவனும், பிள்ளைகளும் மேற்கொண்டுள்ளனர். அதனால் குடியிருந்த வீட்டை விற்றுவிட்டுச் செல்வதற்காக வீட்டுக்கு வர்ணமும் தீட்டியுள்ளார்.
இந்த நிலையில் நேற்று முன்தினமிரவு தனது கணவரையும், மகனையும் அங்குள்ளவர்கள் தாக்குகின்றனர். அது தனது மனதில் தெரிவதாக அயலவர்களிடம் வாய் புலம்பியுள்ளார்;.
அன்றைய தினம் இரவு 10 மணியளவில் அவர் திடீரென கத்தும் சத்தம் கேட்டு ஓடிச் சென்று பார்த்த போது, உடல் முழுவதும் தீப்பற்றி எரிந்த நிலையில் அவர் காணப்பட்டார். முதலுதவிகளை மேற்கொண்ட போதிலும் அவர் முற்றத்தில் வீழ்ந்து சாவடைந்தார் என்று அயலவர்கள் தெரிவித்தனர்.
அதே இடத்தைச் சேர்ந்த யோகநாதன் சிறிகலா ( வயது 57) என்னும் குடும்பப் பெண்ணே சாவடைந்தவராவார்.
வீட்டு முற்றத்தில் 5 லீற்றர் கொள்ளளவு கொண்ட எண்ணெய் கொள்கலன்க்ள் காணப்பட்டன.
இது தொடர்பாக பிரிவு கிராம அலுவலர் மற்றும் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அங்;கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (ஐ-9)

# சைவப்புலவர் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,பெப்.13
அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் இளம் சைவப் புலவர், சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம், 22 ஆம், 23ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன என்று சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.
இந்தப் பரீட்சை நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைகள் யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளார். (ஐ)

# சண்டைக் கட்சியாக மாறிவிட்டது மு.கா.

## அமீர் அலி குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.13
சமூகக்கட்சி என்ற நிலையில் இருந்து, முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, சண்டைக் கட்சியாக மாறிவிட்டது.
இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளரும், பிரதியமைச்சருமான அமீர் அலி தெரிவித்தார்.
தம்பலகாமம் அல் ஹிக்மா கல்லூரியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'சட்டியோடு புலால் நாற்றம் போய்விட்டதென்று, கிராமத்துப் பழமொழியொன்று உண்டு. அதேபோன்று முஸ்லிம் காங்கிரஸும், மர்ஹூம் அஷ்ரபின் மறைவோடு முடிந்து விட்டது.
அந்தக் கட்சிக்குள்ளே ஏகப்பட்ட பிரச்சினைகள், பல்வேறு நெருக்கடிகள் தலை விரித்தாடுகின்றன.
தலைவரில் பிரச்சினை, செயலாளரில் பிரச்சினை, தவிசாளரில் பிரச்சினை - அடிதடி நடக்குமளவுக்கு, பிரச்சினைகள் பூதாகரமாகக் கிளம்பியிருக்கின்றன.
மர்ஹூம் அஷ்ரப்போடு இணைந்து அந்தக் கட்சியை நாங்கள் தூக்கிப்பிடித்தவர்கள். தற்போது சமூகத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு, அவர்களுக்கு நேரமில்லாத நிலை வந்து விட்டது. முஸ்லிம்களின் நலன்காக்கும் சங்கமெனக் கருதப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ், கடந்த காலங்களில் நமது பிரச்சினைகளை தீர்க்கத் தவறிவிட்டது. அவர்கள், அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தயாராகவுமில்லை. அவர்களுடைய கவனமும், கரிசனையும், தங்களை வளர்ப்பதிலேயே குறியாக இருக்கின்றது.
'நாரே தக்பீர்' என்று சொல்லி ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் பின்னர், 'ஆதவன் எழுந்து வரப் போகின்றான்' என்று கூறிய போது, அவர்களை நம்பினோம், ஏமாந்தோம்.
இந்த நிலவரத்தை மாற்றுவதற்காகவே, கட்சியை நாங்கள் உருவாக்கினோம். எமது தலைமை, நீங்கள் எதிர்பார்ப்பதை விட ஒருபடி மேலே சென்று ஓடோடி உதவி செய்து வருகின்றது' - என்றார். (ஐ)

**Hotel JK றைஸ்**

எமது அறிமுகம் மீன் பிரைட் றைஸ் 130/ = இற்கு மேலும் அனைத்துப் பிரைட் றைஸ், கொத்து வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

**JK றைஸ் - தும்பளை வீதி, பருத்தித்துறை.**
**076 371 3128**

**பொதுக்கூட்டம்**



யாழ் மாவட்ட மாட்டுவண்டிச் சவாரிச் சங்க பொதுக்கூட்டம், புதிய நிர்வாகம் அமைத்தல் என்பன நடைபெறும் என்பதை சவாரி சங்க அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**காலம் : 19.02.2017**
**இடம் : புன்ே ாலைக்கட்டுவன் நாச்சிமார் கோயில் மண். டபம்.**

மாட்டுவண்டிச் சவாரிச் சங்கம்.

**அன்பு வெளியீடு யாழ்ப்பாணம் - 2017**
**Anpu Publication - Jaffna - 2017**



ஆசிரியர் வேலுப்பிள்ளை அன்பழகன் அவர்களுடன் இணைந்த ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த சேவையாக ஆரம்பக் கல்வி மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்திக்கும் தரம் - 5 மாணவர்களின் புலமை பரசில் வழிகாட்டலுக்குமான பாடநூல்கள் பரீட்சை வினாத்தாள்கள் வெளிவந்துள்ளன.

தரம் -5 புலமைப்பரிசில் வழிகாட்டி
தரம் - 4 கணித நுண்ணறிவு நூல்
தரம் - 3,4,5 - கட்டுரைத்தொகுப்பு
தரம் - 5 சுற்றாடல்
தரம் - 5 கணித நுண்ணறிவு நூல்
தரம் - 5 சுற்றாடல் செயல் நூல்
தரம் - 1,2 -செயற்பட்டு மகிழ்வோம் பயிற்சி வினாத்தாள்
தரம் - 3,4 பயிற்சி வினாத்தாள்
தரம் - 5 பாடசாலைகளுக்கான புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 15
தரம் - 5 பிரத்தியேக வகுப்புக்களுக்கான புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை வினாத்தாள் - 15

**இவற்றை பெற விரும்புவோர் சுயமாக விபரங்களை தயாரித்து விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

MR. V.Rajenthiran
**Director**
Anpu Publication,
55/42; Hindu College Road,
Jaffna.

தொடர்புகளுக்கு
0776569660 / 0212223581

**பணிப் பெண் தேவை**

சிறிய குடும்பம் ஒன்றுக்கு .வீட்டில் தங்கி யிருந்து. பணிபுரிவதற்கு பணிப் பெண் தேவை.
**தொடர்பு :- 077 262 6944,076 636 7091**

**தேவை MANAGER**

சர்வதேச English பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் English College இற்கு ஒரு பெண் Manager தேவை. A/L வரை படித்திருக்க வேண்டும். தகுந்த சம்பளம் வழங்கப்படும. C.V உடன் நேரில் வரவும்

BRITISH COLLEGE OF ENGLISH
192.Navalar Road,Jaffna.
**021 222 0384, 077 880 3887**

# புதிய நிர்வாக சபை தெரிவு

வலிகாமம் கல்வி வலயத்தின் நலன்புரிக் கழகத்துக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் வலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நடப்பாண்டின் புதிய நிர்வாக சபை உறுப்பினராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.
கழகத்தலைவராக ஆ.இளங்கோவும், செயலாளராக க.சிவகரனும், பொருளாளராக ந.இராசநாயகமும், உபதலைவராக ந.ஸ்ரீகணேசனும், உப செயலாளராக ச.சிவாணந்தராசாவும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் திருமதி கஜபதி காயத்திரி, க.ஆதித்தன், சு.கதிர்காமநாதன், சி.தயாபரம், சி.திருப்பதிகாந்தன், சி.கோகுலன், திருமதி.சி.சர்மிளா, திருமதி.இரத்தினேஸ்வரி இராஜா, திருமதி ஜனனி ஆனந்த செல்வேஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

## சிகிச்சை பெற்று வீடு திரும்பிய மூதாட்டி மயங்கி விழுந்து சாவு

தென்மராட்சி, பெப்.13
வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய மூதாட்டி மயக்கம் ஏற்பட்டு உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மட்டுவில் கிழக்கில் நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.
கடந்த செவ்வாய்க்கிழமை நெஞ்சுவலி ஏற்பட்டு மூதாட்டி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பெற்று நேற்றுமுன்தினம் வீடு திரும்பினார். வீடு திரும்பியவர் இரு மணி நேரத்தில் மயங்கி விழுந்தார். அவரை சாவ கச்சேரி வைத்திய சாலையில் சேர்த்தபோது அவர் ஏற்கனவே உயிரிழுந்து விட்டார் என்று மருத்துவர் கள் தெரிவித்தனர். மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த அப்புத்துரை பூபதி (வயது-66) என்பவரே உயிரிழந்தார். (ற-9)

## விபத்தை ஏற்படுத்திய இருவருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், பெப்.13
விபத்தை தடுக்காமை, வாகனத்தை அவதான மின்றிச் செலுத்தியமை, விபத்துத் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்காமை, காயமடைந்தவர் தொடர்பாக வைத்தியசாலைக்கு அறிவிக்காமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரின் கைது செய்யப்பட்ட இருவருக்கு 33ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டது.
இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றுக்கு விசாரணைக்கு வந்தது. குற்றவாளிகள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிமன்று ஒருவருக்கு 21 ஆயிரத்து 500 ரூபாவும் இரண்டாமவருக்கு 11 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ற-ரி)

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

# உரிய நடைமுறை பின்பற்றப்படாது பணிப் பெண்களாக செல்லும் பெண்கள்

## பராமரிப்பற்ற சிறார் எண்ணிக்கை அதிகரிக்கின்றது எனச் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, பெப்.13
முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் வறுமையைப் பயன்படுத்தி அங்குள்ள சிறு குழந்தைகளின் தாய்மார்கள் வெளிநாடுகளுக்குப் பணிப் பெண்களாக அனுப்பப்படுகின்றனர். பணிப் பெண்களை அனுப்பும் முகவர்கள் சரியான முறையில் ஆவணங்களைத் தயாரிப்பதில்லை. மாவட்டத்தில் தாயின் பராமரிப்பற்ற, பாதுகாப்பற்ற குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.
"வெளிநாடு செல்லும் சிறு குழந்தைகளின் தாய்மார்கள் தமது குழந்தைகளை தமது பெற்றோர், உறவினர்களிடம் விட்டுச் செல்கின்றனர். 8 வயதுக்குட்பட்ட குழந்தைகளே பெரும்பாலும் இவ்வாறு விடப்படுகின்றனர். சிறார்கள் மீது உரிய கரிசனை காட்டப்படாத நிலை இதனால் ஏற்படுகின்றது.
சிறுவயதுக் குழந்தைகளை உடைய தாய் வெளிநாடுகளுக்குப் பணிப் பெண்களாகச் செல்ல முடியாது என்ற சட்டம் நடைமுறையில் உள்ளது. பிரதேச செயலரின் சம்மதக் கடிதம் பெற்றிருந்தால் மட்டுமே பணிப் பெண்களுக்கான நுழைவிசைவு வழங்கும் நடைமுறையும் உள்ளது. இந்த நடைமுறைகள் பின்பற்றப் படாமலேயே முல்லைத்தீவு மாவட்டப் பெண்கள் வெளிநாடுகளுக்குப் பணிப் பெண்களாக முகவர்களால் அனுப்பப்படுகின்றனர்" என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டினர்.
"வெளிநாட்டுக்குப் பணிப்பெண்களாக செல்லும் பெண்கள் பிரதேச செயலாளரிடம் இருந்து சம்மதக் கடிதம் பெற்றாலே நுழைவிசைவு வழங்கப்படும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது. கடந்த ஆண்டு மட்டும் முல்லைத்தீவிலிருந்து 30க்கும் மேற்பட்ட பெண்கள் எந்த விதமான அனுமதியும் இல்லாமல் அரபு நாடுகளுக்குச் சென்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. பிரதேச செயலாளர்களின் பரிந்துரை இன்றி எவ்வாறு நுழைவிசைவு வழங்குகின்றது என்பது தெரியவில்லை.
முல்லைத்தீவிலிருந்து வெளிநாடுகளுக்குச் போனவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துக்கு அனுப்பப்பட்டது. மேலதிக நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று எழுத்தில் கோரினோம். எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை"- என்று பிரதேச செயலர்கள் குறிப்பிட்டனர்.
இதேவேளை, வெளிநாடுகளுக்குச் சென்று பணி புரியும் பணிப்பெண்களின் குடும்பம் தொடர்பில் போலியான அறிக்கையை வழங்கும் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அதுகோரள சில தினங்களுக்கு முன் தெரிவித்தார்.
வெளிநாட்டு வேலைகளுக்காக செல்பவர்கள், 5 வயதுக்கும் குறைவான பிள்ளைகள் இருக்கின்றார்களா? இல்லையா என்பது தொடர்பில் உறுதிப்பத்திரம் வழங்க 75 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபா வரை பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பணம் பெறும் 25 முதல் 30 அதிகாரிகள் தொடர்பில் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-10)



கிளிநொச்சி, ஊற்றுப்புலத்தின் இரு கிராமங்களை இணைக்கும் பாலம் மிகவும் சேதமுற்ற நிலையில் உள்ளது. அந்தப் பாலத்தைச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் தற்போது முறிப்புக்குள நீர் பாலத்தைச் சூழ்ந்துள்ளதால் பணிகள் இடை நிறுத்தப்பட்டன. பாலம் சேதமுற்றுள்ளதால் வள்ளுவர் பண்ணை, நாவலர் பண்ணை மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். பாலத்தை விரைந்து சீரமைக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-6)

## கட்டுப்பாட்டு விலையில் அரிசி விற்பதில் சிக்கல்

### வர்த்தகர்கள் தெரிவிப்பு

தென்மராட்சி, பெப்.13
இறக்குமதி செய்யப்பட்டு கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்ட அரிசி யாழ்ப்பாணத்துக்கு இன்னமும் வரவில்லை. தனியாரிடம் அதிக விலைக்குக் கொள்வனவு செய்தே விற்பனை செய்கின்றோம். கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்வதானால் அரிசியை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப வேண்டும்.
இவ்வாறு வர்த்தகர்கள் தெரிவித்தனர்.
காலபோக அறுவடை முடிந்து அரிசி சந்தைக்கு வர ஆரம்பித்துள்ளது. தென்மராட்சியில் அரிசி ஒரு கிலோ 100 ரூபாவுக்கு அதிக விலையில் விற்கப்படுகின்றது. அரிசி, சீனி போன்றவற்றுக்கு அரசு கட்டுப்பாட்டு விலையை அறிவித்தாலும் வர்த்தக நிலையங்களிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் அதிக விலைக்கே விற்கப்படுகின்றன. கட்டுப்பாட்டு விலைகள் அறிவிக்கப்பட்டாலும் அதற்குரிய பிரதிபலிப்பு மக்களை வந்து சேர்வதில்லை என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.
இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்கு மட்டுமே அரசு கட்டுப்பாட்டு விலை அறிவித்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இன்னமும் யாழ். மாவட்டத்துக்கு வரவில்லை. தனியாரிடம் கொள்வனவு செய்தே அரிசி விற்பனை செய்கின்றோம்.
இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை அரசு யாழ். மாவட்டத்துக்கு அனுப்பி எமக்கு வழங்கினால் நாம் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்ய முடியும். அரசும், யாழ். மாவட்ட செயலகமும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்- என்று வர்த்தர்களும், கூட்டுறவுச் சங்கங்களும் தெரிவித்தன. (ற-9)

## சுகாதார தொழிலாளரை பகிர்ந்தளிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.13
வடக்கு மாகாண வைத்திய சாலைகளில் பணியாற்றும் மேலதிகமாகவுள்ள சுகாதார தொழிலாளர்களை புதிதாக அமைக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
வடக்கு மாகாணத்தை பொறுத்தவரை வைத்தியசாலைகளில் மேலதிகமாக 600 க்கும் மேற்பட்ட சுகாதாரத் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். 2005ஆம் ஆண்டு தொண்டர்களாக கடமையாற்றிய தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன. வடக்கு மாகாணத்தில் புதிதாக பிராந்திய வைத்தியசாலைகள் அமைக்கப்படுகின்றன. வைத்தியசாலைகளின் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஏதுவாக மேலதிகமாக கடமையாற்றும் தொழிலாளர்களை இணைத்துக் கொள்ளப்படுவர். பதவி வெற்றிடங்கள் இருக்கும் பட்சத்தில் புதிதாக தொழிலாளர்கள் உள்வாங்கப்படுவர்- என்று அவர் குறிப்பிட்டார். (ற-8)

## பாடசாலை செல்லாத சிறாரை மீள இணைக்கும் செயற்றிட்டம்

### வலி.கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ளது

அச்சுவேலி, பெப்.13
வலி.கிழக்குப் பிரதேச செயலக பிரிவில் அடையாளம் காணப்பட்ட 11 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள உபகிராமங்களில் பாடசாலை செல்லாத, இடைவிலகிய சிறார்களை பாடசாலையில் இணைக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
பெற்றோர், சமூக ஆர்வலர்களுக்கு சிறார்களுக்கான கட்டாயக் கல்வி தொடர்பான விழிப்புணவும் ஏற்படுத்தப்படவுள்ளது.
வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள 31 கிராம அலுவலர் பிரிவுகளில் புத்தூர் மேற்கு ஜே/273 கலைமதிக் கிராமம், கோப்பாய் வடக்கு ஜே/262 கொப்பிளாவத்தை கிராமம், வாதரவத்தை ஜே/280 பெரிய பொக்கணைச் கிராமம், அச்செழு ஜே/279 கொலணி, வேவியாபுரம் கிராமம் நவக்கிரி ஜே/275 வடக்கு வெளி கிராமம், உரும்பிராய் தெற்கு ஜே/265 செல்வபுரம், யோகபுரம் கிராமம், ஆவரங்கால் மேற்கு ஜே/277 மந்திரிமனைக் கிராமம், கோப்பாய் மத்தி ஜே/261, காந்தி கிராமம், புத்தூர் கிழக்கு ஜே/278 குருநாதர் மத்தி கிராமங்கள், நீர்வேலி வடக்கு ஜே/269 பன்னாலை கம்பன்புலம் கிராமம், இருபாலை தெற்கு ஜே/257 ஆனந்தபுரம் கிராமம் ஆகிய 11 கிராம அலுவலர் பிரிவுகளில் சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லாமல் இருப்பது இனங்காணப்பட்டுள்ளது.
அடையாளம் காணப்பட்ட கிராமங்களுக்குச் செல்லும் அலுவலர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் இருக்கும் சிறுவர்கள், பாடசாலையில் இருந்து இடைவிலகிய சிறுவர்களை கிராமத்தில் உள்ள பொது நிறுவனங்களின் நிர்வாகிகள் துணையுடன் அடையாளம் கண்டு, பாடசாலைகளில் இணைத்துக் கல்வியைத் தொடர வசதி ஏற்பாடு செய்யப்படவுள்ளனர். அந்தக் கிராமங்களில் பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்களை உள்ளடக்கிய நிலையில் கட்டாய கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-11)

## நுளம்பு பெருகும் சூழல் 11 பேருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், பெப்.13
நுளம்பு பெருகக் கூடியவகையில் வீட்டுச்சூழலை வைத்திருந்தவர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் அண்மையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த 11 பேர் நுளம்பு பெருகக்கூடிய வகையில் வீட்டுச்சூழலை வைத்திருந்தார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டனர். அவர்கள் மன்றில் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ற-ரி)

## அதிக விலையில் விற்போர் தொடர்பில் முறையிடலாம்

யாழ்ப்பாணம், பெப்.13

பொருள்களை கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யாது அதிக விலைக்கு விற்பனை செய்பவர்கள் தொடர்பில் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சின் கீழ் உள்ள பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் இலக்கங்களுக்குதெரியப்படுத்தமுடியும் என்று அறிவிக்கப்பட்டது.

குறிப்பாக நாட்டின் எந்தப் பாகத்திலும் பொருள்களை கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யாதுஅதிகவிலைக்கு விற்பனை செய்பவர்கள் தொடர்பில் தெரியப்படுத்த முடியும்.

அது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உடனடித் தொலைபேசி இலக்கங்களான 011 7755481,0117755482, 011 7755483, ஆகியவற்றின் ஊடாகவோ அல்லது 011 2321696 என்ற தொலை நகல் ஊடாகவோ அல்லது chairmancaa@sltnet.lk. என்ற மின்னஞ்சல் ஊடாகவோ தகவல் தெரிவிக்கலாம். தகவல் தருபவர்கள் தொடர்பில் இரகசியம் பேணப்படும்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள தமது பிரிவுச் செயலகத்தின் 024 324 4932, 024 7755455, ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள நுகர்வோர் முறைப்பாடுகளை தெரிவிக்கலாம் - என்று பாவனையாளர் முறைப்பாட்டு பிரிவுப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அரசால் வர்த்தமானியில் அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றுக்கான கட்டுப்பாட்டு விலைகள் அறிவிக்கப்பட்டது.

மைசூர் பருப்பு ஒரு கிலோ 159 ரூபா, இறக்குமதி செய்யப்பட்ட நெத்தலிக் கருவாடு (தாய்லாந்து) ஒரு கிலோ 490 ரூபா, நெத்தலிக்கருவாடு (டுபாய்) 405 ரூபா, பாசிப் பயறு ஒரு கிலோ 205 ரூபா, வெள்ளைச் சீனி 93 ரூபா, உருளைக் கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டது 115 ரூபா போன்ற விலைகளுக்கு அமைவாக விற்பனை செய்யவேண்டும்.

வடக்கு மாகாணத்தின் எந்த மாவட்டத்திலும் கட்டுப்பாட்டு விலையில் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. (ற-10)



## இயக்கச்சியில் சிக்கியது 34 கிலோ கேரளக் கஞ்சா

### பொலிஸாரின் விசாரணை தொடர்கிறது
### கார், படகு இயந்திரமும் கைப்பற்றப்பட்டன

கிளிநொச்சி, பெப்.13

"கிளிநொச்சி-பளைபொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் 34 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. கார், படகு இயந்திரம், மோட்டார் சைக்கிள்கள் என்பவும் கைப்பற்றப்பட்டன"- என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பணியில் இருந்த பொலிஸார் இயக்கச்சியில் கார் ஒன்றைச் சோதனையிட்டனர். அதில் 2 கிலோவுக்கு அதிகமான கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது. 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. வத்திராயன் பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 9 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. படகு இயந்திரம் ஒன்றும், கார் ஒன்றும், 3 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை 7 நாள்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி பெறப்பட்டது. அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. மண்டலாய் களப்புப் பகுதியில் இருந்து மேலும் 23 கிலோ கஞ்சா நேற்றுமுன்திம் மீட்கப்பட்டது. விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இதுவரை 34 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் வேறு எவராவது இருப்பின் விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்படுவ"- என்று பளை பொலிஸ் நிலைய கடமை நேரப் பொறுப்பதிகாரி மினிப்புற தெரிவித்தார்.

"கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரும், மது ஒழிப்புப் பிரிவினரும், பளை பொலிஸாரும் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

சந்தேகநபரைக் கைது செய்யும்போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கையைக் கடித்துவிட்டு அவர் தப்ப முயன்றார்.

சந்தேகநபர்களிடம் இருந்து பதிவு செய்யப்படாத மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. அது தொடர்பான விசாரணைகளும் நடக்கின்றன" என்று கிளிநொச்சி மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஸபக்ச தெரிவித்தார். (ற-4,6)

## புங்குடுதீவு மாணவி வழக்கு: சந்தேகநபருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்.பெப். 13

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் 10 ஆவது சந்தேக நபருக்கு இரண்டு மாத காலம் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

இந்த வழக்கில் 12 சந்தேக நபர்கள் கைது செய்யப்படடிருந்தனர். இவர்களில் 10 ஆவது சந்தேக நபரான பிரியவர்த்தன ராஜ்குமார் விளக்க மறியல் நீடிப்புக்காக யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தில் கடந்த வாரம் முற்படுத்தப்பட்டார்.

அவர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி திருமதி ஜோய் மகாதேவன் அவர் நோய்வாய்ப்பட்டவர். வித்தியாவின் கொலை நடைபெற்ற 7 மாதங்களின் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார். வித்தியா கொலை செய்யப்பட்டதை அறிந்து அஞ்சலி செலுத்துவதற்காக சென்ற நேரம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று மன்றில் தெரிவித்தார். சந்தேக நபர் ஒரு வருடத்துக்கு மேலாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு இந்த சம்பவத்துடன் தொடர்பு இல்லை என்றும் சட்டத்தரணி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களின் விளக்கமறியல் காலம் ஒரு வருடம் நிறைவடைந்ததை தொடர்ந்து சட்டமா அதிபர் திணைக்களத்தால் மேலும் கால எல்லையை நீடிக்க வேண்டும் என்று மன்றில் கோரப்பட்டது.

சந்தேகநபருக்கு யாழ். மேல்நீதிமன்றில் மேலும் இரண்டு மாதங்கள் விளக்க மறியல் நீடிக்கப்பட்டது. (ற-6,ரி)

## பிலக்குடியிருப்புப் போராட்டத்துக்கு அரச பொது ஊழியர் சங்கம் ஆதரவு

முல்லைத்தீவு, பெப்.13

இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பிலக்குடியிருப்பு மக்களை அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்க உறுப்பினர்கள் நேற்றுச் சந்தித்து, தமது ஆதரவை தெரிவித்தனர்.

தலைமைச்செயலகதலைவர் சி. லோகநாதன் உபதலைவர் க. அன்ரனி முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ச. சற்குணமூர்த்தி, வன்னி மாவட்ட இணைப்பாளர் அ. புண்ணியமூர்த்தி, புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் சங்க உறுப்பினர் பா. காந்தராசா உட்படப் பலர் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமது முல்லைத்தீவு மாவட்ட கிளைக் கூட்டத்தில் பிலக்குடியிருப்பு மக்களின் காணி விடுவிப்புத் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசதலைவர், தலைமை அமைச்சர், மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோருக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.(ற-7,415)

## கிணற்றிலிருந்து பெண் சடலமாக மீட்பு

கிளிநொச்சி - பரந்தன் கோரக்கன்கட்டுப் பகுதியில் 4 பிள்ளைகளின் தாயாரான குடும்பப் பெண் ஒருவர் கிணற்றிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பரந்தன், கோரக்கன்கட்டைச் சேர்ந்த பாலகிருஸ்ணன் கமலாதேவி (வயது-54) என்பவரே உயிரிழந்தவராவார்.

"நேற்றுமுன்தினமிரவு இரவு படுக்கைக்குச் சென்றவரை படுக்கையில் காணாது உறவினர்கள் தேடியுள்ளனர். வீட்டுக்கு அண்மையிலுள்ள நீர் எடுக்கும் கிணற்றில் சடலம் மிதப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது" என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-426)



### புலிகளின் நீதி, நிர்வாகத்துறை இயங்கிய
## 6 ஏக்கர் காணியை கோருகின்றது சிறைச்சாலைகள் திணைக்களம்

கிளிநொச்சி, பெப்.13

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாகத்துறை இயங்கிய காணியை உரிமை கோரியுள்ளது சிறைச்சாலைகள் திணைக்களம்.

காணியை ஒப்படைக்க ஆவன செய்ய வேண்டும் என்று பிரதேச செயலாளரிடம் சிறைச்சாலைகள் ஆணையாளர் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாகத்துறை இயங்கிய சுமார் 6 ஏக்கர் காணியில் இராணுவத்தினர் முகாமிட்டிருந்தனர். கடந்த ஆண்டின் ஆரம்பத்தில்காணியை விட்டு இராணுவம் வெளியேறியது. அதன்பின்னர் அந்தப் பகுதியில் மக்கள் குடியமர்ந்தனர். 1990 ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டுவரை குடியிருந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து அவர்கள் அந்தப் பகுதியில் குடியமர்ந்தனர்.

தற்போது அந்தப் பகுதிக்குச் சிறைச்சாலைத் திணைக்களம் உரிமை கோரியுள்ளது.

அந்தப் பகுதியில் இருந்த சிறைக்கூடம் 1983ஆம் ஆண்டுக்குப் பின்னரான போரில் அழிந்து கைவிடப்பட்டது.

1974ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற ஜே.வி.பி கலவரத்தின் போது கைது செய்யப்பட்ட பலர் இங்கே அடைக்கப்பட்டிருந்தனர்.

அதற்கான சான்றுகளும் உள்ளன என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறைச்சாலை ஆணையாளரால் காணி தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டது. அந்தப் பகுதியில் பலர் குடியமர்ந்துள்ளனர். இவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு பதில் அனுப்பப்படும்- என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற-10)

# மலேசியாவில் இலங்கையர் கொலை

## இருவர் கைது

கொழும்பு,பெப்.13
மலேசியாவில் இலங்கையர் ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் இலங்கையர் ஒருவரும், இந்தியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மலேசிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மலேசியாவில் உள்ள ஜலம் சீம் கிரி என்ற தோட்டத்தில் இலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவரைக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் தங்களின் 49 வயதுடைய இலங்கை நண்பர் மீது தாக்குதல் நடத்தி கொலை செய்துள்ளனர் என விசாரணையில் தெரியவந்துள்ளது. கடந்த வியாழக்கிழமை சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சடலம் மீட்கப்பட்டதற்கு முதல் நாள், கொலை செய்யப்பட்ட நபர் மற்றும் நண்பர்களுக்கு இடையில் வாக்குவாதம் ஒன்று இடம்பெற்றிருக்கலாம் எனவும் மலேசியப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மலேசிய பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடக செய்தி வெளியிட்டுள்ளன. (ஐ)

# காணாமற்போன மீனவர் சடலமாக மீட்பு

திருமலை,பெப்.13
திருகோணமலை மூதூர் கடலில் மீன்பிடிக்கச் சென்று, கடந்த 9 ஆம் திகதி காணாமற்போன மீனவர், நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார் என்று மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூர் 01 - பஹ்ரியா நகரைச் சேர்ந்த லத்தீப் பஸ்ரி (வயது- 29) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

காணாமற்போன மீனவரைத் தேடும் பணியில் கிராம மக்களும், கடற்படையினரும் இணைந்து செயற்பட்ட நிலையில், அவர் நேற்று சடலம் மீட்கப்பட்டார் என்றும் மூதூர் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)






## பிலக்குடியிருப்பு மக்களுக்கு கிழக்கிலும் ஆதரவு

# மட்டக்களப்பிலும் நேற்றுப் போராட்டம்

மட்டக்களப்பு,பெப்.13
காணி மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முல்லைத்தீவு கேப்பாப்பிலவு, பிலக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவு தெரிவித்து, மட்டக் களப்பு காந்தி சதுக்கத்தில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் 'பச்சிளம் குழந்தைகளுடன் கொதிக்கிறது கேப்பாப்பிலவு- அரசே திரும்பிப்பார், எங்கள் பரிதவிப்பு உங்களுக்கு பரிகாசமா' 'இந்த மண் எங்கள் சொந்தமண், எங்களை எங்கள் நிலத்தில் வாழ விடுங்கள், நல்லாட்சி அரசே தமிழர்களுக்குத் தீர்வு எப்போது, நல்லாட்சி அரசே கேப்பாப்பிலவு மக்களின் காணிகளைக் கொடு, நல்லாட்சி அரசே தமிழனின் பொறுமையைச் சோதிக்காதே, ஆட்சி மாற்றத்துக்கு வாக்களிக்கும் கருவிகளா நாங்கள், நாங்கள் வீதியில் அரச படையினர் எங்கள் காணியில், நல்லாட்சிக்கு வாக்களித்தது நடுவீதியில் வாழ்வதற்கா?, அரசே நில அபகரிப்பை உடன் நிறுத்து' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் போராட்டத்தில் ஈடுபட்டோர் தாங்கியிருந்தனர்.

இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச. வியாழேந்திரன் தெரிவித்ததாவது:

ஜனவரி மாதம் 31ஆம் திகதி தொடக்கம் இன்று வரை தெருவோரத்தில் குளிரிலும், வெயிலிலும் வேதனையுடன் தமது காணிகளை விடுவிக்கக் கோரி அறவழிப் போராட்டத்தை முல்லைத்தீவு மக்கள் நடத்தி வருகின்றனர்.

கேப்பாப்பிலவு மக்கள் இறுதிப் போரில் 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் வரை சென்று மிகப் பெரிய பாதிப்புக்களையும், இழப்புக்களையும் சந்தித்து இப்பொழுது பெரும் துயரோடு வீதியோரத்தில் வந்து தமது துன்ப துயரத்துக்கு முடிவு வேண்டித் தவம் கிடக்கின்றார்கள்.

செட்டிகுளம் முகாம் தொடக்கம் இன்று வரை அவர்கள் வேதனைகளைச் சுமந்து கொண்டுதான் காலங்களை கழிக்கின்றார்கள்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு மீள்குடியேற்றம் என்ற பெயரிலே அவர்கள் குடியமர்த்தப்பட்டாலும், அவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் அங்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

கூட்டு அரசின் ஆட்சியில் தமது நிலபுலன்கள் மீளக் கிடைக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்பு அவர்களுக்கிருந்தது. ஆனால் மூன்று வருடங்கள் கழிந்து விட்ட போதிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை தீர்வில்லை.

அரச தலைவர் வரை கேப்பாப்பிலவு மக்களின் பிரச்சினை ஒத்தி வைக்கப்பட்டிருந்தாலும், இது வரை உரிய நடவடிக்கைகளை கூட்டு அரசு எடுக்காதது கவலையளிக்கின்றது.

விமானப்படைக்கு கையகப்படுத்தப்பட்டிருக்கும் பொதுமக்களின் காணி விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாகப் போராடுகின்றோம்.

சூரபுரத்தில் 59 குடும்பங்களினுடைய காணிகள், தினக் குடியிருப்பில் 84 குடும்பங்களினுடைய காணிகள், கேப்பாப் பிலவில் 145 குடும்பங்களினுடைய காணிகள் வான் படையினரால் கையப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அங்கு போராட்டம் நடத்தும் வயோதிபர், சிறுவர், தாய்மாருக்காக ஆதரவு தெரிவிக்கும் போராட்டத்தை கிழக்கிலுள்ள நாங்களும் முன்னெடுத்துள்ளோம். கூட்டு அரசு இந்தப் பிரச்சினைக்குக் காலத்தை இழுத்தடிக்காமல் நல்ல தீர்வைத் தரவேண்டும்.

பால்குடிக்கும் பச்சிளம் குழந்தைகளோடு பனியிலும், வெயிலிலும் படுத்துறங்கும் தாய்மாரின் துயரங்களை அரசு ஏறெடுத்துப் பார்க்க வேண்டும். குடிமக்களை தெருவில் பதைபதைக்க வைப்பதா கூட்டு அரசின் நகர்வு? மக்களை மன அழுத்தத்துக்கு உள்ளாக்குவதுதானா கூட்டு அரசின் நகர்வு? இது பற்றி ஆட்சியாளர்கள் சிந்திக்க வேண்டும்.

வடக்கு தமிழ் மக்களின் துயரம் நிறைந்த போராட்டத்துக்கு தென்னிலங்கையிள்ள சிங்கள மனிதாபிமானிகளும் ஆதரவு தெரிவித்திருக்கின்றார்கள் என்பது ஒரு நிம்மதி தரும் செய்தி. தமிழர் சிங்களவர், முஸ்லிம் என்ற பாகுபாடில்லாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கேட்டுப் போராடுவதில் நாம் ஒன்றிணைந்துள்ளோம்.- என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரட்ணம், காந்தி சேவா சங்கத் தலைவர் அ.செல்வேந்திரன், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரிதிநிதிகள், இளைஞர் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-46)

# ரயிலுடன் மோதுண்டு தாய் சாவு; மகள் காயம்

கண்டி,பெப்.13
கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலுடன் மோதுண்டு பெண்ணொருவர் உயிரிழந்தார். அவருடைய மகள் படுகாயமடைந்த நிலையில் மருத் துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பிலிமத் தலாவ ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

பிலிமத்தலாவ பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய பெண்ணொருவர் இந்தச் சம்பவத்தின் போது உயிரிழந்தார். 12 வயதுடைய அவருடைய மகள், கடுகண்ணாவை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அவர் பேராதனை மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக மாற்றப்பட்டார்.

பிலிமத்தலாவ ரயில் நிலையத்துக்கு அருகில் ரயில் நிலையக் கடவையைக் கடக்க முற்பட்ட போதே தாயும், மகளும் விபத்துக்குள்ளானர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

திருமலை,பெப்.13
திருகோணமலை அபயபுர சந்தியில், 375 கிராம் கேரளாக் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவரை நேற்றுமுன்தினம் இரவு சிறப்பு அதிரடிப்படையினர் கைது செய்தனர் என்று உப்புவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை, பாலையூற்றுப் பகுதியைச் சேர்ந்த ஏ.வீ.பீ.ஜானக்க (வயது-49) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

"எமக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து, அவரைப் பின் தொடர்ந்த சிறப்பு அதிரடிப்படையினர், கேரள கஞ்சாவை அவர் விற்பதற்காக முனையும் போது, 375 கிராம் கஞ்சாவுடன் அவரைக் கைது செய்தனர். திருகோணமலை நீதிவான் மன்றில் அவர் முற்படுத்தப்படுவார்" என்று உப்புவெளிப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சிறுபான்மை மக்களுக்கும் சம உரிமை வேண்டும்

## லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்து

கண்டி,பெப்.13

"அரசால் சிங்கள பௌத்த மக்கள் எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றார்களோ, அதேபோன்று, சிறுபான்மை மக்களும் பாதுகாக்கப்படவேண்டும். சிங்கள பௌத்த மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப்போன்று, சிறுபான்மை மக்களுக்கும் சம உரிமைகளுடன் சலுகைகளை வழங்க வேண்டும்"- இவ்வாறு வீதி அபிவிருத்தி மற்றும் உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.



'அயல் பாடசாலை சிறந்த பாடசாலை' எனும் திட்டத்தின் கீழ், அபிவிருத்தி செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள, அக்குறணை ஸாஹிரா தேசிய பாடசாலையின் புதிய ஆசிரியர் விடுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வும், புதிய தொழில்நுட்ப ஆய்வுகூட திறப்பு மற்றும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியும் நேற்று முன்தினம் பாடசாலையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 20 வருடங்கள் ஆட்சியில் இருந்த அரசுகள் செய்யாத அபிவிருத்திகளை கூட்டு அரசு இரண்டு வருடங்களில் செய்து முடித்துள்ளது.

கண்டி -கொழும்பு மத்திய நெடுஞ்சாலை, இலங்கையில் ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டு வரவுள்ளது. இந்த சாலை நிர்மாணிக்கப்பட்டவுடன், கண்டியிலிருந்து கொழும்புக்கு ஒரு மணித்தியாலத்தில் செல்ல முடியும்.

கூட்டு அரசு ஆட்சிப் பீடமேறிய இரண்டு வருடங்களில், முக்கியமாக இனங்களுக்கிடையில் சக வாழ்வை ஏற்படுத்தியுள்ளோம். நாடு முழுவதும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறோம். கல்வி உட்பட சகல துறைகளிலும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.-என்றார். (ஐ)

# 3000 மெற்.தொன் அரிசியை இறக்குமதி செய்யத் திட்டம்

கொழும்பு,பெப்.13

இந்த வாரத்துக்குள் மூவாயிரம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமாக அரிசியை அயல் நாடுகளிடம் இருந்து இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத் தலைவர் ரொஹான் த அத்துகோரல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அயல் நாடுகளிடம் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி, நாடு முழுவதிலுமுள்ள சதொச விற்பனை நிலைய வலயமைப்பினூடாக நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும். இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக நுகர்வோர் அரிசியைக் கொள்வனவு செய்ய முடியும். நாட்டுக்குத் தேவையான அரிசியில் 25 வீதம் வரையிலான அரிசி சதொச விற்பனை நிலையங்கள் ஊடாகவே விநியோகிக்கப்பட்டு வருகின்றன. நுகர்வோருக்கு சதொச நிறுவனம் தொடர்ந்து அரிசியைத் தட்டுப்பாடின்றி விநியோகிக்கும். -என்றார். (ஐ)

# சட்டவிரோதமாக தங்கியிருந்த இந்தியர் கைது

கொழும்பு,பெப்.13

சட்டவிரோதமான முறையில் இலங்கையில் தங்கியிருந்த இந்தியக் குடிமகன் ஒருவர் ஹங்குரங்கெத, ஹேவாஹெட்ட பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

உரிய நுழைவிசைவு இன்றி நாட்டில் தங்கியிருந்த குற்றச்சாட்டில் 45 வயதுடைய இந்தியக் குடிமகன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அவர் வலப் பன்னே நீதிவான் மன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் எனவும், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப் படுவதாகவும் ஹங்குரங்கெத பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சிகிரியாவுக்கு லிப்ட் வசதி

கொழும்பு,பெப்.13

சிகிரியாவைப் பார்வையிடச் செல்பவர்களுக்கு வசதியாக லிப்ட் மற்றும் மின்சார மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துவது குறித்து அரசு அவதானம் செலுத்தியுள்ளது என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

சிகிரியாவுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க, லிப்ட் மற்றும் மின்சார மோட்டார் வாகனங்கள் அவசியம். அதற்காக சிகிரியாவில் லிப்ட் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது. தொல் பொருள்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிகிரியாவுக்கு அண்மையில் தான் சென்றிருந்தபோது, அங்கு சுற்றுலாப் பயணிகள் எதிர்கொண்ட பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தமையை அடுத்து, சிகிரியாவில் லிப்ட் வசதியை பெற்றுக்கொடுப்பதற்கான யோசனையொன்றை அரசுக்கு முன்வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# ஹக்கீமின் தவறுகளைத் தட்டிக்கேட்டால் கட்சியிலிருந்து தூக்கி எறியப்படுவோம்

## ரிஷாத் குற்றச்சாட்டு

திருமலை,பெப்.13

"முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் தவறுகளை எவராவது தட்டிக் கேட்டால், அவர்களைத் துரோகிகள் என பட்டம் சூட்டி, கட்சியிலிருந்து வெளித்தள்ளும் துர்ப்பாக்கியம் இன்னும் தொடர்கிறது" -இவ்வாறு வர்த்தக மற்றும் வாணிப அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கந்தளாயில் இடம்பெற்ற மக்கள் காங்கிரஸின் காரியாலய திறப்பு விழாவின் பின்னர், இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் காங்கிரஸின் தலைவரை, நானும், அமீர் அலியும், நஜீப் ஏ மஜீதும், அன்று தட்டிக் கேட்டபோது, எங்களைத் துரோகிகளென முத்திரை குத்தி, சேறு பூசி மக்களின் மத்தியில் பிழையானவர்களென இனங்காட்டி வெளியேற்றினார்கள்.

முன்னாள் அரச தலைவரான சந்திரிகா ஆட்சியமைத்த போது, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருந்த மு.காவினரான நாங்கள், பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு தேவைப்பட்டிருந்த ஓரிரு ஆசனங்களை வழங்கி, ஆட்சியில் பங்காளியாகி, முஸ்லிம் சமூக நன்மைக்காகப் பாடுபடுவோம் என்று தலைவரிடம் சுட்டிக் காட்டிய போதே, எங்களைக் கட்சியிலிருந்து தூக்கியெறிந்தார்கள். எங்கள் சரித்திரத்தை முடித்து விட முடியுமென நம்பினார்கள்.



அமைச்சர் அதாவுல்லாவையும் பலமான அழுத்தத்தைப் பிரயோகித்து வெளியேற்றினார்கள். மு.கா.தவிசாளர் பஸீர் சேகு தாவூத்தும், செயலாளர் ஹசனலியும், ஹக்கீமுடன்இணைந்து இந்தக் கைங்கரியங்களை செய்து முடித்தார்கள். அதேபோன்று மர்ஹூம் அஷ்ரபின் துணைவியான திருமதி பேரியல் அஷ்ரப்புக்கு பல்வேறு இன்னல்களைக் கொடுத்து, அவரையும் வெளியேற்றினார்கள். எங்களை வெளியேற்றுவதற்கு துணை புரிந்த பஸீரையும், ஹசனலியையும் இப்போது வெளியேற்றுவதற்கு முடிவு செய்து விட்டார்கள்.

முஸ்லிம் சமூகப் பிரச்சினைகளில் அக்கறை காட்டாமல், அவற்றின் சவால்களுக்கு முகம் கொடுக்கத் திட்டம் தீட்டாமல், உள்வீட்டுப் பிரச்சினையை எப்படிச் சமாளிக்கலாம் எனத் தடுமாறி நிற்கின்றனர்- காலத்தை வீணடிக்கின்றனர்.

முஸ்லிம்களினதும் பரோபகாரிகளினதும் உதவியுடனும் ஒத்துழைப்புக்களுடனும் மர்ஹூம் அஷ்ரப்பின் வியர்வையாலும். குருதியாலும் கட்டியெழுப்பப் பட்டு, இன்று தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கும் தாருஸ்ஸலாம் தொடர்பில், ஊடகங்களில் வெளிவந்துக் கொண்டிருக்கும் தகவல்கள், நமது சமூகத்தைக் கவலை கொள்ளச் செய்துள்ளது.

முஸ்லிம்களின் விடிவுக்காக முஸ்லிம் இளைஞர்களின் விமோசனத்துக்காக , சமுதாயம் தலை நிமிர்ந்து நிற்பதற்காக கம்பீரமான முறையில்அமைக் கப்பட்ட அந்தத் தலைமையகம், தற்போது தனிப்பட்ட சிலரின் சொத்தாக மாற்றப் பட்டுள்ளதாக அந்தக் கட்சியில் உள்ளோரே கூறுகின்றனர்.

மர்ஹூம் அஷ்ரப் மறைவதற்கு ஆறு நாள்களுக்கு முன்னர், சம்மாந்துறையில் அதிகாலை வேளை அவர் ஆற்றிய உரை, சமுதாயத்தின் மீது அந்த மகான் கொண்டிருந்த அக்கறையையும், கவலையையும் நமக்கு உணர்த்துகின்றது. மர்ஹூம் அஷ்ரப் இந்தக் கட்சியை ஆரம்பித்ததன் நோக்கம் எந்தளவு தூரம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பாருங்கள்.

வடமாகாண முஸ்லிம்கள், வாழ்வுரிமையை இழந்து தவித்துக் கொண்டிருக்கும்போது, அதைப்பற்றி கவலைக் கொள்ளாமல் எந்த உதவியும் செய்யாமல் இருந்துவிட்டு, கடந்த வாரம் வன்னி சென்று அவர்களுக்காகப் பாடுபட்டு உழைக்கும் எங்களை, மேடை போட்டு தூற்றி வருகின்ற கேவலத்தைத்தான் நாம் பார்க்கின்றோம்.-என்றார். (ஐ)

## அனுமதியின்றி வந்தோரால் சூடான அவைத் தலைவர்

யாழ்ப்பாணம், பெப்.13
வடக்கு மாகாண சபைக்குள் முன் அனுமதி பெறாமல் வந்த சிலரால் அவைத் தலைவர் சூடானார்.

வடக்கு மாகாண சபையின் 84 ஆவது அமர்வு கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றது. அந்த அமர்வில் வடக்கு மாகாணத்தின் குடிதண்ணீர்வளம் தொடர்பாக ஆராய சிறப்பு அமர்வு ஒன்றை நடத்த வேண்டும் சில உறுப்பினர்கள் கோரிக்கை விட்டுள்ளனர். இந்த விடயத்தால் சபையில் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர சி.தவராசாவுக்கும் இடையில் சூடான விவாதம் நடைபெற்றது.

அந்தத் தருணத்தில் சபைக்குள் முன் அனுமதி இன்றி இரண்டு நபர்கள் உள்நுழைந்துள்ளதாக அவைத் தலைவருக்கு தகவல் கிடைத்தது. முன் அறிவித்தல் இன்றி வந்தவர்கள் உடனடியாக சபையை விட்டு வெளியேறுங்கள் என கோரினார். அதன் போதும் அவர்கள் எந்த அசைவையும் காட்டாததால் நான் பெயர் குறிப்பிட்டு அவர்களை வெளியேற்றும் படி சொல்வதற்கு முன்னர் நீங்களாகவே வெளியேறிவிடுங்கள் என காட்டமாக தெரிவித்தார். அதன் பின்னர் சபை நடவடிக்கைகள் இடம்பெற்றன. (ற-8)

## போக்குவரத்து சேவை சீரின்மையால் பூநகரி மாணவர்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம்.பெப்.13
கிளிநொச்சி, பூநகரியின் பல்வேறு கிராமங்களிலும் இருந்தும் பூநகரி மகா வித்தியாலயத்துக்கு வரும் மாணவாகள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர் என்று பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

கௌதாரிமுனை, பரமன்கிராய், பள்ளிக்குடா உட்பட பல கிராமங்களின் மாணவர்கள் காலையில் பேருந்துகளில் பாடசாலை செல்கின்றனர். மாலையில் பேருந்துச் சேவை இல்லாததால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அதிகாரிகள், அரசியல்வாதிகளிடம் இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பெற்றோர் தெரிவித்தனர்.

அரச பேருந்துகளை ஈடுபடுத்துவதில் எமக்குஎந்த ஆட்சேபணையும் இல்லை. சாரதிகள் பற்றாக்குறை எம்மிடம் உள்ள முக்கிய பிரச்சினை.

காலை 6.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு பரமன்கிராயிலும் மாணவர்களை ஏற்றி 7.30 மணிக்கு பூநகரி பாடசாலையை பேருந்து வந்தடைகின்றது. முக்கொம்பனில் இருந்து காலை பாடசாலை மாணவர்களை ஏற்றியபடி புறப்படும் பேருந்து உரிய நேரத்துக்குள் மாணவர்களை பாடசாலையில் கொண்டு போய்ச் சேர்க்கிறது. கிளிநொச்சி சாலையில் இருந்து ஆசிரியர்கள் மாணவர்களை ஏற்றியபடி புறப்படும் பேருந்தும் பூநகரிக்கு 8 மணிக்கு வந்து சேர்கிறது. மாலையிலும் பாடசாலை மாணவர்களுக்காக பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன.

எம்மால் இயன்றளவு எம்மிடம் இருக்கும் சாரதிகளை வைத்து சேவைகளை வழங்குகின்றோம். பேருந்துகள் இருக்கின்றன. போதிய சாரதிகள் எம்மிடம் இல்லை– என்று கிளிநொச்சி அரசபோக்குவரத்து சாலை முகாமையாளர் வ.நேசகுமார் தெரிவித்தார். (ற-ரி)

# புதிய அரசமைப்பு தயாரிப்பில் உதவ வேண்டிய கடப்பாடு இல்லை

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப்.13
அரசியல் யாப்புத் தயாரிப்புத் தொடர்பில் நாம் உதவ வேண்டிய கடப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. அந்த முயற்சிக்குத் தடையாக இருந்தோம் என்று எவரும் கூறக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அரசியல் யாப்புத் தயாரிப்பு தொடர்பான கலந்துரையாடல் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஜப்ரி அழகன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசியல் யாப்பில் தேர்தல் முறை மாற்றம் , அதிகாரப் பகிர்வு , நிறைவேற்று அதிகார முறைமை போன்ற முக்கிய விடயங்கள் அடங்கியிருந்தன. காணி , சமயம் , சுபாவம் உள்ளிட்ட 6 முக்கிய 14 கோட்பாடுகள் தொடர்பாக ஏகமனதான இணக்கமும் காணப்பட்டிருந்தது. வழி நடத்தல் குழு முதலமைச்சர்களின் மற்றும் மாகாண எதிர்க்கட்சித் தலைவர்களையும் சந்தித்தது. துரதிர்ஷ்டவசமாக வடக்கு மற்றும் கிழக்கு முதலமைச்சர்கள் சந்திக்கவில்லை. சந்தித்த முதலமைச்சர்களும் ஒருங்கிணைந்த நிரல் நீக்கப்படவேண்டும், ஆளுநர் அதிகாரம் குறைக்கப்படவேண்டும் அல்லது நீக்கப்பட வேண்டும் என்றே பரிந்துரைத்துள்ளனர். அவையும் தொகுத்து விரைவில் வரலாம். 13 திருத்தச் சட்டம் போதிய தீர்வல்ல என்பதும் தொடர்ச்சியாகக் கூறப்படுகின்றது. சுதந்திரத்துக்கு முன்பு பண்டாரநாயக்கா யாழ்ப்பாணத்துக்கும் வந்து சமஷ்டிக்கு ஒத்துழைப்பு கேட்டார். பின்னர் கண்டித் தமிழர்கள் சமஷ்டித் தீர்வு தொடர்பில் கேட்டனர். நாம் அப்போது அது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. 2000ஆம் ஆண்டு நாடாளுமன்றில் சமர்ப்பித்த யாப்பில் ஒற்றையாட்சி நீக்கப்பட்டு இந்தியாவில் உள்ளதை விடவும் அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டபோதும் தமிழர் தரப்புக்கள் எதிர்த்தன. இந்திய–இலங்கை ஒப்பந்தம்ஏற்பட்ட போது இலங்கையின் இறைமையை பாதித்து விட்டது என்று தென்னிலங்கை தரப்புக்கள் கூறின. தமிழர் தரப்பு இந்தியத் தலைவரையே கொன்றது. ஒஸ்லோவில் முன் வைக்கப்பட்டசமஷ்டியை இலங்கை அரசு முழுமையாக ஆராய முன்னர்அதற்குஇணங்கிய தரப்பே நிராகரித்தது.

சமஷ்டி முறையில் தீர்வு முன்வைக்கப்பட்ட வேளையில் 2005 ஆம் ஆண்டு என்னை நிராகரித்து மற்றையவரையே தேர்வு செய்தீர்கள் என ரணில் விக்கிரமசிங்கா கூறினார். இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு தான் நாம் தற்போது வித்தியாசமான அணுகுமுறையைக் கையாண்டுள்ளோம். தமிழர் தரப்பை எந்த வகையிலும் குற்றஞ்சுமத்த முடியாத வகையிலேயே நாம் செயற்படுகின்றோம். வழி நடத்தல் குழுவின் அறிக்கைகள் தொடர்பில் வெளியில் கூறாததால் தான் இந்தளவு விடயங்களில் இணக்கம்எட்டப்பட்டது. 99 வீதமான விடயத்தில் இணக்கம் காணப்பட்ட நிலையிலும் முன்கொண்டு செல்லும் அரசியல் துணிவு தெற்கில் குறைவாகவே உள்ளது. இவை அனைத்துக்கும் அப்பால், இந்த நாட்டில் அவரை விட வேறு இனவாதி கிடையாது எனக் கருதப்படும் மகிந்தாவும் தற்போதுள்ள அதிகாரப் பகிர்வுமுறை அர்த்தமற்றது என்று கூறுகின்றார் – என்றார். (ற-101)

## பொலிஸ் அதிகாரி கைது

வெல்லவாய, திஸ்ஸ வீதியிலுள்ள, சீ.ஜி.எம். மாவத்தையில் வாகனமொன்றில் சென்ற ஒருவரை தாக்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் மொனராகலை பொலிஸ் பிரிவின் ஊழல் தடுப்பு அதிகாரி கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னுடைய மோட்டார் சைக்கிளுக்கு பாதையில் இடம் தராமல் சென்றார் என்று தெரிவித்தே குறித்து பொலிஸ் அதிகாரி தாக்குதல் நடத்தினார் என்று வாகனத்தின் சென்ற நபர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ற)

*யாழ். மாநர சபை பணியாளரின்*

## மோசடி குறித்த விசாரணையில் பொலிஸார் அசமந்தப் போக்கு!

யாழ்ப்பாணம், பெப்.13
யாழ். மாநகர சபைப் பணியாளர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டது என்று குற்றஞ்சாட்டப்படும் 28 லட்சம் ரூபா மோசடி தொடர்பான திணைக்கள ரீதியான குற்றச்சாட்டுப் பத்திரம் 4 மாதங்களின் பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்டது. பொலிஸார் விசாரணையை இழுத்தடிக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பெண் பணியாளர் ஒருவரால் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது என்று கூறப்படும் மோசடி தொடர்பாக திணைக்கள ரீதியில் ஆரம்ப விசாரணைகள் நடைபெற்றன. அதன்படி குற்றப்பத்திரம் தயார் செய்யப்பட்டது என்று மாநகர சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தயாரிக்கப்பட்ட குற்றப்பத்திரம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட பின்னரே, அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது தொடர்பாக யாழ். மாநகர சபையால் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பாக பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறப்படுகின்றது. சந்தேகநபரைக் கைது செய்யவோ? விசாரணைக்குட்படுத்தவோ? போன்ற எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உரிய பதிலும் வழங்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது என்று பொலிஸார் வாய் மூலம் தெரிவித்தனர் என்று யாழ். மாநாகர சபை அதிகாரி குறிப்பிட்டார். (ற-101)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்
12 . 03 . 1947



ஆண்டவன் அடியில்
15 . 01 . 2017

### திருமதி நாகேஸ்வரி கந்தசாமி

கடந்த 15.01.2017 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவிகள் செய்த அயலவர்கள் உறவினர்கள் மற்றும் அனைவருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல்கள் தெரிவித்தும் கண்ணீர் அஞ்சலிகள் செலுத்தியும் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரத்தியேகமாக நுணாவில் ஆனந்தா வைத்தியாசலை வைத்தியர் அவர்கள் அன்னார் நோயுற்றகாலத்தில் நாம் அழைத்த போதெல்லாம் சிகிச்சை அளித்தமைக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சி.கந்தசாமி
(ஓய்வு நிலை கிராம அலுவலர் - J.P).

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(c.28330) (13.18)

குடும்பத்தினர்.

# கம்பளாவை நடத்த ஏதுவாக உருவானது அவசரச் சட்டம்

சென்னை, பெப். 13
கம்பளா விளையாட்டை (சேற்றில் எருமையை விரட்டிச் செல்லும் விளையாட்டு) நடத்த ஏதுவாக அவசரச் சட்டத்தை இயற்றியது கர்நாடக அரசு.
மிருகவதை என்று தெரிவித்து, தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டைத் தடை செய்ததைப்போல், கர்நாடகாவில் கம்பளா விளையாட்டு தடைப் பட்டியலில் இருந்து வருகிறது. அலங்காநல்லூர், மெரீனா போன்ற இடங்களில் லட்சக்கணக்கான இளைஞர்கள் ஒன்றுதிரண்டு பெரும் போராட்டங்களை நடத்தி ஜல்லிக்கட்டுக்கு இருந்த தடையை இல்லாமல் செய்ததை அடுத்து, கர்நாடக இளைஞர்களும், பொதுமக்களும் கம்பளாவை நடத்த கர்நாடக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி போராட்டங்களில் ஈடுபட்டனர்.
இந்த பலதரப்பட்ட அழுத்தங்களை அடுத்து, கர்நாடக அரசு சட்டசபையில் தடையை நீக்க ஏதுவாக அவசரச் சட்டத்தை இயற்றியது. இந்த அவசரச் சட்டம் உள்துறை அமைச்சு, குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, இந்தியப் பிரதமர் மோடி ஆகியோருக்கு அனுப்பி அனுமதி பெறப்பட்டால் தடை நிரந்தரமாக நீக்கப்படும். (ம)





# பலம்பெறுகிறது ஓ.பி.எஸ். அணி

சென்னை, பெப். 13
அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் சசிகலாவுக்கும் - தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்துக்கும் இடையில் அரசியல் மோதல்கள் இடம்பெற்றுவரும் நிலையில், ஓ.பி.எஸ்ஸின் அணி பலம்பெற்று வருகிறது என்று இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.
கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அ.தி.மு. கழகத்தின் தலைமைக்கு எதிராக பல விமர்சனங்களை முன்வைத்தார் ஓ.பன்னீர்செல்வம். தான், வற்புறுத்தலின் அடிப்படையிலேயே பதவி விலகினார் என்றும் அவர் குறிப்பிட்டார். இதனையடுத்து கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார். சசிகலா, ஓ.பி.எஸ். இடையே தற்போது பெரும் வார்த்தை மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.
முதல்வராக ஓ.பி.எஸ். தொடர வேண்டுமாயின் சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும். அதேபோல் ஓ.பி.எஸ்ஸை பதவி விலக வைக்க சசிகலா பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும். இதனால் சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரையும் சசிகலா நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கவைத்துள்ளார்.
எத்தனைபேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், அ.தி.மு. கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் 135 பேரில், 6 பேர் ஓ.பி.எஸ். அணியில் உள்ளதால்,

> “வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களைக் குவித்தனர் என்ற குற்றச்சாட்டில், முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோர் மீது தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு நாளை வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுவதால் நாளை மாலை அல்லது நாளைமறுதினம் ஆளுநரின் நிலைப்பாடு வெளிப்படும் என்று சொல்லப்படுகிறது.

129 பேர் அங்கிருக்கவேண்டும் என்று கருதப்பட்டது.
இந்த நிலையில், வருவாய்த் துறையினர் விடுதிக்கு நேரில் சென்று விசாரணை நடத்தினர். அவர்களின் விசாரணையில் 94 சட்டமன்ற உறுப்பினர்களே அங்குள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. எனின் 35 பேர் எங்குள்ளனர் என்று கட்சித் தலைமையால் வெளிப்படுத்தப்படவில்லை.
அவர்கள் ஓ.பி.எஸ்ஸுக்கு ஆதரவளிக்க வாய்ப்புள்ளது என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.
ஓ.பன்னீர்செல்வத்துக்கு நேற்று மதியம் வரை ஓர் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவர், சட்டசபை உறுப்பினர்கள் எண்மர், மூத்த நிர்வாகிகள் இருவர் தமது ஆதரவை வெளிப்படையாகத் தெரிவித்திருந்தனர்.
வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களைக் குவித்தனர் என்ற குற்றச்சாட்டில், முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோர் மீது தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு நாளை வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுவதால் நாளை மாலை அல்லது நாளைமறுதினம் ஆளுநரின் நிலைப்பாடு வெளிப்படும் என்றும் சொல்லப்படுகிறது. (ம)

# 7 சிப்பாய்களைக் கொன்று பெண்

நைஜீரிய அரசுக்கு பெரும் சவாலான ஆயுதக் குழுவாக உள்ள போகோஹறம் அமைப்பு, 7 சிப்பாய்களைக் கொலை செய்து, ஒரு பெண் சிப்பாயைக் கடத்திச் சென்றது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள மாபா நகரில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. போகாஹறம் ஆயுததாரிகளுக்கும் சிப்பாய்களுக்கும்

## வடகொரியா மிரட்டல்

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை வடகொரியா நேற்றுமுன்தினம் சோதித்தது என அயல் நாடான தென்கொரியா குற்றம் சுமத்தியது. அமெரிக்காவுக்கும் – வடகொரியாவுக்கும் இடையில் ஏவுகணை விவகாரத்தில் முறுகல் நிலை தொடர்ந்து கொண்டே செல்கிறது. ஒபாமாவின் காலத்தில் அந்த நாடு ஏகப்பட்ட ஏவுகணையை சோதித்தது. ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் வடகொரியா சோதித்த முதல் ஏவுகணையாக இது அமைந்தது. (ம)

## தி.மு. முக்கி

# பிலிப்பைன்ஸ் நிலநடுக்கத்தில் சாவு எண்ணிக்கை 8 ஆக உயர்வு

மனிலா, பெப். 13
பிலிப்பைன்ஸில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நில அதிர்வில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்தது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
பிலிப்பைன்ஸ் – சுரிகாவ் நகரில் நேற்றுமுன்தினம் நில அதிர்வு ஏற்பட்டது. ரிச்சட் அளவில் 6.7 ஆகப் பதிவான இந்த அதிர்வால் கட்டடச் சேதங்கள் பெருமளவு ஏற்பட்டன. மூவர் உயிரிழந்தனர் என முதற் கட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் நடைபெற்ற மீட்புப் பணிகளின் அடிப்படையில் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்தது. 80 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)





# இடைமறித்து தாக்கவல்ல ஏவுகணையை இந்தியா சோதித்தது

சென்னை, பெப். 13
எதிரியின் ஏவுகணையை இடைமறித்துத் தாக்கவல்ல ஏவுகணையை சோதித்து வெற்றி கண்டது இந்தியா.
ஒடிசா மாநிலத்தில் வங்கக்கடலை ஒட்டியுள்ள அப்துல்கலாம் தீவில் நேற்றுமுன்தினம் காலை இந்த சோதனை நடத்தப்பட்டது. தானியங்கி மூலம் செயற்படும் இந்த ஏவுகணை, ரோடர் மூலம் எதிரி நாட்டு ஏவுகணையை இனங்கண்டு இடைவழியில் தாக்கி அழிக்கும் வல்லமை பெற்றது. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை, அதிக சுமைகளைச் சுமந்து செல்லவல்ல ஏவுகணை ஆகியவற்றை சீனா அண்மையில் பரிசோதித்திருந்த நிலையில், இந்தியாவின் இந்தச் சோதனை சீனாவுக்குத் தக்க பதிலடியாக அமைந்தது. (ம)

# அமெ. – சீனா மீண்டும் முறுகல்

வொஷிங்டன், பெப். 13
தென்சீனக் கடல்பரப்புக்கு மேலாகப் பறந்த அமெரிக்க இராணுவ விமானத்தை சீன விமானம் பின்தொடர்ந்ததை அடுத்து இருதரப்புக்கும் இடையில் மீண்டும் முறுகல் நிலை ஏற்பட்டது.
தென்சீனக் கடல்பரப்பை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. பிலிப்பைன்ஸ், வியட்நாம், தைவான், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளும் குறித்த கடல்பகுதியை சொந்தம் கொண்டாடுகின்றன. அமெரிக்கா அது பன்னாட்டு எல்லை என வாதிடுகிறது. இது தொடர்பான முறுகல்கள் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் – சீன அதிபர் ஜின் பிங் இடையிலான அண்மைய உரையாடலை அடுத்து ஓரளவு முற்றுப் பெற்றிருந்தது. இந்த நிலையில் பன்னாட்டு எல்லையில் பறந்த தமது இராணுவ விமானத்தை சீனா பின்தொடந்தமை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடாக அமைந்தது என்று அமெரிக்கா குற்றம் சுமத்தியது. இதை சீனா மறுத்ததுடன் தாம், சட்டதிட்டத்துக்கு உட்பட்டே செயற்பட்டோம் என்றும் தெரிவித்தது. (ம)






# ஈபிள் கோபுரத்துக்கு பாதுகாப்பாக கண்ணாடி கவசம்

பரிஸ், பெப். 13
ஈபிள் கோபுரத்தைச் சுற்றி குண்டு துளைக்காத கண்ணாடிக் கவசம் அமைக்க பிரான்ஸ் அரசு திட்டமிட்டுள்ளது. 128 ஆண்டுகள் பழமையான ஈபிள் கோபுரத்துக்கு உலகப் பயங்கரவாதத்தால் அச்சுறுத்தல் உள்ளது என்று எச்சரிக்கப்பட்டதை அடுத்தே பிரான்ஸ் அரசு இந்த அதிரடி நடவடிக்கையில் களமிறங்கியது. கிட்டத்தட்ட 300 மில்லியன் யூரோ இந்த பாதுகாப்புக் கவசத்துக்காகச் செலவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# அகதிகளின் இல்லங்களாக மாறும் சிறைச்சாலைகள்

நெதர்லாந்து நாட்டில் சிறைச் சாலைகள் அகதிகள் இல்லங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.
நெதர்லாந்தில் குற்றங்கள் மிகமிகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பெரும்பாலான சிறைகள் கைதிகள் இல்லாமல் வெறிச்சோடிப் போய் உள்ளன. இதனால் அங்குள்ள சிறைச்சாலைகள் அகதிகள் இல்லங்களாக் மாற்றப்பட்டு வருகின்றன. ஹார்லெம் என்ற மிகப்பெரும் சிறைச்சாலை அகதிகள் கால்பந்து விளையாடும் மைதானமாக்கப்பட்டுள்ளது.
இதைவிடத் தனது சிறைச்சாலைகளை ஏனைய நாடுகளுக்கு நெதர்லாந்து வழங்கி வருகிறது. அவற்றுக்காக பெரும்தொகைப் பணங்களை வாடகையாகவும் பெறுகிறதாம். (ம)



# …ண் சிப்பாயை கடத்தியது போகோஹரம்

…க்கும் இடையில் நடை…ற போரில் 20 சிப்பாய்கள் …மடைந்து மருத்துவ மனை… சேர்க்கப்பட்டனர். அவர்…ல்சிலரின்நிலைமைகவலைக்…ாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சமும் வெளியிடப்பட்டது.
கடத்தப்பட்ட பெண் சிப்பாய் தொடர்பில் எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.
கடந்த ஏழு வருடங்களாக நைஜீரிய அரசு – போகோஹரம் ஆயுதக் குழு இடையே சண்டை இடம்பெற்று வருகிறது. 20 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். மில்லியன் கணக்கான மக்கள் அகதிகளாகி உள்ளனர். (ம)

# …மு. கழகத்தின் …க்கிய கூட்டம்

…னை, பெப். 13
… கழகத்தின் செயற்குழுக்…மொன்று இன்று …பெறவுள்ளது.
… கழகத்தின் செயல்…வர் ஸ்ராலினின் …மையில் இந்தக் கூட்டம் …பெறவுள்ளது என்று பொதுச்…லாளர் க.அன்பழகன் …வித்தார். அ.தி.மு. கழகம் …டாகப் பிளவுபட்டுள்ளது.
…துச் செயலாளர் …லாவுக்கும் – …க முதல்வர் ஓ.பன்னீர்செல்…க்கும் இடையில் முறுகல் … உச்சம் தொட்டுள்ளதால் …த்தன்மையற்ற அரசியல் …ரமே தற்போது …ளது. இந்த நிலையில் …டாவது பெரும் …பான தி.மு. கழகத்தின் …றைய கூட்டம் …யத்துவம் வாய்ந்ததாகப் …கப்படுகிறது. (ம)



மலேசியாவில் மாமெரி பழங்குடியினரின் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் அண்மையில் இடம்பெற்றன. கடலுக்கு நன்றி செலுத்தும் வகையில், இயற்கை பொருள்களால் தம்மை அலங்கரித்து சடங்குகளை நிறைவேற்றினர். (ம)

**அரிசி விலை நிர்ணயத்தில் ஏற்பட்டுள்ள கட்டுப்பாட்டினால் பல சிக்கல் நிலைமைகள் உருவாகும் என அகில இலங்கை அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான சில்லறை மற்றும் மொத்த வியாபாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.**

## இறக்குமதி




# அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டது

### சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் மூலம் நடவடிக்கை

வணிகம்

### கருத்து

"உற்பத்தியாளர், இறக்குமதியாளர், விநியோகஸ்தர் மற்றும் வர்த்தகர்கள் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயத்தை அதிகப்படுத்தவோ விற்பனைக்காகக் காட்சிப்படுத்தவோ முடியாது"

*-நுகர்வோர் விவகார அதிகார சபை*

"அரிசி இறக்குமதி செய்யப்பட்டும் அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விற்பனை விலை நிர்ணயக் கட்டுப்பாடுகள் காரணமாக நாட்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன"

*- அகில இலங்கை அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான சில்லறை மற்றும் மொத்த வியாபாரிகள் சங்கத் தலைவர் பந்துல ஜயமான்ன*

"காலம் தாழ்த்தியாவது அரசு விலைக்கட்டுப்பாட்டை நிர்ணயித்தமை நுகர்வோருக்கு நன்மை பயக்கும் செயற்பாடு"

*- அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன*




# ஐதரசன் வாயுவிலிருந்து உலோக உற்பத்தி

### ஹாவர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வில் கண்டறிவு

ஐதரசன் வாயுவிலிருந்து உலோகத்தை உற்பத்தி செய்யும் முயற்சி தொடர்பிலான ஆய்வு வெற்றியளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன்படி ஹாவர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வு வெற்றி கண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆக,80 வருடங்களுக்கு முன்பதாக பௌதிக விஞ்ஞானிகளால் கணிப்பிடப்பட்டதான நோபல் பரிசுக்குரித்தான மேற்படி ஐதரசன் வாயுவிலிருந்து உலோகத்தை உற்பத்தி செய்வதான எண்ணக்கருவானது இதன் மூலம் தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஐதரசன் வாயுவில் உள்ளதான உலோகத்துகள்களின் மாதிரிகள் ஆய்வு நிலைக்குட்படுத்தப்பட்டபோதே இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலே குளிர்ச்சியில் அமுக்க நிலைக்குட்பட்டதான ஐதரசன் வாயு திரவமாகவே இருக்குமா அல்லது உறுதியாக இருக்குமா என்பது தொடர்பிலான தொடர் நிலை ஆய்வுகளை விஞ்ஞானிகள் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 15 அரச நிறுவனங்களில் அதிக நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது

### கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவிப்பு



கடந்த 15 மாத காலப்பகுதியில் 11 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை மதிப்பீடுடைய நிதி இழப்பு 15 அரச நிறுவனங்களில் ஏற்பட்டுள்ளதான தகவல் கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்னெத்தியால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி 2015 மே மாதம் தொடக்கம் 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியிலேயே 15 அரச நிறுவனங்களில் அதிக நிதி இழப்புகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலாப நட்டம் தொடர்பான கோப் குழுவின் விசாரணை அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோதே, இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக சதொச, மகநெகும, இலங்கை கிரிக்கெட் மற்றும் தேசிய லொத்தர் சபை போன்றதான நிறுவனங்களும் நட்டமடைந்துள்ள நிறுவனங்களில் அடங்கியுள்ளன.

தவிர, சூரியபுர விளையாட்டு மைதானங்களுக்கு உரிமையாளர்கள் இல்லாத நிலமை காணப்படுவதாகவும், அவை சார்ந்து செலுத்தப்பட்டு வருகின்றதான 53 பில்லியன் ரூபாவானது துறைமுக அதிகார சபையாலா அல்லது இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினாலா செலுத்தப்படுகின்றது என்பதான கேள்வி எழுவதாகவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

> 2015 மே மாதம் தொடக்கம் 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியிலேயே 15 அரச நிறுவனங்களில் இருந்தான அதிக நிதி இழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் காரணமாக 530 கோடி ரூபா தொகை மதிப்புடைய நிதி இழப்பாக ஏற்பட்டுள்ளதாகவும் வீதி அதிபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தற்றதான திட்டங்களாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக 57 ஆயிரம் மில்லியன் ரூபா தொகை மதிப்புடைய நிதி செலவிடப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்திற்கு மில்லியன் கணக்கான டொலர்களும், யூரோக்களும் கிடைத்திருந்தன. அந்த நிதித் தொகை செலவிடப்பட்ட விதம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதுடன், அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் என்பவற்றின் மூலம் ஏற்பட்டுள்ள நட்டம் குறித்தும், அவை சார்ந்து நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விவாதம் மற்றும் உரிய நடவடிக்கைகள் குறித்தும் கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்னெத்தியால் கருத்துரைக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

அராலியூர் கலாபூசணம்
வி.செல்வரத்தினம் ஜே.பி.

# வில்வத்தின் மகிமை

மண்ணுலக ஆன்மாக்களின் பாவங்களைப் போக்கும் பொருட்டு சிவபெருமானின் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி ஆகியவற்றின் வடிவமாகச் சிவனருளால் தோன்றியது தான் வில்வம்.

தேவலோகத்தைச் சேர்ந்த தெய்வாம்சம் பொருந்திய ஐந்து மரங்களுள் வில்வமும் ஒன்று. பாதிரி, வன்னி, மா, மந்தாரை, வில்வம் ஆகிய ஐந்தும் தேவலோக பஞ்ச தருக்கள் என்று போற்றப்படுகின்றன. இந்த ஐந்து மரங்களுள் ஸ்பரிச தீட்சை தரும் புனிதம் வாய்ந்தது வில்வ மரம். அதாவது அதன் கிளைகளையும் இலைகலையும் தொட்டு ஸ்பரிசித்து உட்கொண்டு வந்தால் மோட்சம் கிட்டும் என்று புராணங்களில் சொல்லப்பட்டுள்ளது. வில்வ மரத்தில் (வில்வஇலை) திருமகள் வாழ்கின்றாள். அதனால் வில்வ மரத்துக்குத் திருமரம் என்ற பெயருமுண்டு. வில்வமரம் சிவசொருபமானது. முருகப் பெருமானுக்கும் பிரியமான மரம். மூவிலைகளைக் கொண்டதும் முக்குணங்களைக் குறிப்பதும் முக்கண்களைக் குறிப்பதும் திரிசூலத்தைக் குறிப்பதும் மூன்று ஜென்ம பாவங்களை எரிப்பதுமாகிய வில்வ இலையை சிவனுக்கு அர்ப்பணிப்பது சிறப்பாகும். சிவபெருமானைத் துதித்து ஒரு வில்வம் இலையைச் சமர்ப்பித்தாலும் பாவங்கள் விலகிச் சுகம் ஏற்படும். வில்வ இலையைக் கொண்ட சிவனுக்கு லட்சார்ச் சனை, கோடி அர்ச்சனை போன்ற சிறப்பான பூசைகளை செய்பவர்களுக்கு சிவபெருமான் எளிதாக அருள்புரிவார். சிவபெருமானை வில்வ இலைகளாலும் மாலைகளாலும் அலங்கரிப்பது சிறந்ததாகும். வில்வ மரம் அபூர்வமான மரம். நிறைவான சிவவழிபாட்டுக்கு வில்வ இலைகள் நிச்சயம் தேவை. எல்லாக் காலங்களிலும் வில்வ இலை கிடைப்பது அரிது. எனவே வில்வ இலை கிடைக்கும்போது போதுமான வில்வ இலைகளை எடுத்து வைத்துக் கொண்டு அவற்றை அடிக்கடி தூய்மைப்படுத்தி ஆறு மாதங்கள் வரை வழிபாட்டுக்குப் பயன் படுத்தலாம். இது தான் வில்வத்துக்குரிய தனிச் சிறப்பாகும்.



**பரமேஸ்வரனின் அடையாளம்**

பரமேஸ்வரனின் அடையாளங்களுள் உருத்திராட்சம், திருநீறு, பஞ்சாட்சரம் ஆகியவற்று டன் வில்வமும் ஒன்றாகும்.

அபிசேகப்பிரியனான சிவனுக்கு மிகவும் பிரியமானதும் சிவபூசைக்கு வேண்டியதும் வில்வம் தான். சிவனை வில்வத்தால் அர்ச்சிப்பது உத்தமம். மேலும் ஞாயிற்றுக்கிழமைகளில் சிவனை வில்வத்தால் அர்ச்சிப்பது மிகச் சிறப்பாகும். அவரின் கருணை நிச்சயமாக கிடைக்கும்.

சிவனுக்கு சிறப்பான அர்ச்சனை பஞ்சமுக அர்ச்சனை. அப்போது பயன்படுத்தப்படுபவை வில்வம் இலை, கிளுவை இலை, விளாத்தியிலை, நொச்சியிலை, மாவிலங்கையிலை

வில்வ மரம் வளர்ப்பதனால் பின்வரும் பயன்களைத் தருமென சாத்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன அசுவமேத் யாகம் செய்த பயன்கிடைக்கும், ஆயிரம் பேருக்கு அன்ன தானம் செய்த பெரும் புண்ணியம் கிடைக்கும், கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய பயன் கிடைக்கும், காசி முதல் ராமேஸ்வரம் வரையுள்ள சிவதலங்களை வழிபட்ட பயன்கிடைக்கும்.

வில்வ மரத்தை முறைப்படி விரதமிருந்து பூசிப்பவர்கள் அனைத்து நன்மைகளையும் அடைவார்கள்.

பழைமையானவை, உலர்ந்தவை என்ற குறையெல்லாம் வில்வம் இலைகளுக்கு இல்லை. அவற்றைப் பறித்த நாளிலிருந்து ஆறு மாதம் வரையில் பயன்படுத்தலாம். புழுக்கள், பூச்சிகள் கடித்த வில்வ இலைகளை வழிபாட்டுக்குப் பயன்படுத்தக் கூடாது. மேலும் இடுகாடு முதலிய இடங்களில் உள்ள மரங்களில் பறித்த தூய்மையற்ற இலைகளையும். பயன்படுத்தக்கூடாது. மாதப்பிறப்பு, சோமவாரம், அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, அட்டமி, நவமி ஆகிய நாள்களில் எதற்கும் வில்வம் பாவிக்கக் கூடாது.

வில்வத்தின் பெருமை சாஸ்திரங்களில் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. வில்வத்தின் மூன்று இலைகள் சிவபெருமான் ஏந்தியுள்ள திரிசூலத்தின் வடிவத்தையும், இறைவனின் முக்கண்களையும் காட்டும் வடிவில் அமைந்துள்ளது.

வில்வத்தில் திருமகள் இருப்பதால் அடியார்கள் செல்வங்களையெல்லாம் இறைவன் திருவடிகளிலேயே அர்ப்பணித்து விட்டு அவன் திருவருளைப் மட்டுமே வேண்டுகின்ற நிலையை வில்வ இலை அர்ச்சனை காட்டுகிறது.

**வில்வத்தின் மகிமையை விளக்கும் கதைகள்**

அரசன் ஒருவன் கொடுங்கோலனாக ஆட்சி செய்து வந்தான். அவன் அடிக்கடி காட்டுக்குப் போய் வேட்டையாடுவது வழக்கம். காட்டுக்குப் போகும்போது தங்கியிருந்து வேட்டையாட வசதியாகக் குளக்கரையில் ஒரு வில்வ மரத்தை நட்டான். ஒரு சமயம் அவன் வழக்கம்போல் காட்டுக்குச் சென்று வேட்டையாடி முடிந்ததும் இளைப்பாறுவதற்காகத் தான் நட்டு வளர்த்த வில்வமரத்தை நோக்கிச் சென்றான். அரசன் வில்வ மரத்தை நெருங்கியபோது அங்கிருந்த முனிவர் ஒருவரின் விபூதித் துகள் காற்றில் பறந்து வந்து அவன்முகத்தில் பட்டது. அவ்விதம் விபூதி பட்டவுடன் நல்லுணர்வு வரப்பெற்ற அரசன் முனிவரைப் பணிந்து வணங்கினான்.

முனிவர் அரசனை நோக்கி "மன்னா! நீ இரக்கமற்ற கொடுங்கோலனாக இருந்தாலும் வில்வ மரத்தின் பெருமைகளை அறியாமலேயே அதைப்பிரதிஷ்டை செய்து அவ்வப்போது அதன் அடியில் தங்கியதால் உன் பாவங்கள் உன்னை விட்டு போய்விட்டன, நீ இப்போது புனித மனிதனாக மாறிவிட்டாய்" என்று கூறி அவனை ஆசீர்வதித்தார்.

மேலும், ஒரு வேடன் ஒரு சிவராத்திரியில் புலிக்குப் பயந்து வில்வ மரத்தில் உட்கார்ந்து வில்வமிலையைப் பறித்து இரவு முழுவதும் கீழே போட்டுக் கொண்டிருந்தான். அவை வில்வ மரத்தின் கீழே இருந்த சிவலிங்கத்தின் மேல் விழுந்தன. சிவராத்திரியன்று பூசை செய்ததன் பயனாக அவனுக்கு சிவதரிசனமும் அருளும் கிட்டியது. என்று வில்வ இலையின் மகிமையைக் கூறும் இன்னும் ஒரு கர்ணபரம்பரைக் கதையுமுண்டு.

**திருவாதிரையும் திருவோணமும்**

சிவபெருமானுக்கு உரிய நட்சத்திரம் திருவாதிரை. வானசாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் திருவாதிரையை எரி நட்சத்திரம் என்று கூறுகிறார்கள். ஜேர்மனியைச் சேர்ந்த ஓர் ஆராய்ச்சியாளரே இதனைப் ஒளிப்படம் எடுத்தார். அந்தப்படம் சூரியனைப்போல் பிழம்பாக இருந்தது. ஏன் அப்படியென்று ஆராய்ந்ததில் படம் எடுத்த அன்று திருவாதிரை நட்சத்திரத்தின் நேர் கோணத்தில் திருவோண நட்சத்திரம் இருப்பதைக் கண்டுபிடித்தார்.

இதன் மூலம் அறியக்கூடியது திருவாதிரை நட்சத்திரம் வெப்பத்தைக் கொடுக்கக்கூடியதும் என்பதும் திருவோணம் குளிர்சியைக் கொடுக்கக்கூடியதும் என்பதுமாகும் அதனால் தான் ஞானத்தால் உணர்ந்த முனிவர்கள் அதிக குளிர்ச்சியான வில்வத்தை சிவனுக்கும் வெப்பத்தைக் கொடுக்கக்கூடிய துளசியை மகா மகாவிஷ்ணுவுக்கும் அர்ச்சனைக்குப் பயன்படுத்தினார்கள்.

வில்வம் உலர்ந்து போனனதாக இருந்தாலம் பூசை செய்வதற்குத் தகுதியுடையது. வீட்டில் பூசை செய்ய இயலாதவர்கள் சிவாலயம் சென்று வில்வத்தால் அர்ச்சனை செய்து வழிபட்டால். சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்.

**வில்வத்தின் மருத்துவப் பயன்கள்**

வில்வ மரத்தின் வேர், பட்டை இலை, பழம் முதலியவை நோய்தீர்க்கும் மருந்தாகும். குடற்புண், குருதிக்கொதிப்பு, குருதிச்சோகை முதலிய நோய்களுக்கு வில்வம் இலை குணம் தரும். வில்வ மரத்தின் இலைகளைப் பறித்து வதக்கி இளஞ்சூட்டுடன் கண் இமையில் ஒற்றடம் செய்யக் கண் வலிகள், கண்சிவப்பு, கண் அரிப்பு போன்றவை குணமாகும். இலையை மென்று சாப்பிடுவதால் உடல் உஷ்ணம் குறையும். வில்வமலர் நா வறட்சி, வாந்தி ஆகியவற்றைத் தணிக்கும்.

குடலிலுள்ள கிருமிகளையும், புழுக்களையும் அவ்வப்போது வெளியேற்ற தினமும் ஐந்து வில்வம் இலைகளை வெறும் வயிற்றில் மென்று சாப்பிடவேண்டும். இதனால் மலச்சிக்கலும் நீங்கும்.

வில்வக்கொழுந்துகள் ஊறவைக்கப்பட்ட பயற்றம்பொடியைத் தேய்த்துக் குளித்துக் கொண்டால் சரும வியாதி எதுவும் அண்டாது. மாதவிலக்கு வரம்பு மீறி ஏற்படும் மாதர்களுக்கு வில்வ இலையை அரைத்து அதிகாலையில் உண்ணக் கொடுத்தால் குருதிப்போக்கு உடனே கட்டுப்பட்டுவிடும்.

வில்வ வேரை இடித்து நீரில் கொதிக்க வைத்து காய்ச்சிய பசும்பாலுடன்சேர்த்துதினமும்காலையில்உண்ணும்ஆண்கள் ஆண்மை திறமும் முகப்பொலிவும் அடையப்பெறுவர்.

வில்வ இலைகளைத் தண்ணீரில் பன்னிரெண்டு மணி நேரத்துக்குக் குறையாமல் ஊற வைத்து அதன் பின்னர் அந்த நீரை உட்கொள்வதால் உடம்பின் ஒவ்வொரு அணுவும் புத்துயிரூட்டப்படுகிறது. அதாவது வில்வ இலைநீரில் செலுத்தும் மின்காந்த அலைகள் நமது உடலுள் புகுந்து செயற்படுவதே இதற்குக் காரணம். மற்றும் செப்புக் குவளையில் உள்ள நீரில் வில்வ இலையை ஊறப் போடும்போது அதில் அலைகளின் செயல்வேகம் மேலும் அதிகரிக்கின்றது. வில்வ இலையைக் காய வைத்துப் பொடி செய்து வைத்துக் கொண்டு காலையில் வெறும் வயிற்றில் அரை தேக்கரண்டி வாயில் போட்டு விழுங்க வேண்டும். ஒரு கப் தண்ணீர் குடிக்கவேண்டும். இரவும் அதுபோல்செய்து வந்தால் கீழ்கண்ட வியாதிகள் நீங்கும்.

01.கண்பார்வை தெளிவாகும்

03.மூக்கடைப்பு, சளி, இருமல் ஆகியன குணமாகும்.

03.பற்சொத்தை, பல்வலி, பற்கூச்சம் ஆகியவை தீரும்

வில்வம் பழங்களில் இருக்கும் சதைப் பகுதியை நீக்கிப் பின் உலர்த்திக்குடுவையாக்கி சைவர்கள் விபூதி வைத்துக் கொள்ளவும் பயன் படுத்துவதுண்டு. இதனால் மங்கலம் உண்டாகும் என்பதும் சான்றோர்களின் கணிப்பு.









உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜெனிவா தீர்மானமும் இலங்கை அரசு கோரவிருக்கும் கால அவகாசமும்

**2015** ஆம் ஆண்டு இலங்கை அரசின் அனுசரணையோடு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் காணப்படும் எந்தவொரு பரிந்துரையும் இதுவரை முழுமையாக செயற்படுத்தப்படவில்லை. தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது தமிழ் மக்கள் மத்தியில் துளிர்த்தெழுந்த நம்பிக்கை ஒளியானது அரசினதும் அரசுத் தலைவர்களதும் மெத்தனப் போக்கான செயற்பாடுகளால் மீண்டும் பழைய நிலைக்குக் கீழ் இறங்கிவிட்டது. அரசின் மீதும் அதன் தலைவர்கள் மீதும் அவர்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இந்த நிலைமையில் தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு அரசு மேலும் அவகாசம் கோரப் போவதாக வெளிவந்துள்ள செய்திகள் தமிழ் மக்களை முற்றாகவே விரக்தி நிலைக்குத் தள்ளியிருக்கிறது. அதனால்தான் அவர்கள் தமது சொந்த நிலங்களை இராணுவத் திடமிருந்து மீட்பதற்கான போராட்டங்களை மேலும் வலுப்படுத்தி வருகிறார்கள். வேறுபல கோரிக்கைகள் மீதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுமானால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பை முற்றாகவே அனுமதிக்கப் போவதில்லை என்பதில் பாதிக் கப்பட்ட மக் களின் பெரும் ஆதரவுடன் தெரிவான அரச தலைவரே உறுதியாக ஒற்றைக்காலில் நிற்பது தமிழ் தரப்பினரின் ஆதரவை அரசு படிப்படியாக இழந்து போகும் நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளோடு களத்தில் இறங்கிப் போரிட்டவர்களைவிட அவர்களுக்குப் போர்க்குற்றம் புரியும் அளவுக்கு கட்டளைகளை இட்டவர்கள், பின்னால் இருந்து திட்டங்கள் தீட்டி வழங்கியவர்கள், குற்றம் புரிந்த வர்கள்யார் என்று தெரிந்த பின்பும் அவர்களை மாவீரர் களாகப் பட்டங்கள் சூட்டியும் பதக்கங்கள் வழங்கியும் கௌரவித்தவர்கள் போன்றவர்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் பன்னாட்டு நீதிபதிகள் அடங்கிய நீதிமன்றத்தின் முன் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும், என்பதையே பாதிக்கப்பட்ட மக்கள் கோரி நிற்கிறார்கள். இதனை ஜெனிவாவில் கூடவிருக்கும் மனித உரிமை கள் சபை, சரியாகப் புரிந்து கொண்டு செயற்படுவது அவசியம்.

குற்றம் புரிந்தவர்களாகக் கருதப்படுபவர்கள் பெரும்பாலும் பெரும்பான்மை இனத்தவர்கள். பெரும்பான்மை இனத்தவர்கள் அவமதிப்புக்குள்ளாவதில் அதே இனத்தவர்களான அரசுத்தலைவருக் கும் தலைமை அமைச்சருக்கும் உடன்பாடு இல்லாமலிருக்கலாம். ஆனால் நாட்டில் தர்மம் நிலைத்தாக வேண்டும், நீதி செயற்பட்டாக வேண்டும் என்று கருதப்படுமானால், பாதிக்கப்பட்டு நீதி கேட்டு தவித்து நிற்கும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

சிங்களப் பெரும்பான்மையினர் சொல்வதைத்தான் சிறுபான்மை யினர் கேட்க வேண்டும், அவர்கள் கொடுப்பதைப் பெற்றுக் கொண்டு பேசாமல் இருக்கவேண்டும் என்றெல்லாம் அமைச்சர் சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் அரசில் இருந்துகொண்டே பிதற்றிக் கொண்டிருப்பதன் உள்நோக்கம் புரிந்து கொள்ளப்படுவது அவசியம். தமிழர்களுக்கு முள்ளிவாய்க்கால் நிலைமை மீண்டும் ஏற்படாமல், அவர்கள் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றெல்லாம் முன்பும் பல முறை அவர் எச்சரிக்கை விடுத்து வந்துள்ளார். உரிமைகளைக் கேட்டு நிற்பதும் அதற்காகப் போராடுவதும் தமிழ் மக்களின் உரிமை. அதனை அவர்கள் பலாத்கார முறையில் முன்னெடுக்க விரும்பவில்லை. இதை பேரினவாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்பொழுது ஜெனிவா மனித உரிமைச் சபை அமர்வில் இலங்கை அரசு அவகாசம் கோருமானால், அதற்கான சில நிபந்தனைகள் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

காணி விடயம், காணாமற்போனோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடயம், உண்மை, நீதி அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரம், இவை மீண்டும் நிகழாமல் இருக்க நிரந்தர அரசியல் தீர்வைக் காணுதல் உள்ளிட்ட விடயங்களில் நாம் திருப்தி அடையக் கூடிய விதத்தில் எதுவும் நடைபெறவில்லை. இந்த நிலைமை தொடராமல் இருக்க வேண்டும். இவ்வாறான நிலைமையில் கால அவகாசம் வழங்கப்படுவதானால் அதற்கு ஐ.நா. மேற்பார்வை அவசியம் என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறவிரும்புவதாக சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

போர் முடிந்து 7 வருடங்களுக்கு மேல் ஆகியும் நிரந்தரத் தீர்வு எதனை யும் வழங்க முடியாமல் இருக்கும் அரசும் அவ்வாறு அரசை நிர்ப்பந்திக்க முடியாமல் இருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையும் சம்பந்தனின் ஆலோசனையை ஏற்றுக்கொள்வது அவசியம். இவைகள் மட்டு மல்ல, அவகாசம் வழங்கப்படுமானால் சம்பந்தன் கால வரையறைக் குள் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பான பரிந்துரைகளையும் குறிப் பாக பன்னாட்டு நீதிபதிகள் போன்ற அம்சங்களையும் இலங்கை முன்பு வழங்கியுள்ள வாக்குறுதிகளுக்கு ஏற்ப செயற்படுத்துவதாக இணக் கப்பாடு காணப்படுவது அவசியம். இவைகளைத் தமிழர் தரப்பு ஜெனிவாவில் முன்கூட்டியே வலியுறுத்துவது வரவேற்கத்தக்கது. பன்னாட்டு அழுத் தங்கள் இருந்தால் மட்டுமே இந்த நாட்டில் நீதி நியாயத்தை சிறு பான்மை மக்கள் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பது கடந்த கால அனுபவம் என்பதை சிறுபான்மையினர் மறந்து விடா மல் இருக்க வேண்டி யது மிக மிக முக்கியம் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச்சலுகை பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்தரவல்லது

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை மீண்டும் இலங்கைக்குக் கிடைக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. அது குறித்த மூத்த விரிவுரையாளர் அமிந்த மெத்சில தெரிவித்த கருத்துக்கள் இவை.

சிங்கள மூலம் - மவ்பிம
தமிழில் - வீ.எஸ்.ரீ

**கேள்வி**- ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை மீண்டும் பெற இலங்கை அரசு பல நிபந்தனை களுக்குக் கீழ்ப்படிய வேண்டி யுள்ளதாக மேற்கொள்ளப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து....

**பதில்:** 2004 ஆம் ஆண்டைய ஆழிப் பேரலை இடரையடுத்தே ஐரோப்பிய ஒன்றியம் 2005 ஆம் ஆண்டு முதல் இலங் கைக்குக் குறித்த வரிச் சலு கையை வழங்க முன்வந்தது. 2010ஆம் ஆண்டில் நிறுத்தப் பட்ட அது ஓர் அரசியல் ரீதியான செயற்பாடே. அரசியல் ரீதியான கூட்டு ஆலோசனை பலவற் றின் அடிப்படையில் நிபந்தனை மற்றும் மரபு வழி ஒப்பந்தம் என அதனைக் குறிப்பிடலாம். கூட்டு ஆலோசனை என்பது குறிப்பிட்ட சில நாடுகளி டையே யான இணக்கப்பாடு எனக் கொள்ளத்தக்கது. இலங்கைக் கான அந்தச் சலுகையை 27 அம்ச ஆலோசனைகளுடன் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கி யுள்ளது. இவையாவும் 2005 ஆம் ஆண்டுமுதல் அரசால் இணங்கிக் கொள்ளப்பட்டவை. ஏற்கனவே ஏற்றுக்கொண்ட அந்த அம்சங்களை நடை முறைப்படுத்துமாறே ஐரோப் பிய ஒன்றியம் இலங்கையை வற் புறுத்துகிறது. இவற்றுடன் புதி தாக எத்தகைய யோசனை யும் சேர்த்துக்கொள்ளப்பட வில்லை.

**கே:** ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன் றியம் வெவ்வேறு நாடு களுக்கு வழங்குவதற்கான காரண மென்ன?

**ப:** வறிய நாடுகள் தமது வர்த்தக சந்தைகளில் இணைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக் கும் நோக்குடன் அபிவிருத்தி யடைந்த நாடுகளால் 1968 ஆம் ஆண்டில் ஜி.எஸ்.பி. வரிச் சலுகை அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், அது 1971ஆம் ஆண்டிலேயே நடைமுறைப் படுத்தப்பட ஆரம்பித்தது. இந்த வரிச்சலுகை நடைமுறை ஐரோப்பிய ஒன்றியத்தால் 2005 ஆம் ஆண்டில் மாற்றம் செய்யப்பட்டது. அதன் பின்னர் அது ஜீ.எஸ்.பி, ஜி.எஸ்.பி.பிளஸ் மற்றும் பேராயுதங்கள் தவிர்ந்த அனைத்தும் எனக் கூறப்படும் ஏ.பி.ஏ. என மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டது. ஜி.எஸ். பி. பிளஸ் சலுகை மூலம், ஐரோப்பிய ஒன்றிய நாடுக ளுக்கு ஏற்றுமதி செய்யும் 7200 வகையான பொருள்களுக்கு முற்று முழு தான வரிச்சலுகை வழங்கப் படுகிறது. இது உலகின் மிக வறிய நாடுகளுக்கு மட்டுமே





2010 ஆம் ஆண்டில் இலங்கை அரசுமீது முக்கிய மூன்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. குடிசார் மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் நாட்டில் நிலவிய கொடூர அடக்குமுறை மற்றும் சிறுவர்களைப் போராளிகளாக உருவாக்கும் நடைமுறையை அனுமதித்தமை என்பவையே அவையாகும். சிறுவர் போராளிகள் விடயத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர்களில் ஒருவரான கருணா அம்மானுக்குப் பாதுகாப்பு வழங்கியதன் மூலம் இலங்கை அரசு மீதும் அதற்கான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இவற்றின் அடிப்படையில் 2010 ஆம் ஆண்டில் இலங்கைக்கான ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்திக்கொண்டது.

வழங்கப்படுமொரு வாய்ப்பாகும்.

**கே:** இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை 2010ஆம் ஆண்டில் நிறுத்தப் பட்டதேன்?

**ப:** 2010 ஆம் ஆண்டில் இலங்கை அரசுமீது முக்கிய மூன்று குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. குடிசார் மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் நாட்டில் நிலவிய கொடூர அடக்குமுறை மற்றும் சிறுவர்களைப் போராளிகளாக உரு வாக்கும் நடைமுறையை அனுமதி த்தமை என்பவையே அவையாகும். சிறுவர் போராளிகள் விடயத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர்களில் ஒருவரான கருணா அம்மானுக்குப் பாதுகாப்பு வழங்கியதன் மூலம் இலங்கை அரசு மீதும் அதற்கான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இவற்றின் அடிப்படையில் 2010ஆம் ஆண் டில் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்திக்கொண்டது.

**கே:** ஐரோப்பிய ஒன்றியத்தின் குறித்த கூட்டு ஆலோசனை உடன்பாட்டை மகிந்தவின் அரசுதான் மேற்கொண்ட தாகக் கூற வருகிறீர்களா?

**ப:** இந்த உடன்பாடு 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. 2005 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை மகிந்தவின் தலைமையிலான அரசே பதவி வகித்தது. எனவே மகிந்த தரப்பினர் குறித்த உடன்பாட்டை மீறவோ விமர்சிக்கவோ வாய்ப்பிருக்காது.

**கே:** இந்த உடன்பாடு தொடர்பான குற் றச்சாட்டுக்கள் மீது இன்றைய அரசு சுற்றவாளியானால் அது குறித்து கூட்டு அரசு விளக்கமளிக்காதது ஏன்?

**பதில்-** இந்த விடயத்தில் இன்றைய அரசுத் தரப்பினர் எவருக்கும் போதிய தெளிவு கிடையாது. அரசின் உயர் மட் டத்தில் குறிப்பிட்ட ஒருசிலர் மட்டுமே அது குறித்து அறிந்துள்ளார்களேயன்றி ஏனையோருக்கு அது குறித்து எதுவும் தெரியாது.

ஏன் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 90 சதவீதமானோருக்கு அது குறித்த விவரமெதுவும் தெளிவாகத் தெரியாது.

**கே:** இந்த உடன்பாடு காரண மாக நாடு பிளவுபடும் அபாயம் உள்ளதாகக் கூட்டு எதிரணி குற்றஞ்சாட்டுகிறதே?


**ப:** ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகள் இலங்கை போன்ற நாடுகளுக்கு நோக் கம்எதுவுமின்றிஉதவுவதில்லை. தமது நிலைப்பாட்டுக்கு ஏற்ப எம்மை மாறவைப்பிக்கவே அவை முயல்கின்றன. நாம் எமது நிலைப்பாட்டிலிருந்து மாறாது விட்டால், அவற்றின் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேர்கிறது. ஐரோப் பிய ஒன்றியத்தின் 27 நிபந் தனைகளை நடைமுறைப் படுத்திக் காட்டுவதே இந்த விடயத்தில் நாம் மேற்கொள் ளத்தக்க செயற்பாடாகும்.

**கே:** ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையால் நாட்டின் பொரு ளாதாரத்துக்கு நிவாரண மெதனையும் பெற்றுக் கொள்ள இயலுமா?

**ப:** ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலு கையால் எமது ஏற்றுமதிவாய்ப்பு அதிகரித்தது. அது 2010 இல் நிறுத்தப்பட்டதால், பல தொழிற் சாலைகள் மூடப்பட்டன. நாடு பெரும் நட்டத்தைச் சந்தித்தது. ஆயினும் ஒரு சில தொழிற் சாலைகள் தொடர்ந்தும் உற் பத்தியை மேற் கொண்டன. இந்த வரிச் சலுகை நன்மைய ளிக்குமொன்றெனநான் நம்ப வில்லை. மறுபடியும் சலுகை நிறுத்தப் பட்டால் முழு தொழில் முயற்சிகளுமே சிறைப்பட்ட நிலையை எதிர்கொள்ள நேரும்.

**கே:** நாட்டில் அண்மைக் காலமாக அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள் இடம்பெறுகின் றனவே. இந்த நிலையில் வெளிநாடுகள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள வாய்ப்புக்கள் ஏற்படுமா?

**ப:** இலங்கையில் தம்மால் வர்த்தக முயற்சிகளை மேற் கொள்ள இயலுமென்ற அரசி யல் ரீதியான, பொருளாதார ரீதியான பாதுகாப்பை நாம் ஏற்படுத்திக் கொடுத்தால் மட் டுமே அதற்கான நம்பிக்கை களை வெளிநாடுகள் மத்தி யில் ஏற்படுத்த முடியும். அத்தகைய நிலை இன்று நாட்டில் காணப்படவில்லை. அந்த வகையில் முன்னைய அரசோ, தற்போதைய அரசோ வெளிநாட்டு முதலீடுகளுக் கான நம்பிக்கையை ஏற் படுத்தத் தவறியுள்ளன. நாட்டில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இந்த நாட்டில் குடிசார் போராட் டங்கள் உள்ளதாக வெளிநாடு களை நினைக்க வைக்கின்றன. பொருளாதார ரீதியில் நாட்டை நலிவுபடுத்தி, அதன் மூலம் அதிகாரத்தைக் கைப் பற்ற எண்ணும் ஒருதரப்பி னரது செயற்பாடுகளே இவை என் பதை நாட்டு மக்களுக்கு அரசு தெளிவுபடுத்துமானால் அந் தத் தரப்பினர்களது இத்தகைய முயற்சிகளை நாட்டு மக்கள் புறம் த்தள்ளிவிடக்கூடும்.



# வாசகர் திருமுகம்

## மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது நல்லாட்சியின் முக்கிய கடமையாகும்

குடாநாட்டில் அரிசி, தேங்காய் ஆகிய முக்கிய பாவனைப் பொருள்களின் விலைகள் அதி கரித்துச் செல்வதால் நடுத்தர மற்றும் ஏழைமக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதைவிட மரக்கறி, மீன் ஆகியனவும் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்யப்பட்ட போதிலும் அந்த விலைக்கு அதை வாங்க முடியாத நிலையே காணப்படுகின்றது. தனியார் வர்த்தகர்கள் சிறிதளவும் இரக்கமில்லாதவர்களாக நடந்து கொள்கின்றனர். முன்னரெல்லாம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக அன்றாடப் பாவனைப் பொருள்கள் நுக்வோருக்கு வழங்கப்பட்டு வந்தன.

ஆனால், இன்று அந்த நிலை இல்லை. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நொடிந்த நிலையில் அவற்றின் ஊழியர்களுக்கு வேதனத்தை வழங்குவதற்கே திண்டாடிக் கொண்டிருக்கின்றன. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் ஊடாக அரிசியும் பிற அத்தியாவசியப் பொருள்களும் விநியோகிக்கப்படவிருப்பதாக அரசு கூறிவருகின்றபோதிலும் அவற்றின் கிளைகளைக் கிராமப் புறங்களில் காணமுடியவில்லை. அநேகமாக நகரப்புறங்களிலேயே இவை காணப்படுவதால், நகரத்தில் வசிக்கின்ற மக்களே இவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர்.

மழை பொய்த்ததால் அரிசி, தேங்காய் ஆகியவற்றின் விலைகள் குறையுமென நாம் எதிர்பார்க்க முடியாது. அரசு மாற்று வழிகளைக் கையாண்டு இவற்றைச் சாதாரண மக்களும் கொள்வனவு செய்யும் வகையில் ஏற்பாடுகளை மேற் கொள்ளவேண்டும். இதுவே நல்லாட்சியின் பண்பும் கூட, ஆகவே அரசு இனியும் தாமதித்துக் கொண்டிருக்காது உரிய நடவடிக்கை எடுப்பது அவசிய மானதாகும்.

*மா.காந்தன்*
*கைதடி*

**கஷ்டப்பட்டு குளிர்சாதனப் பெட்டி வாங்கி கொடுத்தேன் பயனா கிடைக்கிறது....**



பழைய சட்னியும் சாம்பாரும்...

## பெரும் எதிர்பார்ப்புடன் மோட்ட சிவா கெட்ட சிவா

ராகவா லோரன்ஸ் நடிக்கும் 'மொட்ட சிவா கெட்ட சிவா' திரைப்படம் இரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பைத் தூண்டியுள்ளது. திரைப் படப் பணிகள் யாவும் ஏற்கனவே நிறைவடைந்து விட்டன. எனினும் பல சிக்கல்களின் மத்தியில் இந்த மாதம் திரைப்படம் வெளியாகவுள்ளது. மிகவும் எதிர்பார்புள்ள இந்தத் திரைப்படத்தின் முன்னோட்டம் கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி வெளியானது. முன்னோட்டம் வெளியாகி இரண்டு வாரங்கள் ஆகியுள்ள நிலையில், இதுவரை 30 இலட்சத்துக்கும் அதிகமானோர் அதனைப் பார்த்துள்ளனர். மேலும் 43 ஆயிரம் பேர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

முன்னோட்டமே மக்கள் மத்தியில் பெரும் ஆர்வத்தைத் தூண்டியுள்ளதால், திரைப்படம் எந்தளவுக்கு மக்களை ஈர்க்கும் என்பதில் இரசிகர்கள் ஆர்வத்துடன் உள்ளனர். முன்னணித் திரையரங்குகளும் இந்தத் திரைப்படத்தைக் காட்சிப்படுத்துவதற்குப் போட்டி போட்ட வண்ணம் உள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.





**இவர்கள் இருவரும் ஒரு காலத்தில் இணைபிரியா காதலர்கள்**



தந்தை: பரீட்சை மண்டபத்திலே தூங்கிட்டு வாறேனென்டு சொல்றியே, வெக்கமாயில்லை.
மகன்: நீங்கதானேப்பா கேள்விகளுக்கு விடை தெரியலைன்னு முழிச்சுட்டு இருக்காதேன்னு சொன்னீங்க.



ஹெல்மெட்டுக்கும் மனைவிக்கும் பெரிய வித்தியாசமில்லை. தலையில தூக்கி வச்சிருந்தீங்கன்னா தப்பிப் பிழைச்சிடுவீங்க!


## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | | 5 | | | |
| | 5 | 2 | | 7 | | 4 | 3 | |
| 7 | | | | | | | | 1 |
| | | 6 | 4 | | 7 | 9 | | |
| | | | 9 | | 3 | | | |
| | | 4 | 8 | | 1 | 7 | | |
| 4 | | | | | | | | 2 |
| | 8 | 3 | | 1 | | 6 | 9 | |
| | | | 5 | | 8 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 2 | 6 | 5 | 7 | 3 | 4 | 8 |
| 8 | 3 | 6 | 4 | 9 | 2 | 5 | 7 | 1 |
| 7 | 5 | 4 | 3 | 1 | 8 | 9 | 2 | 6 |
| 6 | 1 | 5 | 8 | 4 | 9 | 7 | 3 | 2 |
| 2 | 4 | 3 | 7 | 6 | 5 | 1 | 8 | 9 |
| 9 | 7 | 8 | 2 | 3 | 1 | 4 | 6 | 5 |
| 5 | 6 | 7 | 9 | 8 | 4 | 2 | 1 | 3 |
| 4 | 8 | 1 | 5 | 2 | 3 | 6 | 9 | 7 |
| 3 | 2 | 9 | 1 | 7 | 6 | 8 | 5 | 4 |

**இந்த அரசியல் வாதிகளெல்லாம் இறந்துட்டா வானத்த பாத்து 21 ரவுண்டு ஏன் சுடுறாங்கன்னா!?**



ஆவியா கூட இந்த நாட்டில சுத்தக் கூடாதெண்டுதான்....!

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** நண்பர்களால் தொந்தரவுக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான அளவில் வருமானம் இருக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் ஏற்படலாம். பெணகளுக்கு சகோதர வழியில் உதவி கிடைக்கும்.

**இடபம்:** பேச்சில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை தவறாமல் பின்பற்றவும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் கவனம் செலுத்துவர்.

**மிதுனம்:** பேச்சில் அன்பும், பண்பும் மிகுந்திருக்கும். உறவினர் மத்தியில் மதிப்பு உயரும். தொழில், வியாபாரம் செழிக்க முழு முயற்சியுடன் பணிபுரிவீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

**கடகம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம், விலகி இருக்கவும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். ஆரோக்கியம் சீராகும். பெணகள் பணம், நகை இரவல் கொடுக்கக் கூடாது.

**சிங்கம்:** செயலில் அறிவுத் திறமை பளிச்சிடும். தாமதித்த பணி எளிதில் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை உருவாகும். லாபம் இரட்டிப்பாகும். கடன்ாகக் கொடுத்த பணம் கிடைக்கும்.

**கன்னி:** எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். யாரிடமும் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மந்த நிலை ஏற்படலாம். லாபம் சுமார். வீடு, வாகன வகையில் மாறுதல் செய்ய முயல்வீர்கள்.

**துலாம்:** செயலில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளாச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். பணியாளர்களுக்குப் பாராட்டு வெகுமதி கிடைக்கும்.

**விருச்சிகம்:** செயலில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**தனுசு:** உங்களின் நற்செயலைச் சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரம் செழிக்கக் கூடுதல் உழைப்பு தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**மகரம்:** சிலர் பேச்சால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். தகுதிக்கு மீறி யாருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இடையூறை தாமதமின்றிச் சரிசெய்வது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** தாமதித்த செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். புதிய வீடு, வாகன சேர்க்கை உண்டாகும். மாணவர்கள் போட்டியில் பங்கேற்று வெற்றி பெறுவர்.

**மீனம்:** மனதில் கலை உணர்வு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தின் வளர்ச்சியைக் கண்டு பலரும் வியப்படைவர். புதிய வழியில் வருமானம் கிடைக்கும். சுபவிடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும்.

# 2017 பெப்ரவரி மாத பலன்



## கன்னி

வாக்கு நாணயம் தவறாமலும் உண்மைக்காகப் பாடுபடும் குணமும் உடைய கன்னி ராசியினரே! இந்தக் காலகட்டத்தில் ராசிநாதனான புதன் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் நட்பு வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். ராசியை செவ்வாய் மற்றும் சுக்கிரன் தனது ஏழாம் பார்வையால் பார்க்கிறார்கள். தாமதமாகியிருந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறுவதோடு மட்டுமல்லாமல் மனதில் புதிய திட்டங்கள் உருவாகும். புதிய தொடர்புகளால் நன்மை உண்டாகும். ராசிக்கு ஐந்தாம் இடத்தில் சூரியன், ராசிநாதன் புதன் சஞ்சாரம் செய்வதால் வீண் பகை, மனச் சஞ்சலம், தேவையற்ற செலவு என்பன ஏற்படும். ராசிநாதனும் தொழில் ஸ்தானாதிபதியுமான புதன் தொழில் ஸ்தானத்திற்கு மறைந்திருந்தாலும் குருவும் செவ்வாயும் தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதன் மூலம் வியாபாரம் மூலம் உண்டாகும் செலவுகள் குறையும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள்.

ஆனால் அவர்களிடம் திறமையாகப் பேசி தக்க வைத்துக் கொள்வது நல்லது. வியாபாரம், தொழில் போன்றவற்றை விரிவாக்கம் செய்ய புதுத் திட்டங்களைப் பற்றி ஆலோசனை செய்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். புதுத் தொழிலில் முதலீடு செய்யும் போது கவனம் தேவை. குடும்ப ஸ்தானத்தில் குரு சஞ்சாரம் செய்கிறார். குடும்பாதிபதி சுக்கிரன் ராசியைப் பார்க்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களுடன் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. குழந்தைகளின் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுவது நல்லது. நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் கூறும் கருத்துக்களுக்கு எதிர்த்துப் பேசுவதை விட்டுவிட்டு நிதானமாக உங்கள் கருத்தைச் சொல்வது நன்மை தரும். பெண்களுக்குக் கடன் பிரச்சினைகள் குறையும்.

புதிய எண்ணங்கள் உண்டாகும். புது நபர்களின் நட்பும் கிடைக்கலாம். கலைத்துறையினருக்கு இருந்த பிரச்சினைகள் நீங்கும். காரிய அனுகூலம் உண்டாகும். மனதில் ஏதாவது கவலை இருந்து வரும். இஷ்ட தெய்வத்தை வழிபட கவலை குறையும். ஆன்மிக நாட்டத்தை அதிகரித்துக் கொள்வதன் மூலம் மன நிம்மதி ஏற்படும். அரசியல்துறையினருக்கு உழைப்பிற்கான அங்கீகாரம் கிடைக்கும். மனதிற்குச் சந்தோசமான காரியங்கள் நடக்கும். லாபம் அதிகரிக்கும். பணியாள்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். புகழ் கிடைக்கும். பங்குதாரர்கள் மூலம் சில தொந்தரவுகள் நேரிடலாம். மாணவர்கள் வீண் விவாதங்களைத் தவிர்த்து, கூடுதல் நேரம் ஒதுக்கிப் பாடங்களைப் படிப்பது முன்னேற்றத்திற்கு உதவும்.

**பரிகாரம்:**
விஷ்ணு சகஸ்ர நாமத்தை பாராயணம் செய்து வர எதிர்ப்புகள் அகலும். செல்வம் சேரும். மன நிம்மதி உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**
திங்கள், புதன், வெள்ளி.

## நாளை மாசி-02

செவ்வாய்க்கிழமை -14.02.2017
திதி: சதுர்த்தி முழுவதும்
நட்சத்திரம்: உத்தரம் மு.ப.11.30
சுபநேரம்:11.03-12.33 வரை
ராகுகாலம்:03.33-05.03 வரை
சங்கடஹர சதுர்த்தி

## வரலாற்றில் இன்றைய தினம்

1542- எட்டாம் ஹென்றியின் ஐந்தாவது மனைவி கத்தரின் ஹவாட் விபசாரக் குற்றச்சாட்டில் சாவுத் தண்டனைக்குள்ளானார்.
1633 - சூரியனைப் பூமியும் ஏனைய கிரகங்களும் சுற்றி வருகின்றன என்ற கலிலியோ கலிலியின் கூற்றுக்காக அவர் விசாரணைக்காக றோம் நகரை வந்தடைந்தார்.
1689 - இங்கிலாந்தின் இணைந்த ஆட்சியாளர்களாக வில்லியமும் மேரியும் அறிவிக்கப்பட்டனர்.
1739 - இந்தியாவின் மொகலாயப் பேரரசர் மொகமட் நடோவின்படையால் தோற்கடிக்கப்பட்டார்.
1880 - தோமஸ் எடிசனால் மின்குமிழ் கண்டு பிடிக்கப்பட்டது.
1931 - கல்கத்தாவிலிருந்து புதுடில்லிக்கு பிரிட்டன் ராச்சியத்தை மாற்றும் பணி முழுமையடைந்தது.
1983- இத்தாலி ரூரினில் சினிமா கொட்டகையில் தீப்பிடித்து 64 பேர் உயிரிழந்தனர்.
1990 - இரண்டு ஜேர்மனிகளையும் ஒன்றிணைக்கும் இரண்டு கட்ட ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டது.
1997 - நாலந்தா எல்லவல்ல படுகொலை ஐ.தே.க, நாடாளுமன்ற உறுப்பினர் முன்னாள் மேயர் பற்றித் தகவல் தருபவர்களுக்கு 20 லட்சம் எனப் பொலிஸார் அறிவிப்பு.
1997 - மடுவிலுள்ள அகதி முகாம் அகதிகளால் நிரம்பி வழிகின்றது.
2008- ஆஸ்திரேலிய பிரதமர் கெவின் றூட் ஆஸ்திரேலிய பழங்குடி மக்களிடம் அவர்களின் சந்ததியை அல்லது பிள்ளைகளைத் திருடியமைக்காக வரலாற்று ரீதியான மன்னிப்புக் கோரினார்.
2010 - இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள புனேயில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 17பேர் உயிரிழந்ததுடன் 60க்கு மேற்பட்டோர் காயமடைந் தனர்.
2014 - மன்னார் புதைகுழியிலிருந்து இரண்டு எலும்புக்கூடுகள் இதுவரை மீட்பு
2014 - ஆவா குறூப் தலைவரது விளக்கமறியல் நீடிப்பு; ஏனையோர் பிணையில் விடுவிப்பு.
2014 - இலங்கைக்கான நோர்வே தூதுவர் கிரேஸ் லொச்சன், உதயன் பத்திரிகை அலுவலகத்துக்கு வருகைதந்துஉதயன் குழுமத்தலைவரைச்சந்தித்தார்.
2014 - தமிழர்களுக்கு நீதியை வழங்குங்கள் என ஐ.நாவிடம் மன்னிப்புச் சபை வற்புறுத்தல்.
2014 - திருமலை மனித புதைகுழி விவகாரத்தை மூடி மறைக்க அரசு முயற்சி, நீதி விசாரணை கோருகின்றது கூட்டமைப்பு
2014 - மல்லாவி பிரதேச மருத்துவமனை ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்வு.
2014 – பத்திரிகைச் சுதந்திரச் சுட்டியில் 165 ஆவது இடத்தில் இலங்கை
2014 - நாஜிகால ஓவியங்கள் ஆஸ்திரேலியாவில் கண்டுபிடிப்பு.
2016 - உள்ளக நீதி முறைக்கேற்பவே விசாரணை யின் இறுதித் தீர்ப்பு என ரணில் தெரிவிப்பு.
2016 - காணிகளை விடுவிக்குமாறு ஐரோப்பியக் குழு வலியுறுத்தியது
2016 - சந்தையில் கழிவுபெற்றால் குத்தகையை முடிவுறுத்துமாறு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிப்பு
2016 - காணாமற் போனோர் இரகசிய முகாம்கள் தொடர்பாகப் புதிய அரசு நிச்சயம் தெரிந்திருக்க வேண்டுமெனக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு.
2016– இலங்கையரின் அடையாளம் சிங்களம் மட்டுமல்ல எனச் சொல்கிறார் மனோ கணேசன்.

# அகதிகளுக்கு எவர் பொறுப்பு?

நாடுகள் ஒவ்வொன்றும் தம்மைப் பலம் மிக்கது என்று காட்டிக் கொள்ள ஆயுத உற்பத்தியை அதிகரித்தது மட்டுமல்லாமல், நாடுகளுக்கிடையிலான எல்லைப் போரிலும் ஈடுபட்டு வருகின்றன. இவற்றால் பொது மக்கள் பாதிப்படைந்து அகதிகள் எனும் அடையாளத்துடன் ஒரு தொகை மக்கள் இனம் காணப்பட்டுள்ளனர். தற்போதைய நிலவரப்படி உலக பிரச்சினைகளில் அகதிகள் பிரச்சினை தற்போது முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. இரு தரப்பு மோதல்களால் அடிப்படை வாழ்வாதாரத்தை இழக்கும் மக்களின் நிலை குறித்து பன்னாட்டுச் சமூகத்திடம் எவ்வித பதிலும் இல்லை. தொடர்ந்து படைகளை அனுப்பத்தயார் நிலையில் உள்ள வல்லரசுகள் அகதிகளைப் பற்றிச் சிந்திப்பதாக இல்லை. இவற்றை வலுவேற்றும் வகையில் ஆயுததாரிகளின் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. அகதிகளுடன் அகதிகளாகத் தாமும் தஞ்சம் புகுந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

தமது நாட்டின் பாதுகாப்புத் தான் தமக்கு அவசியம் என்று உலக நாடுகள் அகதிகளை எதிர்த்து வருகின்றனர். அகதிகள் பிரச்சினையில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்திய விடயம், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் தடை அறிவிப்பு ஆகும். தற்காலிகமாக 90 நாள்களுக்கு அறிவிக்கப்பட்ட இந்தத் தடைக்கு பன்னாட்டு சமூகத்திடம் இருந்து, எதிர்ப்பும் ஆதரவும் கிளம்பியுள்ளன. மனிதாபிமானத்துடன் ஆதரிப்பவர்களும், தமது இருப்பைத் தக்க வைக்க வேண்டும் என்ற கருத்துடன் எதிர்ப்பவர்களும் தமது தரப்பு நியாயங்களை முன்வைத்து வருகின்றனர்.

நியாயங்கள் சரியாக இருந்தாலும், எந்தக் காரணமும் இல்லாமல் பாதிக்கப்படும் மக்கள் பரிதாபத்துக்குரியவர்கள். போரை மும்முரப்படுத்தும் தரப்புக்கள் அகதிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாட்டை முன்கூட்டியே திட்டமிட்டு விட்டு, போர் தொடுக்க வேண்டும். ஆனால் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி உயிரைப்பறிக்கும் செயலில் அதிகாரத்தரப்புகள் முனைகின்றன.

உலக அளவில் மத்திய கிழக்கு நாடுகள் கடுமையான போர்ச் சூழல் நிலவும் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் அந்தப் பகுதி மக்களுக்கு ஏனைய நாடுகள் தடை விதிக்கும் நிலை தோன்றியுள்ளது. தடை விதிக்கப்பட்ட நாடுகள், குறித்தொரு ஒரு மதம் சார்ந்தவை ஆகையால், அறிவிக்கப்பட்ட தடை மதரீதியான கிளர்ச்சியையும் தூண்டிவிட்டது.

பத்தி எழுத்து

அத்துடன், மத சார்பான கருத்துகளையும், மத ரீதியான போரையும் ஏனைய இனத்தவரிடம் ஏற்படுத்திவிட்டது. இருக்கின்ற பிரச்சினைகள் போதாதென்று, தோன்றியுள்ளன. உலகத் தலைவர்கள் தத்தமது நாடுகளுக்கும் குறித்த நாடுகள் மீதான தடையை அறிவித்து, அமெரிக்கத் தடைக்கு வலுச் சேர்த்தனர்.

தற்போது, சமூக ஆர்வலர்களிடம் எழுந்துள்ள கேள்விகள், அகதிகளின் நிலைப்பாடு என்ன என்பதாகும். சொந்த நாட்டிலும் வாழ வழியில்லை, அயல் நாட்டிலும் ஏற்க முடியாது என்றால், அவர்கள் எங்குதான் செல்வது? ஒரு கொலைச் சம்பவம் அரங்கேறினால், அதனைத் துப்புத்துலக்கும் விதமே வேறு. ஆனால் பல மில்லியன் மக்கள் திரட்சியாக வெளியேற்றப்படும் சூழலில் எதிர்காலம் தொடர்பாக எத்தகைய உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது? என்பவையாகும்.

இவற்றுக்கு யார் பொறுப்பு? போர் தொடுக்க முனைபவர்கள், பாதிப்புக்களும் பதில் சொல்லத் தயாரானால் மட்டுமே அவர்கள் உண்மையான தலைவர்கள்.

# கூவத்தூர் விடுதியில் வைத்து செய்தியாளர்கள் மீது தாக்குதல்

## பரபரப்புக் குற்றச்சாட்டு

சென்னை, பெப். 13
அ.தி.மு. கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள கூவத்தூர் நட்சத்திர விடுதிக்கு நேற்று மாலை குறித்த கட்சியில் பொதுச்செயலாளர் சசிகலா சென்றார். இவரைத் தொடர்ந்து செய்தியாளர்களும் சென்றனர். செய்தியாளர்கள் கூவத்தூர் விடுதிக்குள் அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் மீது கற்கள் வீசித் தாக்கப்பட்டது என்றும் அலைபேசிகள், கமராக்களை உடைப்பதற்கு அ.தி.மு. கழகத்தினர் முன்வந்தனர் என்றும் செய்தியாளர்களால் குற்றஞ் சாட்டப்பட்டது.

கடந்த செல்வாய்க்கிழமை இரவு அ.தி.மு. கழகத்தின் தலைமைக்கு எதிராகப் பல விமர்சனங்களை முன்வைத்தார் ஓ.பன்னீர்செல்வம். தான்; வற்புறுத்தலின் அடிப்படையிலேயே பதவி விலகினார் என்றும் அவர் குறிப்பிட்டார். இதனையடுத்து கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார். சசிகலா - ஓ.பி.எஸ். இடையே தற்போது பெரும் வார்த்தை மோதல்கள் இடம் பெற்றுவருகின்றன. இந்தக் குழப்பமான நிலையில், சசிகலாவுக்கும் - அ.தி.மு. கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமாலை நடைபெற்றது. விடுதிக்குள் நடக்கும் விடயங்கள் மர்மமாகவே உள்ள நிலையில், அவற்றை வெளிக்கொண்டுவருவதற்காகச் சென்ற செய்தியாளர்கள் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.


தாம் தாக்கப்பட்டதை அடுத்து அவர்கள் வீதிமறியல் போராட்டங்களில் ஈடுபட்டனர். பொலிஸார் அவர்களுடன் சமரசப் பேச்சுக்களில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ம)

Galaxy Star
வெற்றி வாரம் 135 திகதி 2017.02.12
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
06 23 27 58 60
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,457,056 /-

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் மாணிக்கவாசகர்(இராசா)



திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்தவருமாகிய நாகலிங்கம் மாணிக்கவாசகர் (இராசா) 10.02.2017 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -தங்கச்சிஅம்மா தம்பதியினரின் அன்பு புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னையா-சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் அகிலாண்டேஸ்வரியின் அன்புக் கணவரும் கீதாஞ்சலி (லண்டன்). அருட்செல்வன்.சதீஸ்(பிரான்ஸ்).மீறா(சுவிஸ்). ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ் சென்ற வியாக்கிரமபாதர்( முன்னாள் ஆய்வு கூட உத்தியோகத்தர் -பரந்தன் இரசாயனக்கூட்டுத் தாபனம்) சத்தியவரகேஸ்வரன் (ஓய்வு பெற்ற கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் - கோப்பாய்).நாகேஸ்வரிதேவி(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அன்னலட்சுமி.காலஞ்சென்ற ஜெயசிங்கம் (முன்னாள் உற்பத்தி முகாமையாளர் இரத்மலானை அஸ்பெஸ்டஸ்.சீமென்ற் இன்டஸ்றீஸ்).அம்பிகாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர்கள் .நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**நா.சத்தியவரகேஸ்வரன் (துரை)(தம்பி)**
**077 453 9619,003 314 836 47 50**

## கதிரவேலு விஜயகுமார்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு விஜயகுமார் 10.02.2017 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-அரியநாயகி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் லக்ஷ்மி தம்பதிகளின் அன்புமருமகனும் சந்திராதேவியின் (ஜேர்மன்) அன்புக்கண வரும் அன்ரனியின்(ஜேர்மன்) அன்புத் தந்தையும் விஜயலக்ஷ்மி, விஜயராணி, தர்மானந்தன், உதய குமார், இந்திராணி, ஜேந்தி, ஜெயகுமார் (ICRC) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மகேந்திரராஜா, இரத்தினகுமார், வக்ஷலா, அன்சார், சோமசுந்தரம், புஸ்பலதா, சீபா, இராசகுமாரி, சறோஜாதேவி காலஞ்சென்ற உதயகுமாரி மற்றும் விஜயகுமார் ஆகியோரின் மைத்துனரும் பாலசுப் பிரமணியம், சிறீகரன், யோகராசா, ஜஸ்மின், டேசிரி ஆகியோரின் சகலனும் தர்ஷா, கவின், தனுஜன், ஜெபிக்கா, ஜெபப்பிரியா, ரஷ்மியா, ஜெமிமா,ஜெனி, ஜொனி, ஜெரமி, கிஷோர், சந்துரு, கிரியோன்,சங்கீத்,மதுரா ஆகியோரின் பெரிய தகப்பனும் மயூரன், அருணன், கஜாலினி, கோகிலவதனி, சஜீவ், சோபிகா, ஜிந்துகா, ஜயந்தன், யதுசா, சனா, சரீனா,சமீனா,சப்ரின் ,மொஹமட், வித்தியானந்தன், ஜெனி, சங்கீத், கரன், நிதர்ஷன் ஆகியோரின் அன்பு மாமனும் ரோகினி, வாசுகி, வளர்மதி, அகிலா, பகீரதன், முருகதாஸ், வனித்தா, தவஞானசீலன் , சுரேஷ்குமார், பரீனா, நிக்காஸ், நவீனா,ரிஷாந் ஆகியோரின் சிறிய தகப்பனும் அபிஷேக், அஜய், அவினா, அக்ஷயன், ஷாருஜா, கிசானி, சர்ஜனா, கஷ்மியா, லேனுகா, அபிஷாலினி, லக்ஷரா, ஹனா, ஜெனிஸ், டியா, விஷ்மிதன் எலியோன் ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று( 13.02.2017) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 11/12.செம்மணி வீதி, நல்லூரில் நடைபெற்று நல்லடக்கத்துக்காக இலங்கை பெந்தெ கொஸ்தே சபை சவச்சாலைக்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முகவரி:**
**11/12,செம்மணி வீதி,**
**நல்லூர் , யாழ்ப்பாணம்.**

**தகவல்: க.ஜெயக்குமார்**
**(சகோதரன்-ICRC,SDC)**
**077 361 18 88**

# மரண அறிவித்தல்கள்

## நல்லதம்பி இராசதுரை



அல்வாய் தெற்கு, அல்வாயைப் பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி இராசதுரை நேற்று (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நல்லதம்பி - சின்னம்மா தம்பதியரின் பாசமிகுமகனும் காலஞ் சென்றவர்களான அப்பாபிள்ளை - தெய்வானை தம்பதியரின் பாசமிகு மருமகனும் குணலட்சுமியின் அன்புக்கணவரும் பிரபா (ஜேர்மனி), றேனுகா, சுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபாகரன் (ஜேர்மனி), றோஜிதன், யசோதா ஆகியோரின் மாமனாரும் ஹரிஸ், கிஷன், மிதுசா, தர்மிகா, அபிநயன், தமிழ்கவி, ஹிஸாலன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.02.2017 புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாலுசந்தி,**
**அல்வாய் தெற்கு, அல்வாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 328 6073**



## திருமதி பூமலர் செல்லத்துரை

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் அன்னுங்கை, உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமலர் செல்லத்துரை 12.02.2017 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதி - இலட்சுமி தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற க. செல்லத்துரையின் அன்பு மனைவியும் ஜெகதீஸ்வரி, வாசுகி, சாரதா, காண்டீபன், ஸ்ரீவாணி, கோகுல தாரணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் அருளானந்தராஜா, வைகுந்தராஜா, பரமேஸ்வரன், ஞானரதன் ஆகியோரின் மாமியாரும் லக்சிகா, சாகித்யா, தாரகி, வாகீசன், மதீசன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் அரியரத்தினம், குணம், சோதிலிங்கம், செல்வதுரை, பஞ்சவர்ணம், இராசமலர் காலஞ் சென்றவர்களான அமுத லிங்கம், தேவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மார்க்கண்டு, கணேசலிங்கம் காலஞ் சென்றவர்களான சரஸ்வதி சண்முகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2017) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அன்னுங்கை, உரும்பிராய் மேற்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## அதிகாரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என.இந்த நடவடிக்கை 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரானது என்று மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய தெரிவித்தார்.

'மாகாணசபைகளின் அதிகாரங்களை நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பறிக்கப்படுவதைத் தடுக்க மாகாண சபைகளில் சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றும், ஏனைய முயற்சிகள் தோல்வியடைந்தால் நீதிமன்றை நாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்டடங்களுக்கான திட்டங்கள் மற்றும் தொழில் துறைகளுக்கு அனுமதி அளித்தல், எரிபொருள் நிலையங்கள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்களைக் கட்டுதல் என்பவற்றுக்கு அனுமதி அளிக்கும் அதிகாரத்தைப் பெப்ரவரி முதலாம்திகதி கொழும்பு அரசு, நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அளித்துள்ளது. இந்த அனுமதிகளை வழங்கும் கடமை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளிடமே இருந்து வந்தது.

13ஆவது திருத்தச்சட்டத்தின் விளைவாக, மாகாண சபைகள் சட்டத்தின் கீழ், இந்த அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட் டிருந்தது. இதனைத் தன்னிசையாக மாற்ற முடியாது. இதற்குப் பதிலடியாக, குப்பைகளை அகற்றுதல், நீர்விநியோகம் போன்ற ஏனைய பொது வசதிகளில் இருந்து ஒதுங்க நேரிடும்' என்று மேல் மாகாண முதலமைச்சர் எச்சரித் தார்.

மாகாணசபைகளின் அதிகாரங்களைப் பறிக்கும் இந்தச் செயற்பாட்டைத் தடுப்பதற்கான சட்டங் களை அறிமுகப்படுத்த, எமது அதிகாரங்களைப் பயன்படுத்துவோம் என்று தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் தெரிவித்தார்.

இந்த அதிகாரங்களை மாகாண சபைகள் 30 ஆண்டுகளாக அனுபவித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை அதிகாரப் பகிர்வு கொள்கைக்கு எதிரானது என்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் எக்கநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு அரசின் இந்த நடவடிக்கைக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் அண்மையில் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். (வ-4)

## இந்திய ஊடகங்கள் ஏற்படுத்திய பரபரப்பு

தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் பதவி விலகல் கடிதம் செல்லாது என்று இந்திய ஊடகங்கள் சில கோடிட்டுக் காட்டின.

தமிழக முதல்வராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் கடந்த 5ஆம் திகதி பதவி விலகும் முடிவை எடுத்தார். அடுத்த இரு தினங்களில் அதாவது கடந்த செவ்வாய்க் கிழமை இரவு ஜெயலலிதா சமாதிக்கு முன்னர் வைத்து பல விடயங்களைப் போட்டுடைத்தார். தான், வற்புறுத்தலின் அடிப்படையிலேயே பதவியில் இருந்து விலகும் முடிவை எடுத்தார் என்றும் அவர் தெரிவித்தார். ஓ.பன்னீர்செல்வத்தின் பதவி விலகல் கடிதம் இரு விடயங்களில் செல்லாமல் போகும் என்று குறிப்பிடப்படுகிறது.

ஒன்று, இந்திய அரசியல் அமைப்புச் சட்டதிட்டத்தின்படி ஒரு முதல்வர் தனது பதவி விலகல் கடிதத்தை தான் தொடர்புடைய ஆளுநரிடம் நேரடியாக வழங்க வேண்டும் என்பது. ஓ.பி.எஸ். தனது பதவி விலகல் கடிதத்தை நேரடியாக வழங்கவில்லை. தொலைநகல் மூலமாக ஆளுநர் அலுவலகத்துக்கு முதலில் அனுப்பப்பட்டது. பின்னர் பிறிதொருவர் மூலமாக ஆளுநர் அலுவலக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது.

இரண்டாவது, ஓ.பன்னீர்செல்வத்தின் கடிதத்தின் கையெழுத்தில் அவரது வழக்கமான கையெழுத்துக்கு மாறாக மாற்றம் இருந்துள்ளது. அத்துடன் கையெழுத்தின் அருகே, பிற்பகல், 1:41 மணி என, ஆங்கிலத்தில் குறிப்பிட்டுள்ளது. எனவே இந்த விடயங்களால் ஓ.பி.எஸ்ஸின் பதவி விலகல் கடிதத்தை ஏற்க இயலாது என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. (ம)

கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 99
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 12.02.2017

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 75,692,860/-

G 05 29 58 74

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

திகதி 12.02.2017 | வெற்றி வாரம் 2095 | ஊதா


வெற்றி இலக்கங்கள்
09 29 31 53

செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 8, 979, 649/=

2017.02.14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## 38 ஆவது பிறந்தநாளும் 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



தோற்றம்
13.02.1979

மறைவு
05.01.2007

### நவரெட்ணம் மனோராஜ் (ராஜ்)

அன்றொரு நாள் இத்தினத்தில்
உம் தாய் மடியில் தவழ்ந்தீர்
இன்று சுற்றமும் எம் முற்றத்தில்
தம் உறவுக்காக காத்திருக்கின்றது
தாம் எங்கோ சென்றதேனோ
இரங்கிக் கேட்பவருக்கு இல்லை என்று கூறீர்
இன்று நாம் இரங்கி நிற்கின்றோம்
தாம் எங்கோ சென்றதேனோ
இறைவனின் படைப்புக்கள் பல உருவில் உள்ளதாம்
வேறு ஒரு உருவிலேனும் தாம் இங்கு வருவீரோ
இறைபாதத்தில் நீர் இருப்பதால்
எம்மை நீர் மறந்தீரோ
ஆண்டுகள் 10 ஓடின தம் நினைவும் அழியவில்லை
ஆயிரம் வருடம் ஆனாலும் உம் நினைவில்

பிருந்தாவனம்
இல.38,கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

என்றும் அன்புடன்
குடும்பத்தினர்.

(ஜெ.7888)

## பணியாளர் தேவை

கோழிப்பண்ணை மற்றும்
கோழிவிற்பனை நிலையத்திற்கு
பணியாளர் தேவை.
தொடர்பு : 077 868 9500

## வீடு அல்லது கடை வாடகைக்கு தேவை

யாழ் நகரிலிருந்து 5Km தூரத்தில்
வீடு/ கடை கல்வி நிலையம் ஒன்றுக்கு
தேவை.
077 971 3221

## பெயர் மாற்றம்

**இரட்னசிங்கம் றதிகா** ஆகிய
நான் இன்று தொடக்கம்
**இரட்னசிங்கம் ராதிகா** என
பெயரை மாற்றி உள்ளேன்.
இனிவரும் காலங்களில் எனது
பதிவுகள் அனைத்தும் **இ.ராதிகா**
என பதிவேனென
உறுதிப்படுத்துகின்றேன்.

— இ.ராதிகா

## பணியாளர் தேவை

- புத்தகம் கட்டுநர்
- கணணி டைப்பிங்,டிசைனிங்(ஆண்,பெண்)
- உதவியாளர், பழகவிரும்புவோர்,
- பகுதிநேர வேலையாட்கள்
- வெளிமாவட்டத்தில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம் தங்குமிடம் இலவசம், உணவு வசதி.

கவர்ச்சிகரமான
திறமைக்கு ஏற்ப
சம்பளம்

நேரில் வரவும்
(13.14.15 - 02.2017)
T.P :0783016203

யாழ்ப்பாணத்தில் பிறிண்டிங்துறையில்
முன்னணி நிறுவனத்திற்கு. காங்கேசன்துறை வீதி, யாழ்.

## 80 ஆவது பிறந்த நாள் அழைப்பு



திரு.திருமதி
சி.கயிலைநாதன் -
க.பரிபூரணலட்சுமி
ஆகிய எமது (80 வது)
எண்பதாவது வயது
பிறந்த நாளைக்
கொண்டாடும்
நோக்கமாக

பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலனசபைத்தலைவரும், மேற்படி ஆலய தர்ம கர்த்தாவும், பரம்பரை முகாமையாளரும் ஆகிய நாங்கள் நிகழும் மங்கல கரமான துர்முகி வருசம் மாசித்திங்கள் 3 ஆம் நாள் புதன்கிழமை (15.02.2017) முற்பகல் 10 மணி முதல் வழக்கம்பரை அம்பிகையின் அருளால் விசேட அபிசேகம் நடைபெற்று தொடர்ந்து வாழ்த்து நிகழ்வும், மாகேஸ்வர பூசையும், ஆலய பிரசாதம், தேநீர் விருந்தும் அடியார்களுக்கு பரிமாறி ஆலய பிரதமகுருக்கள் சி. ரங்கநாதர் அவர்களின் உறவினர்களுக்கும் மதிய போசனம் பரிமாறி எமது இல்லத்தில் அன்பர்கள், உறவினர்கள், சகோதரர் களுக்கும் மதிய போசனம் வழங்கி அதன் பின்பு எமது பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் அன்பர்களுக்கு உணவும், தேநீர் விருந்தும் கொடுப்பதற்கு ஆண்டவன் அருள் கிட்டியுள்ளது என்பதை அடியார்களுக்கும், அன்பர்களுக்கும், உறவினர்களுக்கும் இவ்விழாவை சிறப்பித்து ஏகுமாறு தயவாக கேட்டுக்கொள்கின்றோம். எமது ஆலய பரிபாலனசபை அங்கத் தவர்களும், தேவஸ்தான பிரதமகுருக்கள் அவர்களும் இந்த வேண்டுகோளை தெரிவித்து அழைக்கின்றோம். சுபம்


077 972 1613

தேவஸ்தான பரிபாலனசபை தலைவர்,
ஆலய முகாமையாளரும், தர்மகர்த்தாவும்
சிவப்பிரகாசம் கயிலைநாதன் - பரிபூரணலட்சுமி

## மரண அறிவித்தல்

### குமாரசாமி சண்முகரத்தினம் (அப்பன் சோதிடர்)

[இளைப்பாறிய வருமான மேற்பார்வையாளர் (வலி. மேற்கு பிரதேச சபை), சமாதான நீதிவான் (J.P), மத்தியஸ்த சபை உறுப்பினர் (வலி. மேற்கு), ஆலோசகர்- சங்கானை பட்டின அபிவிருத்தி சபை, சங்கானை வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்க உறுப்பினர், செயலாளர்- செல்வி பரிமளம் நாகலிங்கம் அறங்காவலர் குழு]



சங்கானை, கூடத்து அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சங்கானை, பாரதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சண்முகரத்தினம் (அப்பன் சோதிடர்) 10.02.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி (சோதிடர்)- முத்தம்மா தம்பதியரின் (சங்கானை) இளைய மகனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்- புஸ்பராணியின் (கோண்டாவில்) அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின்(தேவி) அன்புக் கணவரும் கோகுலன்(ஆசிரியர்-சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), இராகுலன் (அர்ச்சனா டிஜிட்டல் பிறிண்டிங், சங்கானை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரஞ்சலாவின் (கனடா) பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (CEB லிகிதர்), பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய களஞ்சிய பொறுப்பதிகாரி-சுன்னாகம் மின்சார சபை), காலஞ்சென்ற சோமசுந்தரம் (பிரபல சோதிடர்), சிவசுந்தரம் (இளைப்பாறிய CTB நடத்துனர்), காலஞ்சென்ற பஞ்சரத்தினம் (ஆசிரியர்), தியாகேஸ்வரி, தேவராசா (இளைப்பாறிய மரக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சர்வலோகேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற மதனரஞ்சினி, வாமதேவி, கோகுலமணி (பொன்னாலை), புஸ்பராணி (கனடா), காலஞ்சென்ற நவரத்தினம், சற்குணேஸ்வரி (நவாலி), குலராணி (கனடா), காலஞ்சென்ற சௌந்தர்ராஜன், சுபாஜினி (ரதி- கோண்டாவில்), செல்வராஜன் (கனடா), மாலினி (மாலா - கோண்டாவில்) ஆகியோரின் மைத்துனரும் கைலைநாதன் (கனடா), யோகேஸ்வரன் (கோண்டாவில்), ஹரிமுகன் (கோண்டாவில்) ஆகியோரின் சகலனும் காலஞ்சென்ற விஜயகுமாரி, றோமளா (கனடா) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதி வீதி,
சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்.
077 779 0856

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1945.08.02

மறைவு
2012.02.13

அமரர்
### ஐயாக்குட்டி கனகரத்தினம்

எம் அப்பா...!
எம்மைவிட்டு நீங்கி
நீண்டது ஐந்தாண்டுகள்
எம் நினைவில் வாழ்வீர்கள்
நிறையும் எம் வாழ்நாள் வரை

காந்திஜி வீதி,
கொக்குவில் மேற்கு.

குடும்பத்தினர்.

## கருணாவின்...

படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற பெயரில் புதியதொரு அரசியல் கட்சியை கருணா நேற்று முன்தினம் ஆரம்பித்தார். புதிய கட்சி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் குறித்து கருத்து வெளியிட்ட அவர்,

தமிழ் மக்களிடையே அரசியல் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. அரசியல் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருகின்றனர். வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலும், அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலுமே எமது கட்சி உருவாகியுள்ளது. வடக்கு, கிழக்கில் தமிழ் அரசியலில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை புதிய கட்சி நிரப் பும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. எதிர் வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு மக்களின் நாடி பிடித்துப் பார்க்கப்படும். வெற்றி தோல்வி முக்கியமில்லை. மக்களுக்கான சேவையே எமக்குத் தேவை - என்றார். (வ-5)

## பொது...

புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகள் ஏற்கனவே தேக்கமடைந்துள்ளன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி, வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கைக்கு இன்னமும் பதிலளிக்கவில்லை. இதனால் வழிநடத்தல் குழுவின் கூட்டங்களும் முடிவுகள் எடுக்கப்படாமல் முடிவடைந்திருந்தன.

இதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களுடன் பேசி, புதிய அரசமைப்புக்கான முட்டுக்கட்டைகளை நீக்கியிருந்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. அவ்வாறு செய்திகள் வெளியான பின்னர் நடைபெற்ற வழிநடத்தல் குழுக் கூட்டத்திலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் பங்கேற்றிருக்கவில்லை.

இவ்வாறானதொரு நிலையிலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரான சுசில் பிரேமஜயந்த மேற்படி கருத்தை முன்வைத்துள்ளார்.

புதிய அரசமைப்பு தொடர்பில் பொது வாக்கெடுப்பு நடத்தப்படும். அதன்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் ஆதரவு கிடைக்கும்' என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமைச்சர் கிரியெல்லவின் இந்த அறிவிப்பு குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டைப் தெளிவுபடுத்தி கருத்து வெளியிடுகையிலேயே சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு பொது வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்படும் என்று அமைச்சர் கிரியெல்ல கூறியுள்ளார். இந்த விடயத்துடன் சுதந்திரக் கட்சியையும் தொடர்புபடுத்தி அவர் கருத்து வெளியிட்டுள்ளார். பொது வாக்கெடுப்புக்குச் செல்லாத வகையிலேயே புதிய அரசமைப்பை உருவாக்கும் பணி இடம்பெறவேண்டும் என்பதே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாக இருக்கிறது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் இந்த விடயத்தில் உறுதியாக இருக்கிறார் - என்றார். (வ-5)

## மக்களின்...

யிருப்புக்கு வர வேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் 16 பேர் பிலக்குடியிருப்புக்கு நேற்றுச் சென்றனர். இந்தக் குழுவில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், பிரதி அவைத் தலைவர் ம.கமலேஸ்வரன், எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா, ஆளும் கட்சி உறுப்பினர்களான து.ரவிகரன், அ.பரஞ்சோதி, க.சர்வேஸ்ரன், வே.சிவயோகன், க.தர்மலிங்கம், சு.பசுபதிப்பிள்ளை, ஆ.புவனேஸ்வரன், க.சிவ நேசன், ச.சுகிர்தன், ஜி.ரி.லிங்கநாதன், ஆகியோரே மக்களைச் சென்று சந்தித்தனர்.

வடக்கு மாகாண சபையின் யாழ்ப்பாண மாவட்ட உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன், பொ.ஐங்கரநேசன், இ.ஆனோல்ட், எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், திருமதி அனந்தி சசிதரன், க.சயந்தன், விந்தன் கனகரட்ணம், சி.அகிலதாஸ், மன்னார் மாவட்ட உறுப்பினர்களான பிறிமுஸ் சிராய்வா, ஞா.குணசீலன், ஐ.அஸ்மின், ரிப்கான் பதியுதீன், றாயிஸ், கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர்களான ப.அரியரட்ணம், வே.தவநாதன், முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினரான ஜவாகிர், வவுனியா மாவட்ட உறுப்பினர்களான ம.தியாகராசா, இ.இந்திரராசா, செ.மயூரன், தர்மபால செனவிரட்ண, ஜெயதிலக ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. (வ-5-4-7)

## 13 ஆவது...

அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வான்படையினர் அத்துமீறி ஆக்கிரமித்து வைத்துள்ள, தமது பூர்வீக தேசத்தை - மண்ணை மீட்டெடுப்பதற்காக பிலக்குடியிருப்பு மக்கள் அறவழிப் போரை கடந்த 31ஆம் திகதி தொடுத்திருந்தனர். கடந்த 13 நாள்களாக எந்தவித பின்வாங்கலுமின்றி, மூர்க்கமாக - முழுமூச்சுடன் அறவழிப் போர் பிலக்குடியிருப்பு மக்களால் நடத்தப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு நாளும், பல்வேறு தரப்புக்களும் தங்கள் பேராதரவை பிலக்குடியிருப்பு மக்களுக்கு வழங்கி வருகின்றன. மக்களுக்கான உதவிகளும் செய்யப்பட்டு வருகின்றன. போராட்டக்களத்தில் உள்ள மக்கள், தற்காலிக மலசலகூடத்தையும் அமைத்துள்ளனர். காணி விடுவிப்பு நடக்கும் வரையில் ஓர் அங்குலம் கூட நகரப் போவதில்லை என்பதைப் பறைசாற் றும் வகையில் இந்த நடவடிக்கை அமைந் துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் போராட்டக் களத்திலேயே தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

பகலில் வெயில் வெப்பத்தையும் பொருட்படுத்தாது தகரக் கொட்டைகளினுள் தங்கியிருந்து தமது நிலமீட்புக்கான போரை மக்கள் உறுதியுடன் முன்னெடுத்து வருகின்றனர். இந்த மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் அனைத்துத் தரப்புக்களையும் ஒருங்கிணைத்து நாளை செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு கலந்துரையாடல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அறிவித்தார். (வ-5-4-7)

## காணிகள்...

கள்' என புதுக்குடியிருப்பு பிரதேச செயல கத்துக்கு முன்னால் பத்தாவது நாளாக தொடர் அறவழிப் போராட்டத்தில ஈடுபட்டுள்ள பொதுமக்களைச் சந்தித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை நேற்று வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், சுகாதார அமைச்சர், மீன்பிடி அமைச்சர், எதிர்க்கட்சித்தலைவர் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான க.சர்வேஸ்வரன், அ.பரஞ்சோதி, ஜி.ரி. லிங்கநாதன் ஆகியோர் நேற்றைய தினம் நேரில் சென்று கலந்துரையாடினர்.

புதுக்குடியிருப்பு காணி உரிமையாளர்கள் தலைமை அமைச்சரைச் சந்தித்த விடயம் தொடர்பாகக் கேட்டறிந்ததுடன், இதே போல் உங்களுடைய போராட்டத்தை முன்னெடுங்கள் என அவர்கள் மக்களிடம் வலியுறுத்தினர்.

புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டக் களத்துக்கு நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்ப்பாண மகளிர் அபிவிருத்தி நிலையத்தினர் வருகை தந்தனர். அவர்கள் தங்கள் ஆதரவைத் தெரிவித்ததுடன் காணி உரிமையாளர்கள் கடந்த காலத்தில் எத்தனை தடவைகள் ஏமாற்றப்பட்டதையும் இந்த நிலைக்கு தள்ளப்பட்டதன் காரணத் தையும் கேட்டறிந்தனர்.

பத்தாவது நாளாகவும் தொடர்ந்து பனியிலும், வெயிலிலும் தகரக்கொட்டகைக்குள் இருந்து அறவழிப்போராட்டத்தை நடாத்தி வரும் காணி உரிமையாளர்கள், தங்களது காணியில் உள்ள பயன்தரு மரங்களையும், தமது வீடுகளையும் பார்த்துக்கொண்டிருந்தமையால் பத்து நாள்கள் எப்படிப் போனது என்றே தெரியவில்லை என்றனர். (வ-7)

## நிறைவேற்று...

புதிய அரசமைப்பின் ஊடாக நிறைவேற்று அதிகாரம் மட்டுப்படுத்தப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன.

இவ்வாறு லங்கா சமசமாசக் கட்சியின் உறுப்பினரும்நாடாளுமன்றஉறுப்பினரும் அரசமைப்பு உருவாக்க வழிகாட்டல் குழுவின் முக்கிய உறுப்பினருமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரெட்ண தெரிவித்தார்.

அரசமைப்பு உருவாக்கம் தொடர்பிலான விளக்கம் கூறும் கலந்துரையாடல் மட்டக்களப்பு நல்லையா வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் கி. துரைராசசிங்கம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஒரு பொன்னான வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒன்றிணைந்து செயற்படுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசமைப்பு உருவாக்கத்தில் பங்காளியாகச் செயற்படுகிறது. 170க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களின் ஆதரவை இவர்கள் பெற்றிருக்கின்றார்கள். கூட்டு எதிரணி இதற்கு ஆதரவளிக்க மாட்டாது.

புதிய அரசமைப்பு தொடர்பில் ஆக்கப்பட்ட உபகுழுக்கள் அவற்றின் அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கின்றன. இந்த அறிக்கைகளை சாவுக்கான குழி என்று சிலர் பரப்புரை செய்கின்றார்கள்.

புதிய அரசமைப்பு எதிர்நோக்குகின்ற அம்சங்களில் ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சி என்கின்ற பதங்கள் முக்கிய இடம்பெறுகின்றன. ஒற்றையாட்சி என்ற கருத்து முன்னைய நிலையில் இன்று இல்லை. தற்போது அதிகாரப் பரவலாக்கலில் வளர்ச்சி கண்டிருக்கின்றது. எனினும் இலங்கையில் ஒற்றையாட்சி தொடர்பாக கருதுகோள் பிரிக்கப்படாத நாடு என்ற வகையிலேயே சிங்கள மக்களால் நோக்கப்படுகின்றது.

சிங்கள மக்களால் குறிப்பிடப்படுகின்ற 'ஏக்கிய' என்ற சொல்லின் அர்த்தம் இதுவாகவே இருக்கின்றது. இருந்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த வாசகத்தின் பயன்பாடு தொடர்பில் அச்சம் தெரிவிக்கின்றது. அதிகாரப் பரவலாக்கம் என்பது அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும். அது தற்போதைய 13ஆவது திருத்தமாக இருக்கக் கூடாது என்றும் பேசப்படுகின்றது. 13ஆவது திருத்தத்தில் பல விடயங்கள் தெளிவற்றுக் காணப்படுகின்றன. அடுத்து அடுத்து வந்த அரசுகள் கூட இந்தத் திருத்தத்தை வெள்வேறு விதமாகக் கையாளுகின்றன. தேசியக் கொள்கை என்ற விடயத்தின் மூலம் மாகாண சபைகளின் அதிகாரங்கள் கலந்துரையாடல் இல்லாமல் பறிக்கப்படுகின்றன. தேசியக் கொள்கை என்ற போர்வையில் அதிகாரங்கள் பறிக்கப்பட்டமைக்கு திவிநெகும சட்டவரைவை ஒரு முக்கிய உதாரணமாகக் கொள்ளலாம்.

தற்போதைய நாடாளுமன்ற அமைப்பில் இரண்டாவது அவை இல்லை. இரண்டாவது அவை ஒன்று இருக்கும்போது நடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் இரண்டாவது அவையில் நிறைவேற்றப்படும் போதுதான் சட்டமாக்கப்படும். எனவே இரண்டாவது சபை எனும் கோரிக்கை இப்போது முன்வைக்கப்படுகின்றது.

தென்னாபிரிக்காவில் கையாளப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு நம் நாட்டு அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

நடைமுறைப்படுத்தக் கூடிய வகையிலான ஒரு அரசமைப்பே பயன்தரும் முயற்சியாக அமையும். அதனை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் -என்றார். (வ-4,101)

## கிழக்கு...

அன்று வட பகுதியில் உள்ளவர்கள் தெற்குக்கு வந்து ஊர் வலம் நடத்து வதற்கான சூழல் இருந்ததா? இது நாட்டின் சுதந்திரம். இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கிழக்கில் நடத்தப்பட்ட எழுக தமிழ் ஊர்வலம் தொடர்பில் பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எழுக தமிழ் ஊர்வலம் தொடர்பில் நாம் பெருமை கொள்ள வேண்டும். எமக்கு வேண்டுமானால் எழுக தமிழ் ஊர்வலத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்துக்குச் சென்று ஊர்வலம் நடத்த முடியும். இது நாட்டின் சுதந்திரம். இதனை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். கடந்த 20 வருடங்களாக ஒன்றுமில்லாமல் இருந்துவிட்டு, சுதந்திரம் உள்ளமை தெரியவில்லை.

அவர்கள் மட்டுமா ஊர்வலம் சென்றார்கள் ? ஏன் அதனை மாத்திரம் கேட்கின்றீர்கள் ? இன்று அனைத்துக்கும் ஊர்வலம் செல்கின்றார்கள்? வீரவன்சவை வெளியே விடுமாறும் ஊர்வலம் செல்கின்றார்கள். அனைத்துக்கும் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள். நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்கினாலும் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள். அரசு சில நடவடிக்கைகளை எடுத்தாலும் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள்.

கடந்த 20 வருடங்களாக ஒன்றுமில்லாமல் இருந்து விட்ட சுதந்திரம் கிடைத்த பின்னர் சிறிதுகாலம் இவ்வாறு நடைபெறும். இது தொடர்பில் குழப்பமடையத் தேவையில்லை. வடக்கு - கிழக்கை இணைக்க முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அது தொடர்பில் குழப்பமடையத்தேவையில்லை. அனைவரின் விருப்பத்துக்கு அமைவாக புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் - என்றார். (வ-5)

## தாயக...

இந்தப் போராட்டம் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பு மக்கள், வான்படையினரால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ள தங்களது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரி, கடந்த மாதம் 31ஆம் திகதி போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். வான்படை முகாம் முன்பாகவே கூடாரமிட்டு அமர்ந்திருந்து, படுத்துறங்கி அவர்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த மக்களுக்கு ஆதரவாக தாயக தேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆதரவுப் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. பல்வேறு அமைப்புக்களும் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில் லண்டனில், புலம்பெயர் உறவுகளால் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று நடத்தப்பட்டுள்ளது. பிரிட்டனின் தலைமை அமைச்சர் அலுவலகம் அமைந்துள்ள பகுதியில், பி.ப. 1 மணியிலிருந்து 4 மணி வரை (லண்டன் நேரம்) இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. பெருமளவானோர் கலந்து கொண்டனர். பிலக்குடியிருப்பு மக்களுக்காக, அவர்களது காணி விடுவிப்புக்காக கோசம் எழுப்பினர். (வ-5)

## ஐ.நாவின்...

ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் பரிந்துரைகள் முக்கியமானவை.

போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறைக்கு கலப்பு நீதிமன்றப் பொறிமுறையையே ஐ.நா. தீர்மானம் பரிந்துரைத்துள்ளது. இதனை மாற்றுவதற்கு - நீக்குவதற்கு கொழும்பு அரசு முழு மூச்சாக முயல்வதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. அதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். அந்தப் பரிந்துரையில் எந்தவொரு மாற்றமும் செய்ய முடியாது. இலங்கை அரசு 2015ஆம் ஆண்டு இணங்கி ஏற்றுக் கொண்ட விடயம். அதனை மாற்ற நாம் ஒருபோதும் சம்மதிக்க மாட்டோம் - என்றார். (வ-5)

# அரசரும் பாதணியும்

ஓர் ஊரில் ஓர் அரசர் இருந்தார். அவர் ஒரு முக்கிய தேவைக்காக அயலூருக்குப் பயணம் செய்ய வேண்டியிருந்தது. குதிரை வண்டியில் பிரயாணம் செய்த அவர் சிலசமயங்களில் குதிரைகள் களைப்படைந்ததாலும், குதிரை வண்டியில் ஏற்பட்ட பழுது காரணமாகவும் இடையிடையே வண் டியை விட்டு இறங்கி நடந்து செல்ல வேண்டி ஏற்பட்டது.


பயணத்தால் திரும்பி வந்த அரசர் தனது மந்திரிமாரை அழைத்து "எமது ஊரின் தெருக்கள் எல்லாம் மிக மோசமாக உள்ளன. அவற்றிலே நான் நடந்து சென்றதால் என் பாதங்கள் இரண்டும் புண்பட்டு விட்டன. ஆதலால் எமது ஊரின் தெருக்கள் அனைத்தையும் தோலினால் மூடிச் செப்பனிடுங்கள்" என்று உத்தரவிட்டார்.

அரசரது உத்தரவு பற்றி மந்திரிகள் கூடி ஆலோசனை நடத்தினர். தெருக்கள் முழுவதையும் தோலினால் செப்பனிடுவது சாத்தியமாகாதென்ற முடிவுக்கு வந்தனர். தலைமை மந்திரி அரசனை நாடி "அரசே, தங்கள் திட்டத்துக்கு அதிகம் பணம் விரயமாகும். அத்தோடு தெருக்கள் முழுவதையும் தோலினால் மூடுவதற்கு அதிகமான கால் நடைகளைக் (ஆடு, மாடு, பன்றி) கொல்ல வேண்டியும் ஏற்படுமே"- என்றார். "எனது பிரச்சினைக்கு வேறு என்ன தான் வழி எனச் சொல்லுங்கள்" என்றார் அரசர். "அரசே, தங்கள் கால்களுக்கு மட்டும் தோலினால் ஆன காலணியை ஏன் தயாரித்து அணியக் கூடாது?" என்றார். இதனைக் கேட்ட அரசர் மந்திரியின் அறிவை மெச்சி அவரது ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்.



**சில விடயங்களில் மற்றவர்களை மாற்ற நாம் முயற்சிப்பதை விட எம்மை நாமே மாற்றிக் கொள்ளலாம்.**
**"உன்னைத் திருத்து ஊர் திருந்தும்.**

# கடிதம் சுமந்த காலணியும் சிவப்பு வண்ணத் தபால் பெட்டியும்



1500 ஆம் ஆண்டில் புதிய நாடுகளைக் கண்டறிய போர்த்துக்கீச மாலுமியான பத்தலோமியஸ் டயஸ் தனது சக மாலுமிகளுடன் கடற்பயணம் மேற்கொண்டார். அவர்கள் பயணம் செய்த கப்பல் தென்னாபிரிக்கக் கடலில் புயலில் சிக்கியது. அதன் போது மாலுமி டயஸ் சாவடைந்தார். அவர் பயணம் செய்த கப்பல் தென்னாபிரிக்கக் கடற்கரைத் தீவு ஒன்றில் கரை ஒதுங்கியது. இந்தச் சம்பவத்தில் உயிர் பிழைத்த மாலுமி ஒருவர், தங்களது பயணத்தின் நோக்கம். பயணத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் என்பனவற்றை ஒரு கடிதத்தில் எழுதி அதைத் தனது சிவப்பு நிறக் காலணியுள் (சப்பாத்து) வைத்து ஒரு மரத்தில் தொங்க விட்டுச் சென்று விட்டார். பத்து மாதங்கள் கழித்து அந்தத் தீவுக்கு வந்த மற்றொரு போத்துக்கீச மாலுமியான ஜோ ஓடா நோவா என்பவர் மரத்தில் தொங்கியபடியிருந்த அந்தக் காலணியை தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. மிகவும் வியப்புடன் அந்தக் காலணியை எடுத்து அதன் உள்ளே பார்த்தபோது உள்ளே பத்திரமாக தடிப்பான மட்டை ஒன்றில் சுற்றப்பட்டிருந்த ஒரு கடிதத்தைக் கண்டார். கடிதம் பேணாவினால் மிகத் தெளிவாக எழுதப்பட்டிருந்தது.

இயற்கையின் சீற்றங்களுக்கு தப்பியிருந்த அந்த அற்புதக் கடிதத்தின் விவரங்களை தென்னாபிரிக்கா எங்கும் அவர் பரவச் செய்தார். தென்னாபிரிக்காவில் மோசல் என்னுமிடத்திலுள்ள அந்த கடிதம் தாங்கிய மரம் அப் போதிருந்து பாதுகாக்கப்பட்டு வருவதோடு காலணி வடிவத்திலான தபால் பெட்டி ஒன்றும் அந்த மரத்தில் வைக்கப்பட்டது. இதுவே உலகின் முதலாவது தபால் பெட்டி ஆகும். அன்றிலிருந்து அந்தத்தீவுக்கு வருபவர்கள் அந்த காலணி வடிவப் பெட்டியிலேயே கடிதங்களைப் போட்டு வந்தனர்.

1814 ஆம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தின் லண்டன் மாநகரில் சிவப்பு நிறம் பூசப்பட்ட தபால் பெட்டி முதன் முதலில் பாவனைக்கு வந்தது. இன்று வரை 200 வருடங்களுக்கு மேலாக உலகெங்கணும் சிவப்பு தபால் பெட்டிகள் உயிர்ப்புடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

## உயிர் மெய் எழுத்துக்களின் அகர வரிசை

| ப | |
|---|---|
| ப | படம் |
| பா | பாடம் |
| பி | பிரம்பு |
| பீ | பீங்கான் |
| பு | புவி |
| பூ | பூமாலை |
| பெ | பெண் |
| பே | பேச்சு |
| பை | பையன் |
| பொ | பொந்து |
| போ | போர்வை |
| பௌ | பௌர்ணமி |

| ம | |
|---|---|
| ம | மரம் |
| மா | மாலை |
| மி | மிளகாய் |
| மீ | மீன் |
| மு | முகம் |
| மூ | மூடி |
| மெ | மெழுகு |
| மே | மேற்கு |
| மை | மைனா |
| மொ | மொட்டு |
| மோ | மோதிரம் |
| மௌ | மௌனம் |

| ந | |
|---|---|
| ந | நண்டு |
| நா | நாக்கு |
| நி | நிலம் |
| நீ | நீலம் |
| நு | நுங்கு |
| நூ | நூல் |
| நெ | நெற்றி |
| நே | நேரம் |
| நை | நைநல் |
| நொ | நொண்டி |
| நோ | நோய் |



# ஆத்திசூடி

மக்கள் நேர்மையாக வாழ்ந்து பண்பானவர்களாகத் திகழ வேண்டும் என்பதற்காக பல நூறு ஆண்டுகளுக்கு முன்னமே நீதி நூல்கள் பல எழுதப்பட்டன. அந்த நீதி நூல்களில் ஔவையார் என்ற பெண்புலவர் எழுதிய ஆத்திசூடி நீதிநூல் முதன்மையானது. இது செய்யுள் வடிவத்தில் எழுதப்பட்டது. இந்தக் காலத்தில் கவிதை என்றும் பாட்டு என்றும் பெயர் சொல்லப்படுவது அந்தக்காலத்தில் செய்யுள் எனப் பட்டது.

ஆத்திசூடியில் 108 செய்யுள்கள் உண்டு. இவை சூத்திரம் என்ற ஒரு பாவகையைச் சேர்ந்தவை. மனனம் செய்வதற்கு ஏற்ற முறையில் சிறு சிறு அடிகள் கொண்டதாக அமைந்திருக்கும்.

இதனைச் செய்யாதே! இதனைச் செய்; என்று நேரடியாக அறி வூட்டும் வகையில் ஒவ்வொரு சூத்திரமும் அமைந்திருப்பதோடு நன்கு நினைவில் பதியும் வண்ணம் ஒரே வரியிலும் அகர வரிசையிலும் அமைந்துள்ளன. சொல்லப்படும் பொருள்கள் சிறுவர்களுக்கென எழுதியவை போலத் தோன்றும். ஏனெனில் படிக்கும் மாணவர்கள் சிறுவயதினர். அவர்கள் மனதில் நன்கு பதிய வைக்கவே இது எழுதப்பட்ட போதிலும் அவர்கள் பெரியவர்கள் ஆன பின்னரும் பயன்படும் வகையில் வாக்கியங்களைச் சிறுவயதிலேயே பதிய வைக்கும் முயற்சியாக இது அமைந்துள்ளது. ஆகையால் இதில் உள்ள அறிவுரைகள் சிறுவர் முதல் பெரியோர், முதியோர், ஏழையர், மன்னர், துறவியர் ஆகிய அனைவருக்கும் சொல்லப்பட்டுள்ளது.

**ஆத்திசூடிகள் - செய்யுளும் பொருளும்**

**01.அறம் செய விரும்பு**

அறம் என்பது தருமம், அதாவது பிறருக்கு உதவிசெய்தல்
பிறருக்கு உதவி செய்ய ஆசைப்படு.
ஏழைகளுக்கு உணவோ உடையோ அல்லது வேறு அவர்களுக்கு அவசியம் தேவைப்படும் விடயங்களில் உதவி செய்ய வேண்டும். இந்த உதவி பணமாகவோ பொருளாகவோ அன்றேல் சரீர உதவியாகவோ இருக்கலாம். உழைத்து வாழ முடியாத ஊனமுற்றவர்களுக்கு இயன்றளவு உதவி செய்யவேண்டும்.

**02.ஆறுவது சினம்**

சினம் என்பது கோபம். கோபத்தை நாம் அடக்கிக் கொள்ள வேண்டும்.
கோபம் நெருப்பைப் போன்றது, நெருப்பு தன்னிடம் சேரும் எந்தப் பொருளையும் சுட்டு எரித்து அழித்துவிடும். ஒருவரிடம் கோபப்படுவதால் பகையே ஏற்படும். பகை பல தீய விளைவுகளை ஏற்படுத்தும். ஆகையால் கோபம் ஏற்பட இடம் தரலாகாது. தவறி கோபம் ஏற்பட்டாலும் அதனைத் தணியச் செய்யவேண்டும். எவரிடம் கோபத்தைக் காட்டினோமோ அவருடன் விரைவில் சமா தானமாகப் போய் விட வேண்டும்.

(தொடரும்)

## எவரையும் ஏளனம் செய்யாதே!

மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்கும் தாமரை
புனிதமான இறைவனைப்
பூஜை செய்ய உதவுதே!

அழுக்கடைந்த சிப்பியில்
அழகு முத்தைக் காணலாம்
கழுத்தில் நல்ல மாலையாய்
கட்டி என்றும் மகிழலாம்

கன்னங்கரிய குயிலிடம்
காது குளிரும் கீதமே
இன்பம் இன்பம் என்று நாம்
இன்னும் கேட்கச் செய்யுதே

விசம் நிறைந்த பாம்பிடம்
விலையுயர்ந்த இரத்தினம்
அடடா அந்த இரத்தினம்
மனிதருக்குக் கிட்டுமோ

ஊசி போன்ற முள்ளிலே
உயர்ந்த ரோசா மலருதே
வீசும் நல்ல வாசனை
விரும்பிச் சூடச் செய்யுதே

மோசமான இடத்திலும்
மிகுந்த நல்ல பொருளுண்டு
யோசிக்காமல் எவரையும்
ஏளனம் நீ செய்யாதே!



**11ஆம் திகதியில் வெளியான குறுக்கெழுத்து விளையாட்டின் விடைகள்**

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01.வீராங்கனை | 01.வீதி விளக்கு |
| 04.விலங்குகள் | 02.கடுகு |
| 06.குலை | 03.நள்ளிரவு |
| 07.துணிவு | 05.கோது |

## இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், பெப். 13
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில்அல்ஹிஜிராஅணியை எதிர்த்து லயன்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

## நல்லூர் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 13
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கயிறிழுத்தல் போட்டியில் இருபால் பிரிவிலும் நல்லூர் பிரதேச செயலக அணி வெற்றிபெற்று சம்பியனானது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்களுக்கான கயிறிழுத்தல் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி மோதியது. இதில் நல்லூர் பிரதேச செயலக அணி 2:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.
பெண்களுக்கான இறுதிப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணி மோதியது. இதில் நல்லூர் பிரதேச செயலக அணி 2:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)



# மைக்கல் அணி சம்பியன் கரவெட்டி கபடித் தொடரில்

யாழ்ப்பாணம், பெப். 13
கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான கபடியில் ஆண்கள் பிரிவில் மாலுசந்தி மைக்கல் அணி சம்பியனானது.
வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று இறுதியாட்டம் நடைபெற்றது. மைக்கல் அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 26:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது மைக்கல் அணி. இரண்டாம் பாதியில் கரவெட்டி ஞானம்ஸ் அணி போராட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் முடிவில் மைக்கல் அணி 57:49 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-422-108)

## கிங்ஸ்ரார் இறுதியில்

யாழ்ப்பாணம், பெப். 13
கம்பர்மலை யங்கம்பன்ஸின் துடுப்பாட்டத் தொடரில் சங்கானை கிங்ஸ்ரார் அணி இறுதிக்குத் தகுதிபெற்றது.
யங்கம்பன்ஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை வீனஸ் அணியை எதிர்த்து கிங்ஸ்ரார் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வீனஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 7 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிரோஜன் 13 ஓட்டங்களையும், விமல் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.
57 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய கிங்ஸ்ரார் அணி 7 இலக்கு களை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக திலக்சன் 44 ஓட்டங்களைக் குவித்தார். (ம-108)



*விளையாட்டு மற்றும் உளநல மேம்பாட்டுவார இறுதி நாளான நேற்று, தென்மராட்சி பிரதேச அலுவலகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் நடைபெற்றது. டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அணியை வீழ்த்தி தென்மராட்சி பிரதேச செயலக அணி சம்பியனானது. (ம-9)*

## பெண்களிலும் மைக்கல் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 13
கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கபடியில் பெண்கள் பிரிவில் மாலுசந்தி மைக்கல் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று இறுதியாட்டம் நடைபெற்றது. மைக்கல் அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதியது. முதற் பாதியாட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய மாலுசந்தி மைக்கல் அணி 28:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. அந்த அணி தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தைத் தக்கவைத்து முடிவில் 59:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-422)





*நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. ஆண்களுக்கான 200 மீற்றர் தெரிவுப் போட்டியும் நடைபெற்றது. (ம-23)*

## யாழ். பல்கலையை தோற்கடித்தது திருநெல்வேலி கிரிக்கெட் கழகம்

யாழ்ப்பாணம், பெப். 13
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை 53 ஓட்டங்களால் வீழ்த்தியது திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி.
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் நடத்தும் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில், யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுரேந்திரன் 33 ஓட்டங்களையும், சிவராஜ் 24 ஓட்டங்களையும், கிருத்தீபன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜனந்தன் 4 இலக்குகளை வீழ்த்தினார்.
167 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக் கழக அணி 113 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் பிரவுகோபன் 3 இலக்குகளையும், யசிந்தன், விதுன், சிவராஜ் மூவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம-23)

## பருத்தித்துறை பிரதேச கால்பந்தாட்ட முடிவுகள்

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில், ஆண்கள் பிரிவில் திக்கம் இளைஞர், நக்கீரன், சென். சேவியர், பருத்தித்துறை ஐக்கிய அணிகள் அரையிறுதிக்கத் தகுதிபெற்றன.
அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்திலும் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்திலும் நேற்று காலிறுதிகள் நடைபெற்றன.
முதலாவது காலிறுதியில் கண்ணகி அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதியது. இதில் திக்கம் இளைஞர் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது. அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் நக்கீரன் அணியை எதிர்த்து உதய்தாரகை அணி மோதியது. இதில் நக்கீரன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது.
சென். சேவியர் அணி, கலைவாணி அணியை சமநிலை தவிர்ப்பு உதையில் வைத்து 3:2 என்ற கோல் கணக்கில் வென்றது. பொலிகண்டி பாரதி அணியை, சமநிலை தவிர்ப்பு உதையில் வைத்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 4:3 என்ற கோல் கணக்கில் வென்றது. (ம-422)

# உலகக்கிண்ணத் தோல்விக்காக நியூசிக்குப் பதிலடி கொடுப்போம்


## வில்லியர்ஸ் பகிரங்கம்

உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்திடம் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுப்போம் என்று வெளிப்படையாகத் கருத்துத் தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் தலைவர் வில்லியர்ஸ்.

தென்னாபிரிக்கா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஓர் ரி-20 ஆட்டம், ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர், மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் என்பன நியூசிலாந்தில் விரைவில் நடைபெறவுள்ளன. முதலாவதாக எதிர்வரும் 17 ஆம் திகதி ரி-20 ஆட்டம் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே வில்லியர்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் இருக்கும் அணி, எந்தவொரு நேரத்திலும், எல்லா நாட்டிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று மக்கள் எதிர்பார்ப்பார்கள். தற்போது தென்னாபிரிக்க அணி அந்த நெறிமுறையின்படி சென்று கொண்டிருக்கிறது. நியூசிலாந்துத் தொடரில் எங்களுக்கு அதிக அளவில் நெருக்கடி இருக்கும் என்று நினைக்கிறேன். இது எங்களுக்கு மேலும் உறுதியை கொடுக்கும்.

2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரின் பின்னர் நியூசிலாந்துடன் எங்களுக்கு முடிக்கப்படாத சில விடயங்கள் உள்ளன. தற்போது சிறப்பாக விளையாடும் அதே ஆட்டத்தை அங்கே நாங்கள் விளையாட வேண்டியது அவசியம். உலகக்கிண்ணத் தொடரின் தோல்விக்கு பதிலடி கொடுப்போம். கொடுப்பது அவசியம் என வில்லியர்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)





# சதம் விளாசினார் ரகிம் ஆட்டத்தில் திரில் நிலை

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தை சமநிலையில் முடிப்பதற்காக பங்களாதேஷ் அணி பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 687-6 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக கோக்லி 204 ஓட்டங்களையும், முரளி விஜய் 108 ஓட்டங்களையும், சகா 106 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தயுல் இஸ்லாம் 3 இலக்குகளையும், மிராஸ் 2 இலக்குகளையும், தஸ்கின் அகமட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் மூன்றாம் நாள் முடிவில் 322-6 என்றிருந்தது. ரகிம் 81 ஓட்டங்களுடனும், மிராஸ் 51 ஓட்டங்களுடனும் ஆட்டத்தின் நான்காவது நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் பெற விடாமல் மிராஸை போல்ட் செய்தார் புவனேஸ்வர்குமார். எனினும் மறுமுனையில் சதம் கடந்தார் ரகிம். அவர் 127 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 388 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது பங்களாதேஷ்.

பந்துவீச்சில் யாதவ் 3 இலக்குகளையும், அஸ்வின், ஜடேயா இருவரும் தலா 2 இலக்குகளையும், புவனேஸ்வர்குமார், இசாந் சர்மா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

299 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி 159-4 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதனால் பங்களாதேஷுக்கு இலக்காக 459 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. நாள் முடிவில் அந்த அணி 103-3 என்றுள்ளது. முகமதுல்லா 9 ஓட்டங்களுடனும் சகிப் அல் ஹசன் 21 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இறுதிநாளான இன்று பங்களாதேஷின் வெற்றிக்கு 356 ஓட்டங்களும், இந்தியாவின் வெற்றிக்கு 7 இலக்குகளும் தேவைப்படுகின்றன. (ம)

# ரகிம் 3,000

பங்களாதேஷ் அணித் தலைவர் ரகிம். டெஸ்ட் ஆட்டங்களில் 3 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டினார்.

இந்தியா-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் டெஸ்ட் ஆட்டத்தில் சதம் கடந்தார் ரகிம். அவர் 78 ஓட்டங்களை எடுத்திருந்த போது டெஸ்ட் ஆட்டங்களில் 3 ஆயிரம் ஓட்டங்களைத் தொட்டார். இதன்மூலம் 3 ஆயிரம் ஓட்டங்களைத் தொட்ட நான்காவது பங்களாதேஷ் வீரர் என்ற அடைவை அவர் நிலைநாட்டினார். 95 இன்னிங்ஸில் அவர் இந்த மைல்கல்லை எட்டினார்.

தமீம் இக்பால், சகிப் அல் ஹசன், ஹிபிபுல் பாசர் ஆகியோர் ஏற்கனவே இந்த அடைவை நிலைநாட்டியுள்ளனர். (ம)



# அஸ்வின் அசத்தல் சாதனை



குறைந்த டெஸ்ட் ஆட்டங்களில் விரைவாக 250 இலக்குகளை வீழ்த்தியவர் என்ற சாதனையை இந்திய அணியின் சுழல் வீரர் அஸ்வின் படைத்தார்.

இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய நான்காம் நாளில், சதம் விளாசி சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த பங்களாதேஷ் அணித்தலைவர் ரகிமை அஸ்வின் வீழ்த்தினார். இது அவரின் 250 ஆவது டெஸ்ட் இலக்காக அமைந்தது. இந்த மைல்கல்லை தனது 45 ஆவது டெஸ்ட்டில் அடைந்து சாதனை படைத்தார் அஸ்வின். இதற்கு முன்னர் ஆஸ்திரேலிய வீரர் லில்லி 48 ஆட்டங்களில் 250 இலக்குகளை வீழ்த்தியதே சாதனையாக இருந்தது. (ம)

## இந்தியா சம்பியன்

பார்வையற்றவர்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா சம்பியனானது.

இந்தியாவில் நடைபெற்று வந்த இந்தத் தொடரின் இறுதியாட்டம் பெங்களூரில் நேற்று நடைபெற்றது. இந்தியாவும் பாகிஸ்தானும் பலப்பரீட்சை நடத்தின. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 9 இலக்குகள் இழப்புக்கு 197 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 17.4 பந்துப்பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து இலக்கை அடைந்து சம்பியனானது. இதற்கு முன்னர் 2007ஆம் ஆண்டு மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சவினோவாவின் பதக்கம் பறிப்பு

ரஷ்ய வீராங்கனை மரியா சவினோவா ஊக்க மருந்து பயன்படுத்தினார் என்று பன்னாட்டு விளையாட்டுத் தீர்ப்பாயம் உறுதிப்படுத்தியது.

2012ஆம் ஆண்டு லண்டனில் நடை பெற்ற ஒலிம்பிக் தொடரில் ரஷ்ய வீராங்கனை சவினோவா தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பயன்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. தொடர் நடைபெற்ற வேளையில் அவரிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரிகளில் தடைசெய்யப்பட்ட மருந்து இருந்தமையை அடுத்து 2012 ஆம் ஆண்டு 800 மீற்றர் ஓட்டத்தில் அவர் வென்ற தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு எதிராக சவினோவா விளையாட்டுக்கான பன்னாட்டு தீர்ப்பாயத் தில் மேன்முறையீடு செய்தார். இதன் முடிவு நேற்று வெளியானது. சவினோவா ஊக்கமருந்து பயன்படுத்தியமை உறுதிப்படுத்தப்பட்டது. (ம)



புதிய பிரிவுகள் ஆரம்பம்
*MS Office *Web Design *Mobile Phone Repairing *Keyboard - Organ
*Engineering - USA *Auto Cad *Revit *Maya *3D Max *Multimedia - AICT
நீங்கள் விரும்பும் நேரத்தில் விரிவுரை, செய்முறை வகுப்புக்கள்.
பதிவுகளுக்கு : கல்வியங்காடு சந்தியில்
MCAI CAMPUS
75 952 0941/ 021 221 9464
www.mcai.edu.lk

# டிப்போர்டிவோ அணியை வென்றது பார்சிலோனா

ஐரோப்பிய கழகங்களுக்கு இடையி லான சம்பியன் லீக் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் டிப்போர்டிவோ அணியை தோற்கடித்தது பார்சிலோனா அணி.

ஆட்டத்தின் முதல் 30 நிமிடங்கள் வரை கோலெதுவும் பதிவாகவில்லை. 37 ஆவது நிமிடத்தில் சுவாரஸ் ஓர் கோலைப் பதிவு



செய்தார். 40 ஆவது நிமிடத்தில் நெய்மர் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் பார்சிலோனா 2:0 என்று முன்னிலை வகித்தது.

மெஸ்ஸி 59ஆவது நிமிடத்திலும் அலெக்சிஸ் 62ஆவது நிமிடத்திலும், ரேக்டிக் 65 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவு செய்ய பார்சிலோனா 5:0 என்று ஆதிக்கம் செலுத்தியது. 85ஆவது நிமிடத்தில் சுவாரஸ் பிறிதொரு கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 6:0 என்ற கோல் கணக்கில் வென்றது பார் சிலோனா.

(ம)

மீண்டும் மூன்றாவது தடவையாக
ஓர் அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு - மலேசியா

மலேசியாவிலுள்ள பிரபல்யமான ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு உற்பத்தி உதவியாளர்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

| JOB CATEGORY | QTY | SALARY (RM) |
|---|---|---|
| 01. உற்பத்தி உதவியாளர் (பெண்) | 20 | 1200+OT |
| 02. உற்பத்தி உதவியாளர் (ஆண்) | 80 | 1200+OT |

### நிபந்தனைகள்
- இலவச தங்குமிட வசதி மற்றும் மருத்துவ வசதி 3 வருடங்கள்
- வேலை நேரம் 08 மணித்தியாலங்கள். மேலதிகமாக வேலை செய்யும் நேரத்துக்கு 1.6 வீதமும் சனிக்கிழமை நாட்களில் இரண்டு மடங்கு கொடுப்பனவும் வழங்கப்படும்.
- வாரத்தில் இரண்டு நாட்கள் ஓய்வு / விடுப்பு வழங்கப்படும்.
- முன்னனுபவம் தேவையில்லை
- வயது எல்லை 18 - 35
- அரசாங்க பயண அனுமதிக்கட்டணம் ரூபா 50, 000
- வங்கிக்கடன் வசதி செய்து தரப்படும்.
- பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிவரம், புகைப்படம், கடவுச்சீட்டு, அடையாளஅட்டை ஆகியவற்றுடன் நேர்முகத்தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

இடம் - சுபாஸ் விருந்தினர் இல்லம், விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். ஆஸ்பத்திரி பின் வீதி)
காலம் - 18.02.2017 சனிக்கிழமை காலை 9 மணி
முன்பதிவுகளுக்கு : யாழ்ப்பாணம் - 077 972 9481, 076 718 3799
கொழும்பு - 011 5244446

Capital Recruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, 3rd Floor, Grand Pass, Colombo-14.
அரச அனுமதி இலக்கம் LL No : 2248

## IMMEDIATE VACANCY

IIS City Campus, Jaffna will entertain applications from suitably qualified persons for the following post.

**Department of Business and Management**
- Assistant Lecturer (Probationary)
  Subject Areas: - International Marketing / Accounting & finance.

**Eligibility Requirement**
- A Business Management related degree from a State / UGC Approved University or Higher Educational Institute.
- Demonstrated success in developing coursework, teaching efficiently, and mentoring & advising at undergraduate level.
- Competent in English with excellent communication skill.

Note: - Those with experience in teaching BTEC Pearson HND in Business Management will have an added advantage.

WALK IN INTERVIEW
Date: 24.02.2017 (Friday) Time: 2.00p.m. - 5.00p.m

**Candidates can directly walk in with;**
- Two copies of profile.
- Copies of relevant educational certificates.

An attracting remuneration package, a professional working environment and a supportive organisational culture for continuous academic development are on offer for the successful candidate.

Director Human Resource,
IIS City Campus,
200, Sivan Pannai Road, Jaffna.

TEL: 071-777-3555 / 021-222-8060 EMAIL: hr@iis.edu.lk

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம்



சங்கரத்தையைப் பிறப்பிடமா கவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம் 10.02.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2017) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## CITY MEDICAL CARE (Pvt) Ltd

### முக்கிய அறிவித்தல்

எங்கள் பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களே!

40 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் எங்களுடைய ஸ்தாபனத்துக்கு ஆதரவு வழங்கிய தங்களுக்கு நாம் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அறியத்தருவது யாதெனில் எங்கள் நிறுவனத்துக்கு கீழ்க்காணும் முகவரியைத் தவிர வேறு எவ்வித கிளையும் யாழ். மாவட்டத்தில் இல்லை. வேறு எவரினதும் தவறான உறுதி மொழிகள் எவற்றுக்கும் நாங்கள் பொறுப்பேற்க மாட்டோம் என்பதையும் தெரிவிக்கின்றோம்.

- நிர்வாகம் -

01) சிற்றி மெடிக்கல் கெயார் (பிறைவேற்) லிமிட்டெட்
CITY MEDICAL CARE (Pvt) Ltd
558 A - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(யாழ்.போதனா வைத்தியசாலை வைரவர் கோயில் முன்பாக)
021 221 7661

02) சிற்றி மெடிக்கல்ஸ்
CITY MEDICALS
487 - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(கொமர்ஷல் வங்கி அருகில்)
021 222 3880

## VACANCY

### CUSTOMER SERVICE MANAGER



**General Duties**

Reporting to the Manager, Customer Service, the Customer Service Specialist is responsible for ensuring all client inquiries are dealt with and processed on a timely basis and in accordance with the company's policy.

**Primary Duties**

Answering incoming calls on the customer service queue
- Identify and solve inquiries in a timely fashion
- Follow-up with client to confirm resolution customer satisfaction

Processing various requests received by phone
- Identify and process request in a timely fashion
- Confirmation of processed request to client in a timely fashion

Coaching new Customer Service Representatives
- Aid new Customer Service Representatives in Learning the department's policies and procedures through job shadowing.

Back up the Customer Service Administration team When requird
- Processing various requests received by fax, mail and email
- Complete special projects as assigned by Manager, Customer Service.

**Ideal Skills/Qualifications:**
- You have strong communication skills, both written and verbal
- Excellent telephone manner
- You have a proven customer service focus
- Ability to resolve problems with customers.

Please send your CV, before 15th of February 2017 to below E-mail
jaffnavacancy@gmail.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.